கல்கி




KALKI பிப்ரவரி 22, 1953 4 அணா

"எனக்குத் தெரியும்


லக்ஸ் டாய்லட் சோப் உங்கள் சருமத்தையும் எழிலோங்கச் செய்யுமென்று."

இவ்வாறு கூறுகிறுர்

வனஜா



வனஜா கூறுவதாவது:
" இந்த சுத்தமான,
வெண்மையான சோப்
என் சருமத்திற்கு அளிக்
கும் நறுமணத்தை நான்
மிகவும் விரும்புகிறேன்.
சோபைமிக்க சரும
அழகைப்பெற நான் செய்வது
போல் நீங்களும் செய்யுங்கள்.
உங்கள் சருமத்திற்கு லக்ஸ்
டாய்லட் சோப்பின் தினசரி
பாதுகாப்பை அளியுங்கள்."




லக்ஸ்
டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 371-X50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 12 | 1953 பிப்ரவரி 22 | நந்தன ஹு
இதழ் 30 | | மாசி 11உ.



ஏஜண்டுகள் : காஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோடு, ராயப்பேட்டை, மதராஸ். B. மல்பட்டரி செட்டியார் (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது), கோயமுத்தூர். சர்மயா ஸ்டோர்ஸ், மதுக்கர (G. I. P.)



சென்னை பாரகன், பிரபாத் & காமதேனு

தினசரி மூன்று காட்சிகள்

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார். | இதழ் 30

ஐம்பது வருஷ ஆதிக்கம் மறைந்தது

சில தினங்களுக்கு முன் எகிப்து தேசமக்கள் ஓர் அபூர்வமான திருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள்.

எகிப்தின் தலைநகரான கெய்ரோவின் தெருக்களில் லட்சக் கணக்கான ஜனங்கள் கூடித் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

அவர்களுடைய குதூகல ஆரவாரங்கள் கெய்ரோ நகர் முழுதும் எதிரொலித்ததாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின.

எகிப்தின் பிரதம மந்திரி ஜெனரல் முகமது நாஜிப் அதிகாரத்துக்கு வந்து ஆறு மாதங்கள் பூர்த்தியாகின்றன அல்லவா? அந்த வைபவத்தையே எகிப்திய மக்கள் நாலு நாட்கள் வரையில் கொண்டாடினார்கள்.

ஜெனரல் நாஜிப் எகிப்து சர்க்காரின் நிர்வாகத்தை ஏற்று ஒரு வருஷம் பூர்த்தியாகும் வரையில்கூட அவர்கள் காத்திருக்க விரும்பவில்லை! நாஜிப் ஆட்சியின் அரை ஆண்டு விழாவைக் கொண்டாட முற்பட்டு விட்டார்கள்!

அவ்வாறு கூடிய எகிப்தியர்கள் அந்த நாட்டில் உள்ள இருபத்திரண்டு அரசியல் கட்சிகளை ஜெனரல் நாஜிப் கலைத்ததைக் குறித்துத் தங்களுடைய திருப்தியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

எகிப்தில் ஜனநாயக சர்க்காரை நிலைநிறுத்துவதற்காக ஜெனரல் நாஜிப் மேற்கொண்டுள்ள சர்வாதிகாரத்தை ஆமோதித்தார்கள்.

எனவே, இவ்வாறு எகிப்து மக்களின் பேராதரவையும் அபிமானத்தையும் பெற்ற எகிப்தியத் தலைவரான நாஜிபிடம் பிரிட்டிஷ் சர்க்கார்கூடப் பணிந்து போவதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

சூடான் விஷயமாகப் பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் மூண்டிருந்த தகராறை ஜெனரல் நாஜிப் சுமுகமாகத் தீர்த்து வைத்ததற்காக சூடானில் உள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சர் ராபர்ட் ஹாவே நாஜிபை வெகுவாகப் பாராட்டியுள்ளார். ஜெனரல் நாஜிபின் அறிவு ஆற்றலையும் ராஜ தந்திரத்தையும் மிகவும் புகழ்ந்துள்ளார்.

சூடானில் பிரிட்டனின் ஆதிக்கம் நிலைபெற முடியாமல் தடுப்பதில் வெற்றி பெற்ற ஜெனரல் நாஜிபைப் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் வானளாவப் புகழ்வது ஆச்சரியமான விஷயம்தான்.

சமய சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு வளைந்து கொடுக்கும் பிரிட்டிஷாரின் சிறந்த ராஜதந்திரத்துக்கு இதுவும் ஒரு உதாரணம் அல்லவா?

* * * *

சென்ற ஐம்பத்து மூன்று ஆண்டுகளாகத் தன் ஆட்சியின் கீழ் இருந்த சூடானுக்குச் சுதந்திரம் கொடுக்கப் பிரிட்டன் சம்மதித்துவிட்டது. எனவே, ஆங்கிலோ-எகிப்திய சூடான் இனிமேல் சுதந்திர சூடானாக விளங்கும்.

அவ்விஷயமாகப் பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி சூடான் மக்கள் தங்களுடைய எதிர்கால விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

சூடான் மக்கள் பூரண சுயேச்சையுடன் விளங்குவதா? அல்லது அடுத்துள்ள எகிப்துடன் தொடர்பு கொண்ட ஆட்சியை அமைத்துக் கொள்வதா? இவ்விஷயத்தை இன்னும் மூன்று வருஷ காலத்துக்குள் அவர்கள் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

புதிதாக ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி சூடான் சரித்திரத்திலேயே முதல் தடவையாக அடுத்த மாதம் தேர்தல் நடந்து, பார்லிமெண்டு சபை ஏற்படும்.

மேற்படி பார்லிமெண்டில் உருவாகும் சட்டத்துக்கு இணங்க, சூடான் மக்களின் எதிர்கால அரசியலை வகுப்பதற்காக அரசியல் நிர்ணய சபைக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இவ்விதமாக அந்த நாட்டில் வாழும் சுமார் ஒரு கோடி மக்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை அடைந்துள்ளனர்.

* * *

மத்திய கேந்திரப் பிரதேசத்தில் சூடானும் சூயஸ் கால்வாயும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உயிர்நாடி என்பது பிரசித்தமான விஷயம்.

மத்திய கேந்திர நாடுகள் சுதந்திர உணர்ச்சி பெற்று விட்டதால் அங்கே தங்களுக்குள்ள ஆதிக்கத்தையும் உரிமைகளையும் இழப்பதற்குப் பிரிட்டிஷார் தயாராகி வருகிறார்கள்.

சென்ற மகா யுத்தத்தின்போது சூயஸ் கால்வாயும் எகிப்தும் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தன. அவ்விதம் இருந்திராவிடில் தென்னாப்பிரிக்காவில் நடந்த போரின் முடிவு வேறு விதம் ஆகியிருக்கலாம்; ஜெர்மன் தளபதி ரோம்மெலின் வரலாறு வேறுவிதமாக எழுதப் பட்டிருக்கலாம்.

சூயஸ் கால்வாய்ப் பிரதேசத்தில் பிரிட்டனுக்கு இருந்த பிடியைத் தகர்க்க முடியாததே, அந்தப் போர்முனையில் ஜெர்மனியின் தோல்விக்கு முக்கிய காரணம் ஆகும்.

எனவே, சூயஸ் கால்வாயில் யாருக்கு ஆதிக்கம் இருக்கிறதோ, அவர்கள் மத்திய கேந்திரப் பிரதேசத்துக்கே எஜமானர்களாக விளங்கலாம்.

இதுவரையில் பிரிட்டிஷார் அந்தப் பிரதேசத்தின் எஜமானர்களாகவே விளங்கி வந்தார்கள். ஆனால், இனிமேல் அந்த நிலைமை மாறிவிடக் கூடும்.

ஏனெனில், சூயஸ் பிரதேசத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் வைக்கப்பட்டிருப்பதைச் சுதந்திர எகிப்து கடுமையாக எதிர்க்கின்றது. எகிப்தின் ஆதரவும் ஒத்துழைப்புமின்றி, பிரிட்டன் சூயஸ் பிரதேசத்தைத் தங்களுடைய இராணுவ தளமாக உபயோகிப்பது முடியாத காரியம்.

எனவே, கால மாறுதலுக்கு இணங்க பிரிட்டிஷார் சூயஸ் கால்வாயில் தங்களுக்குள்ள உரிமைகளை இழப்பதற்குத் தயாராகி வருகிறார்கள்.

* * *

இந்தச் சம்பவத்திலிருந்து ஒரு முக்கிய விஷயம் தெளிவாகிறது.

எவ்வளவு பெரிய வல்லரசாயினும் குறிப்பிட்ட நாட்டின் ஆதரவும் ஒத்துழைப்புமின்றி அந்த நாட்டைச் சேர்ந்த எந்தப் பிரதேசத்திலும் உரிமை கொண்டாட முடியாது என்பதுதான்.

இந்த உண்மையைப் பிரிட்டன் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவைச் சேர்ந்த சில பிரதேசங்கள் தங்களுக்குச் சொந்தமானவை என்று உரிமை கொண்டாடும் பிரஞ்சு, போர்ச்சுகல் நாடுகள் அதை உணர்ந்து கொள்ளுமாயின், இந்தியாவுக்கும் அந்த இரு நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ள தகராறு தீருவதற்கு வழி ஏற்படும்.

"நாளை நாளை என்பீராகில்,...."

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பிரமுகர்களுக்குச் சுறுசுறுப்பு ஏற்பட்டிருக்கிறது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். மாகாண காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் தஞ்சாவூர் ஜில்லாவிலும் மாகாண காங்கிரஸ் ராஷ்டிரபதி ஸ்ரீ காமராஜ் தென் ஜில்லாக்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து பொதுஜனத் தொடர்பைத் தீவிரமாக ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

ஸ்ரீ காமராஜ் ஓரிடத்தில் பேசுகையில் வாஞ்சுவின் அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். "வாஞ்சு அறிக்கையைப் பற்றி இப்போது ஹேஷ்யந்தான் வெளியாகியிருக்கிறது. அந்த அறிக்கை மட்டும் வெளியாகட்டும். அதில் உண்மையிலேயே ஹேஷ்யப்படி சிபார்சுகள் இருந்து விட்டால் இந்த உலகம் என்றும் கண்டறியாத அப்பேர்ப்பட்ட கிளர்ச்சியை நடத்துவோம்" என்று சொல்லியிருக்கிறார்.

தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பது என்பது இதுதான் என்று கூற வேண்டும்.

நீதிபதி வாஞ்சுவின் அறிக்கை வெளியாகும் போது நேரு சர்க்காரின் முடிவுகளுடன்கூடத்தான் அது வெளியாகும். வாஞ்சு அறிக்கையையொட்டி நேரு சர்க்காரின் முடிவுகள் இருந்து விட்டால், அப்புறம் தமிழர்கள் செய்யும் கிளர்ச்சி எல்லாம் நேரு சர்க்காரை எதிர்த்துச் செய்யும் கிளர்ச்சியாகவே இருக்க முடியும். இது மற்றக் கட்சியாருக்கு அநுகூலமாகவும் இருக்கும்; குதூகலத்தையும் அளிக்கும். ஆனால் காங்கிரஸ் வாதிகள் நேரு சர்க்காரை எதிர்த்துத் தீவிரக் கிளர்ச்சி செய்ய வேண்டியிருக்கும் நிலைமையை விரும்ப முடியாது. அதற்குப் பிறகு செய்யும் கிளர்ச்சிகள் அவ்வளவு பலன் அளிக்குமா என்பதும் சந்தேகந்தான்.

"நாளை நாளை என்பீராகில்
நமனுடைய முறை நாளாவது மறியீர்
நம்முடைய முறை நாளாவது மறியீர்!"

என்று கபில முனிவர் அருளினார். ஆதலின்,

"இன்றே செய்யவும் வேண்டும்—இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்!"

என்பதாகவும் அத்தமிழ் முனிவர் கூறிப் போந்தார். அவருடைய வாக்கு சென்னை நகர்க் கிளர்ச்சி விஷயத்தில் முற்றிலும் பொருந்தும்.

இதைச் சென்ற திங்கட்கிழமை சென்னைக் கடற்கரையில் கூடிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் திராவிடக் கழகத் தலைவர் ஸ்ரீ ஈ. வே. ராமசாமிப் பெரியார் நன்கு சுட்டிக் காட்டினார்.

"நீங்கள் காங்கிரஸ் வாதிகள்; காங்கிரஸின் கட்டு திட்டங்களுக்கு உட்பட்டவர்கள். நேரு சர்க்கார் ஒரு முடிவுக்கு வந்து வெளியிட்டு விட்டால் பிறகு அதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வது உங்களுக்குக் கஷ்டமாயிருக்கும். ஆகையால் ஏதாவது பிரயத்தனம் செய்கிறதாயிருந்தால் இப்போதே செய்யுங்கள்! நாங்களும் இந்த விஷயத்தில் உங்களுடன் பூரணமாய் ஒத்துழைக்கிறோம்" என்று மகத்தான கரகோஷங்களுக்கிடையே கூறினார். இது மிக்க முன் யோசனையுடன் கூறிய வார்த்தை என்பதில் ஐயமில்லை.

ஏற்கெனவே தமிழ் நாட்டுத் தலைவர்கள் சென்னை நகர் சம்பந்தமாகக் கொஞ்சம் அசமந்தமாக இருந்து விட்டார்கள் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

நீதிபதி வாஞ்சு வந்திருந்த சமயம் ஆந்திர நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் அபாரமாக நடந்தன. கல்லெறித் திருவிளையாடல்களும் நடைபெற்றன. அவரிடம் பேசியவர்கள்

எல்லாரும் சென்னை நகர் சம்பந்தமாகவே பேசினார்கள். இதனாலெல்லாம் வாஞ்சுவின் மூளை குழம்பிப் போயிருந்தால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரத்தான் செய்யும். "ஐயோ பாவம்! இவ்வளவு தாபந்தரியப் படுகிறார்களே! இந்த வருஷங்களுக்குக் கூவம் நதியின் தண்ணீரைக் கொண்டு தாபத்தைத் தணித்துக் கொள்ளட்டுமே!" என்று நீதிபதி வாஞ்சு பரிதாபப்பட்டுச் சிபார்சு செய்திருக்கக் கூடும்.

அவருடைய மனக் குழப்பத்தை மாற்றுவதற்குத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் அச்சமயம் ஒன்றும் செய்யவில்லை. சென்னையில் ஒரு பொதுக் கூட்டம்கூட நடத்தவில்லை. மேயரின் வீட்டில் மாஜி பட்டதாரிகள், மாஜி மேயர்கள், மாஜி திவான்கள், மாஜி மந்திரிகள் முதலியோர், — அந்தரங்கமாகக் கூடி ஒரு தீர்மானத்தைச் செய்து வெளியிட்டு விட்டார்கள்.

இந்த ஜனநாயக யுகத்தில் பிரமுகர்களின் வார்த்தைக்கு மட்டும் என்ன மதிப்பு இருக்கிறது! மாஜி ஸர் பட்டதாரிக்கும் ஒரே வோட்டுத்தான்; ஏழைப்பரதேசிக்கும் ஒரே வோட்டுத்தான்.

பொது ஜனங்களின் கிளர்ச்சிக்குத் தான் இந்த நாளில் மதிப்பு உண்டு; சக்தியும் உண்டு.

தமிழ்ப் பொது மக்களின் உணர்ச்சி சென்னை நகர சம்பந்தமாக எப்படியிருக்கிறது என்பதை நீதிபதி வாஞ்சுவுக்கு எடுத்துக் காட்ட எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை.

* * *

நாளது 1953-ம் வருஷம் "தமிழர்களுக்குச் சோதனை வருஷம்" என்பதையும், சென்னை நகரைக் காக்கும் விஷயத்தில் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டுமென்பதையும் ஆரம்ப முதல் நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

ஒருவரை யொருவர் குறை சொல்லிக் கொண்டிருப்பதற்கு இது சமயம் அன்று. எல்லாரும் ஒன்றுபட்டுப் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டிய தருணம்.

சென்ற திங்கட்கிழமை கடற்கரையில் கூடிய மாபெரும் கூட்டம் இந்த முறையில் நடந்திருப்பது ஓரளவு திருப்தி அளிக்கிறது.

ஆனால் அது மட்டும் போதாது.

சென்னை மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டும் என்று மேற்படி கடற்கரைக் கூட்டத்தில் யோசனை சொல்லப்பட்டது.


இந்தியக் குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத் சென்னைக்கு வந்து போன பின்னர், காலதாமதமின்றி ஹர்த்தால் முதலிய சாத்வீக முறைகள் எல்லாவற்றையும் கடைப்பிடித்துத் தமிழ் மக்கள் தங்கள் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

ஆனால் காந்தி மகானுடைய உபதேசங்களுக்குப் புறம்பான எந்த நடவடிக்கையையும் எந்த சந்தர்ப்பத்திலும் தமிழர்கள் கைக்கொள்ளக் கூடாது.

ஆந்திர சகோதரர்கள் எப்படியோ போகட்டும். இரத்த வெள்ளத்தைப் பற்றிப் பிதற்றிக் கொண்டிருக்கட்டும்.

தமிழர்கள் இந்த மிக நெருக்கடியான நிலைமையில், தங்களுடைய தர்ம நியாயமான உரிமைகளுக்காகப் போராடும் சமயத்தில், காந்திமகான் வகுத்த வழியிலிருந்து சிறிதும் பிறழவில்லை என்ற புகழை நிலை நாட்டிக் கொள்ள வேண்டும்.

அபார யோசனைகள் !



அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் கொரியா போருக்கு முடிவு காணும் வழிகளை ஆராய நிபுணர்களடங்கிய ஒரு மகாநாடு கூட்டத் தீர்மானித்திருக்கிறார்!



அத்தியாயம் 41

கரிகாலன் கொலை வெறி

ஆதித்த கரிகாலன் தான் வேட்டையாடச் சென்று வெகுகாலமாயிற்று என்றும், வில் வித்தையையே மறந்து போயிருக்கக் கூடும் என்றும் சொன்னான் அல்லவா? அன்று அவன் வீர நாராயண ஏரிக் கரைக் காட்டில் வேட்டையாடியதைப் பார்த்தவர்கள் அவ்விதம் எண்ணவில்லை. அவனுடைய வில்லிலிருந்து கிளம்பிய அம்புகளுக்கு அன்று எத்தனையோ காட்டு மிருகங்கள் இரையாயின. முயல்களும் மான்களும் கரடிகளும் சிறுத்தைகளும் செத்து விழுந்தன. விலங்கு எதுவும் கண்ணில் படாதபோது வானத்தில் பறந்த பறவைகள் மீது அவனுடைய அம்புகள் பாய்ந்தன. பருந்துகளும் இராஜாளிகளும் அலறிக் கொண்டு தரையில் விழுந்தன. கரிகாலனுடைய கொலை வெறி நேரமாக ஆக அதிகமாகிக் கொண்டிருந்தது. அவனுடன் சென்றவர்களுக்கு அதிக வேலை இருக்கவில்லை. குதிரைகளும் மனிதர்களும் கூட்டமாக இரைச்சலிட்டுக் கொண்டு சென்றதில் காட்டு மிருகங்கள் தத்தம் இடத்திலிருந்து கிளம்பிச் சிதறி ஓடின. மற்றவர்கள் வேட்டையில் செய்த உதவி அவ்வளவேதான். கரிகாலன் மீது பாய வந்த மிருகங்கள்மீது மற்றவர்கள் அம்பு விடுவதையும் வேலை எறிவதையும் கூடக் கரிகாலன் அனுமதிக்கவில்லை. கந்தமாறன் ஒரு தடவை அவ்வாறு கரிகாலன்மீது பாய்ந்து வந்த கரடியின் பேரில் அம்பு எய்தான். அப்போது கரிகாலன் அவன் பக்கம் திரும்பிப் பார்த்து, "கந்தமாறா! நீ கரடியைக் கொல்லப் பார்த்தாயா? என்னைக் கொல்ல முயன்றாயா?" என்று கேட்டான். கந்தமாறன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. பிறகு அவன் வில்லை வளைக்கவே இல்லை.

ஏறக்குறைய சூரியன் உச்சிவானத்தை அடைந்த சமயத்தில் எல்லாரும் களைத்துப் போனார்கள். சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு வீடு திரும்பலாமே என்ற யோசனை எல்லாருடைய மனத்திலும் தோன்றியது. ஆனால் கரிகாலனோ களைத்துப் போன குதிரையை மேலும் காட்டு வழிகளில் செலுத்திக்கொண்டுபோனான்.

காலை நேரத்திலெல்லாம் கந்தமாறன் கரிகாலனையொட்டிப் போய்க் கொண்டிருந்தான். "என்னைக் கொல்லப் பார்த்தாயா?" என்று கரிகாலன் அவனைக் கேட்ட பிறகு கந்தமாறன் பின்னால் தங்கிப் பார்த்திபேந்திரனுடன் சேர்ந்து கொண்டான். அவனிடம் இளவரசரின் முரட்டுத் தனமான நடத்தையையும்

பேச்சையையும் பற்றிக் குறை கூறத் தொடங்கினன். பார்த்திபேந்திரன் அதற்குச் சமாதானம் கூற முயன்றான்.

இந்தச் சமயம் பார்த்து வந்தியத் தேவன் கரிகாலனை அணுகினன். பிறகு அவர்கள் இருவருமே சேர்ந்து முன்னல் சென்று கொண்டிருந்தார்கள். வந்தியத் தேவன் வில்லும் அம்பும் எடுத்து வர வில்லை. அவனுக்கு வில்வித்தை அவ் வளவாகப் பழக்கமும் இல்லை. கையில் வேல் மட்டுந்தான் கொண்டு வந்திருந் தான். ஆகையால் கரிகாலனுடைய வேட்டையில் குறுக்கிடாமல் அவன் ஜாக்கிரதையாகச் சென்று வந்தான். ஏதாவது அபாயம் நேருவதாக இருந் தால் வேலை உபயோகிப்பதற்கு மட்டும் எச்சமயமும் ஆயத்தமாகப் போய்க் கொண்டிருந்தான். அதற்கு அவசியம் உச்சி நேரம் மட்டும் ஏற்படவில்லை.

கந்தமாறன் பார்த்திபேந்திரனிடம் "இன்றைக்கு இவ்வளவு வேட்டை ஆடி யது போதாதா? இன்று ஒரு நாளிலேயே இந்தக் காட்டிலுள்ள விலங்குகளை யெல்லாம் கொன்று தீர்த்து விடுவார் போலிருக்கிறதே? இவருடைய வேட்டை வெறி தணிவதற்குக் கொல்லிமலைக்குத் தான் போக வேண்டும். 'இன்றைக்குப் போதும்; வீடு திரும்பலாம்' என்று சொல்லுங்கள்!" என்று கூறினன்.

அதற்குப் பார்த்திபேந்திர பல்லவன், "தம்பி! இளவரசரின் உள்ளத்தில் ஏதோ கொந்தளித்துக் கொண்டிருக் கிறது. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை விட்டுக் கொடுத்து விடுவது என்றால் இலேசான காரியமா? அந்த ஆத்தி ரத்தையெல்லாம் வேட்டையில் காட்டு கிறர். அதுவரையில் நல்லதுதான். இல்லாவிடில் உன் மீதும் என் மீதும் காட்டுவார். அவராகச் சலிப்புற்றுப் 'போதும்' என்று சொல்லட்டும். நாம் தலையிட வேண்டாம்" என்றான்.

இந்தச் சமயத்தில் அந்த வனம் வனாந் தரமெல்லாம் நடுங்கும்படியான உறுமல் சத்தம் ஒன்று கேட்டது.

கந்தமாறன் முகத்தில் பீதியின் அறி குறி காணப்பட்டது. "ஐயோ! காட் டுப் பன்றி! இளவரசரை நிற்கச் சொல் லுங்கள்!" என்றான்.

"காட்டுப் பன்றிக்கு என்ன அவ்வ ளவு பயம்? புலி, கரடி யெல்லாம் இள வரசரிடம் பட்ட பாட்டில் பன்றி எந்த மூலை?" என்றான் பார்த்திபேந்திரன்.

"நீங்கள் தெரியாமல் சொல்லு கிறீர்கள். இந்தக் காடுகளில் உள்ள பன்றிகள் புலி கரடிகளைச் சின்னபின்ன மாக்கிவிடும்! யானையை முட்டிக் கீழே தள்ளிவிடும்! குதிரைகள் இலட்சியமே இல்லை. அம்பும் வேலும் காட்டுப் பன்றி யின் தோலிலே பட்டுத் தெறித்து விழுமே தவிர அதன் உடலுக்குள்ளே போகாது!...ஐயா! ஐயா! நில்லுங்கள்!" என்று கந்தமாறன் கூச்சலிட்டான்.

அதே சமயத்தில் காட்டுப் புதர்களிலே ஒரு சிறிய சுழற் காற்று அடிப்பது போன்ற அல்லோல கல்லோலம் ஏற்பட் டது. மறு நிமிடம் குட்டி யானைகளைப் போன்ற கரிய பெரிய உருவம் வாய்ந்த இரண்டு காட்டுப் பன்றிகள் வெளிப் பட்டன. அவை ஒரு கண நேரம் நின்று குதிரைகளையும் அவற்றின் மீது வந்தவர் களையும் உற்றுப் பார்த்தன.

கந்தமாறன் "ஜாக்கிரதை ஐயா! ஜாக்கிரதை!" என்று கூச்சலிட்டான்.

பின் தொடர்ந்து வந்த வேட்டைக் காரர்களில் சிலர் இதற்குள் அங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். அவர்கள் தாரை தப்பட்டைகளைப் பிராணன் போகிற அவசரத்துடன் முழக்கிக் கொண்டு "கா கூ" என்று கூச்சலிட்டார்கள்.

அந்தப் பன்றிகள் என்ன நினைத்துக் கொண்டனவோ, என்னமோ தெரிய வில்லை. ஒரு வேளை அவற்றின் குட்டி களை நினைத்துக் கொண்டிருக்கலாம். குட்டிகளுக்கு ஆபத்து வராமல் தடுக்க வேண்டுமென்ற உணர்ச்சியினால் தூண் டப்பட்டிருக்கலாம். அல்லது தாரை தப்பட்டைகளின் சத்தத்தைக் கேட்டு மிரண்டிருக்கலாம். பன்றிகள் இரண் டும் வெவ்வேறு திசையை நோக்கிப் பிய்த்துக்கொண்டு ஓடத் தொடங்கின.

கந்தமாறன் அதைப் பார்த்துவிட்டு, "கோமகனே! அவை போய்த் தொலை யட்டும். ஐந்தாறு வேட்டை நாய்கள் இல்லாமல் ஒரு காட்டுப் பன்றியைத் துரத்திக் கொல்ல முடியாது!" என்றான்.

கரிகாலன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வில்லை வளைத்து அம்பை விட்டான். அது ஒரு பன்றியின் முதுகில் போய்த் தைத்ததைப் பார்த்து விட்டு இளவரசன், "ஆஹா!" என்று உற்சாக கோஷம் செய்தான். அடுத்த கணத்தில் அந்தப் பன்றி உடம்பை ஒரு உலுக்கு உலுக்கியது. அம்பு தெறித்துக் கீழே விழுந்தது; பன்றி மேலே ஓடியது.

கந்தமாறன் அப்போது சிரித்த சிரிப் பில் ஏளனத்தின் தொனி தெரிந்தது. கரிகாலன் அவனைப்பார்த்து, "கந்தமாறா! எங்கே ஒரு பந்தயம்! நானும் வந்தியத்

தேவனும் அந்தப் பன்றியைத் தொடர்ந்து போய் அதைக் கொன்று எடுத்துக் கொண்டு வருகிறோம். நீயும் பார்த்திபேந்திரனும் இன்னொரு பன்றியைத் துரத்திப் போய்க் கொன்று எடுத்து வாருங்கள்! இந்தப் பன்றிகள் இரண்டையும் கொல்லாமல் அரண்மனைக்குத் திரும்பக் கூடாது!" என்று சொல்லிக் கொண்டே குதிரையைத் தட்டி விட்டான். வந்தியத்தேவனும் அவனுடன் சென்றான்.

அவர்கள் தொடர்ந்து சென்ற காட்டுப் பன்றி எந்தத் திசையில் எந்த வழியாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பது கொஞ்ச நேரம் வரையில் தெரிந்து கொண்டிருந்தது. ஏனெனில் பன்றி சென்ற வழியிலிருந்த செடி கொடிகளும் புதர்களும் அந்தப் பாடு பட்டிருந்தன. பின்னர் ஒரு சிறிய கால்வாய் குறுக்கிட்டது. அது காட்டில் பெய்யும் மழைத் தண்ணீரை ஏரியில் கொண்டுவந்து சேர்க்கும் கால்வாய். அவ்விடத்துக்கு வந்த பிறகு பன்றி எந்தப் பக்கம் போயிற்று என்று கண்டு பிடிக்க முடியவில்லை. கால்வாயைக் கடந்து அப்பாலுள்ள காட்டுக்குச் சென்றதா? கால்வாய் ஓரமாக இந்தப் பக்கமாகவோ, அந்தப் பக்கமாகவோ சென்றதா என்பதை அறிய முடியவில்லை.

அச்சமயம், கால்வாயின் வழியாகத் தெரிந்த ஏரியின் விசாலமான நீர்ப் பரப்பில் தெரிந்த ஒரு காட்சி அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது. படகு ஒன்று வந்து கொண்டிருந்தது. அதிலிருந்தவர்கள் பெண்மணிகள் என்றும் அறியக் கூடியதா யிருந்தது. ஆனால், அவர்கள் யார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. வந்தியத்தேவனும் கரிகாலனும் அச்சமயம் இருந்த இடத்தை நோக்கியே படகு வருவதாக முதலில் காணப்பட்டது. பிறகு திசை சற்றுத் திரும்பி, ஏரிக் கரையோரமாக இருந்த இன்னொரு தீவை நோக்கிச் சென்று படகு மறைந்து விட்டது.



"வல்லவரையா! படகில் வந்தவர்கள் யாரா யிருக்கும்? பெண்மணிகள் போலத் தோன்றினார்கள் அல்லவா?" என்றான் கரிகாலன்.

"பெண்கள் போலத்தான் தோன்றியது. அதற்கு மேல் எனக்கும் தெரியவில்லை" என்றான் வந்தியத்தேவன்.

"ஒரு வேளை சம்புவரையர் வீட்டுப் பெண்களா யிருக்குமோ?"

"இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அவர்கள் ஏன் இவ்வளவு தூரம் வர வேண்டும்?"

"ஆமாம்; அவர்களா யிருக்க முடியாதுதான்...காலையில் பழுவேட்டரையர் புறப்பட்டுப் போய் விட்டார் அல்லவா? நிச்சயந்தானே?"

"நிச்சயந்தான், ஐயா! அரண்மனை வாசல் திறப்பதையும் அவர் யானை மீது வெளியே போவதையும் நானே பார்த்தேன்."

"அவர் மட்டுந்தான் போனாரா?"

"ஆமாம்; கிழவர் மட்டுந்தான் போனார். இளைய ராணி போகவில்லை."

"அந்தக் கிழவரைப் போன்ற வீராதி வீரனை எங்கே பார்க்கப் போகிறோம்? என் பாட்டனார் மலையமானைக் கூடப் பழுவேட்டரையருக்கு அடுத்தபடி யாகத்தான் சொல்ல வேண்டும்......"

"ஐயா! அந்தக் கிழவர்களைப் பற்றியெல்லாம் பிறர் சொல்லித்தான் கேட்டிருக்கிறேன். தங்களுடைய வீரத்தைப் போர்க் களத்தில் நேரில் பார்த்திருக்கிறேன். கடம்பூர் அரண்மனையிலும் பார்த்தேன். கிழவர்கள், குமரர்கள் எல்லாரையும் எப்படி நடுநடுங்க அடித்துக் கொண்டிருந்தீர்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

"அது உண்மைதான். ஆனால் எதற்காக அவ்வளவு தடபுடல் செய்தேனோ, அந்தச் சந்தர்ப்பம் நெருங்கி வந்திருக்கும் போது எனக்கு உள்ளமும் உடலும் நடுங்குகின்றன. என்னைப் போன்ற பயங் கொள்ளிக் கோழையை இந்தச் சோழ நாட்டிலேயே காண முடியாது..."

"இளவரசே! இன்று காட்டில் வேட்டையாடியபோது அப்படித் தாங்கள் பயந்து நடுங்கியதாகத் தெரியவில்லையே? வன விலங்குகள், பட்சிகள், பின்னோடு வந்தவர்கள் எல்லாரையும் அல்லவா நடுநடுங்கச் செய்தீர்கள்?"

"இவை யெல்லாம் ஒரு தைரியத்தில் சேர்ந்ததா? கேவலம் ஒரு வேட்டை நாய் வேங்கைப் புலி மீது பாய்ந்து கொல்லுகிறது. காட்டுப் பன்றி மத யானையோடு சண்டைக்குப் போகிறது. வேட்டையாடும் தைரியம் ஒரு தைரியமா? வல்லவரையா! கேள்! நான் செய்த சூழ்ச்சி பலித்து விட்டது. பழுவேட்டரையர் நந்தினியைத் தனியாக விட்டுவிட்டுச் சென்று விட்டார். ஆயினும் அவளைத் தனிமையில் பார்த்துப் பேசுவதைப் பற்றி எண்ணினால் எனக்குப் பீதி உண்டாகிறது" என்றான் ஆதித்த கரிகாலன்.



"ஐயா! அதற்குக் காரணம் உண்டு. இத்தனை காலமும் பழுவூர் இளைய ராணியைப் பற்றி ஒருவிதமாக எண்ணியிருந்தீர்கள். இப்போது அவர் தங்கள் சகோதரி என்பதை அறிந்திருக்கிறீர்கள். அவரோ தங்கள் குலத்தையே அழித்துவிட விரும்பும் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களோடு சேர்ந்து கொண்டிருக்கிறார். இதையெல்லாம் அவரிடம் சொல்லுவது கஷ்டமான காரியந்தான். எனக்கே அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் என்னால் சொல்ல முடியவில்லையே?......"

"நண்பா! நீ அறிந்து வந்து கூறிய செய்தி ஒவ்வொன்றும் திடுக்கிடச் செய்வதாகவே இருக்கிறது. இன்னமும் என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் சிற்சில பழைய விஷயங்களை யோசித்துப் பார்த்தால், உண்மையாக இருக்கலாம் என்றும் தோன்றுகிறது. எனக்கும் அவளுக்குமிடையில் எப்போதும் ஒரு மாயத் திரை இருந்து வந்தது. பழையாறை பெரிய பிராட்டியார் — செம்பியன் மாதேவியார்—நந்தினியுடன் நான் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அந்த நாளில் வற்புறுத்திச் சொன்னார். ஆனால் உண்மை முழுதையும் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் இவ்வளவெல்லாம் நேர்ந்திராது......"

"செம்பியன் மாதேவிக்கு முழு உண்மையும் தெரிந்திராமலிருக்கலாம். யாரோ அநாதை ஊமை ஸ்திரீ பெற்றுப் போட்டு விட்டுப் போன பெண் என்று மட்டும் அறிந்திருக்கலாம். சுந்தர சோழரின் மகள் பழுவூர் இளைய ராணி என்பது ஒருவேளை தெரியாமலிருக்கலாம்."

அத்தியாயம் 42

"அவள் பெண் அல்ல!"

இளவரசன் கரிகாலன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். இளம் பிராயத்து நினைவுகள் அவன் உள்ளத்தில் அலை அலையாக மோதிக் கொண்டு தோன்றி, குமுறிக் கொந்தளித்து விட்டுப் பிறகு வேறு நினைவுகளுக்கு இடங் கொடுத்து விட்டு மறைந்தன.

அந்த நினைவு அலைகளைப் பலவந்தமாகத் தடுத்து நிறுத்தி ஒரு தீர்க்கமான மூச்சு விட்டு விட்டுக் கரிகாலன் கூறினான்:—

"போனதைப் பற்றி இப்போது பேச வேண்டாம். நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசலாம். அதற்காகவே உன்னைத் தனியாக அழைத்து வந்தேன். பந்தயத்தில் நாம் தோற்று விட்டோம். பன்றி போய் விட்டது. இனி என்ன செய்வது, எப்படிச் செல்வது என்று யோசித்து முடிவு செய்யலாம். வல்லவரையா! நந்தினியிடம் அவளுக்கும் எனக்கும் உள்ள உறவை எப்படிச் சொல்வதென்று நினைத்தாலே எனக்குப் பீதி உண்டாகிறது. அவள் முகத்தை நன்றாக நிமிர்ந்து பார்க்கக்கூட என்னால் முடியவில்லை. தப்பித்தவறிப் பார்க்கும் போதெல்லாம், வீர பாண்டியனுடைய உயிருக்காக அவள் மன்றாடியபோது எப்படி முகத்தை வைத்துக் கொண்டாளோ, அப்படியே வைத்துக் கொள்கிறாள். அவளுடைய பார்வை என் நெஞ்சை வாள் கொண்டு அறுப்பது போலிருக்கிறது. என் சகோதரி வீர பாண்டியன் மீது காதல் கொண்டு அவன் உயிருக்காக என்னிடம் மன்றாடினாள் என்பதை நினைத்தாலே என் நெஞ்சு உடைந்து விடும் போலிருக்



கிறது. வல்லவரையா! உன் கருத்து என்ன? இன்னமும் அவனுக்கு உண்மை தெரியாது என்று நினைக்கிறாய்? அவள் சுந்தரசோழரின் மகள் என்றும், எங்களுக்கெல்லாம் சகோதரி என்றும் அறிய மாட்டாள் என்று கருதுகிறாய்?"

"கோமகனே! இவையெல்லாம் தெரிந்திருந்தால், இன்னமும் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களுடன் சேர்ந்திருப்பாரா? சோழகுலத்துக்கு விரோதமாக ஒரு சிறு பிள்ளையைச் சிம்மாசனத்தில் அமர்த்திப் பாண்டிய நாட்டு மன்னனாகவும் சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தியாகவும் மணி மகுடம் சூட்டியிருப்பாரா? அந்த மணி மகுடத்தைத் தாங்கி நிற்பதாகக் கையில் கத்தி ஏந்திச் சபதம் செய்திருப்பாரா? இவையெல்லாம் திருப்புறம்பயம் பள்ளிப்படை மருகில் நள்ளிரவில் நடந்ததை நானே பார்த்தேன்......"

"இவ்வளவையும் பார்த்த உன்னை நந்தினி உயிரோடு விட்டு விட்டதை நினைத்தால் வியப்பாயிருக்கிறது."

"ஐயா! எனக்கு அதில் வியப்பு இல்லை. பெண் உள்ளத்தில் இயற்கையாகக் குடிகொண்டுள்ள இரக்கம் காரணமாயிருக்கலாம் அல்லவா?"

"வல்லவரையா! நீ உலகமறியாதவன். பெண் உள்ளத்தில் குடிகொண்டுள்ள வஞ்சமும் வஞ்சனையும் இத்தகையவை என்பது உனக்குத் தெரியாது. என்ன நோக்கத்துடன் உன்னை அவள் உயிரோடு விட்டாள் என்பதை நான் அறியேன். ஆனால் என்னை எதற்காக ஓலை அனுப்பி வரவழைத்தாள் என்பது என் அந்தரங்கத்துக்குத் தெரிந்திருக்கிறது."

"இளவரசே! அது என்ன காரணமாயிருக்கும்!"

"என்னைக் கொன்று வீர பாண்டியனுக்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காகத்தான் வரவழைத்திருக்கிறாள்......"

"ஐயா! அப்படி ஏதாவது விபரீதம் நேர்ந்துவிடப் போகிறதென்று எண்ணித்தான் இளையபிராட்டியும் முதன் மந்திரியும் என்னை அவசரமாக அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவர்கள் கடம்பூருக்குப் போக வேண்டாம் என்று சொன்னதைத் தாங்கள் கேட்கவில்லை......"

"வல்லவரையா! இளையபிராட்டியும் முதன் மந்திரியும் மிக மிக அறிவாளிகள்தான். ஆனால் விதியை அவர்களால் கூடத் தடுக்க முடியாது அல்லவா? அருள்மொழி வர்மனைப் பற்றிச் சோதிடர்கள் சொல்லியிருப்பதையெல்லாம் உண்மையாக்குவதற்காகவே விதி என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறதோ, என்னமோ, யார் கண்டது? வல்லவரையா! கந்தமாறன் என் பின்னாலிருந்து அம்பை விட்டானே? உண்மையில் அவன் கரடியைக் குறி பார்த்து விட்டானா? என்னைக் குறி பார்த்து விட்டானா? நீ கவனித்தாயா?"

"நான் கவனிக்கவில்லை, ஐயா! ஆனால் கந்தமாறன் அத்தகைய துரோகம் செய்யக் கூடியவன் என்று நான் ஒரு நாளும் ஒப்புக்கொள்ள மாட்டேன். வீட்டுக்கு வந்த விருந்தாளியை, அதிலும் சக்கரவர்த்தியின் குமாரனைப் பின்னாலிருந்து அம்பு எய்து கொல்லக் கூடியவனா கந்தமாறன்? அவனுடைய அறிவுக் கூர்மையைப் பற்றி எனக்கு அவ்வளவு உயர்ந்த அபிப்பிராயம் இல்லைதான். முதுகில் குத்தப்பட்டு உணர்வற்றுக் கிடந்தவனை நான் தூக்கிக் கொண்டு போய்க் காப்பாற்றினேன். கண் விழித்ததும் என்னைப் பார்த்த படியால் நான்தான் அவனைக் குத்தியதாக எண்ணிக் கொண்டான். அப்போது அவன் என்பேரில் கொண்ட பகைமை இன்னும் மாறவில்லை. ஆனால் அவனுடைய புத்தி கொஞ்சம் கட்டையாயிருந்தாலும் துரோக சிந்தையுள்ளவன் அல்ல!......"

"நண்ப! ஒரு அழகிய பெண்ணின் மோகனாஸ்திரத்துக்கு எவ்வளவு சக்தியுண்டு என்று உனக்குத் தெரியாது. எவ்வளவு நல்லவனையும் அது துரோகச் செயல் புரியச் செய்து விடும்......"

"ஐயா! பெண்களின் மோகன சக்தியைப் பற்றி நானும் சிறிது அறிந்துதானிருக்கிறேன். அதனால் நான் ஒரு நாளும் துரோகியாகி விடமாட்டேன்..."

"ஆகா! மணிமேகலை நல்ல பெண். உன்னைத் துரோகமான காரியம் செய்யும்படி ஏவ மாட்டாள்......"

"நான் மணிமேகலையைச் சொல்லவில்லை. பூரண சந்திரனைப் பார்த்த கண்

களுக்கு மின்மினி கவர்ச்சிகரமாகத் தோன்ற முடியுமா?"

"பூரண சந்திரன் என்று யாரைக் குறிப்பிடுகிறாய்?"

"இளவரசே! கோபிக்க வேண்டாம். பழையாறை இளைய பிராட்டியைத்தான் சொல்லுகிறேன்......"

"அடே! அதிகப் பிரசங்கி! உலகிலுள்ள மன்னாதி மன்னர்கள் எல்லாரும் குந்தவையின் கைப்பிடிக்கத் தவம் கிடக்கிறார்கள். அத்தகைய என் சகோதரியை நீ மனத்தினாலும் நினைக்கலாமா?"

"ஐயா! பூரண சந்திரனுடைய மோகனத்தையும் தண்ணொளியையும் பூலோக சக்கரவர்த்திகளும் பார்த்து அநுபவிக்கிறார்கள்; ஏழை எளியவர்களுந்தான் நிலவில் நின்று களிக்கிறார்கள். அவர்களை யார் தடுக்க முடியும்?"

"ஆமாம்; உன் பேரில் கோபித்துக் கொள்வதில் பயனில்லை. தெரிந்துதான் நான் உன்னை என் சகோதரியிடம் ஓலையுடன் அனுப்பினேன். நீயும் அவளுக்குத் திருப்தியாக நடந்து கொண்டாய். ஆனால் பார்த்திபேந்திரனிடம் மட்டும் இதையெல்லாம் சொல்லி விடாதே! அவன் சோழ குலத்துக்கு மருமகனாகித் தொண்டை நாட்டுக்கு மன்னனாக விளங்கலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறான்............"

"ஐயா! அவ்விதம் சில காலத்துக்கு முன்பு வரையில் இருந்திருக்கலாம். இப்போது கந்தமாறன், பார்த்திபேந்திரன் இருவரும் நந்தினி தேவி காலால் இட்ட வேலையைத் தலையினால் செய்யக் காத்திருக்கிறார்கள்......"

"அதை நான் கவனித்து வருகிறேன். ஆகையினால்தான் அவர்கள் விஷயத்தில் எனக்குப் பயமாயிருக்கிறது."

"எல்லாவற்றையும் உத்தேசிக்கும் போது, தாங்கள் இளைய ராணியைச் சீக்கிரம் சந்தித்து எல்லா உண்மைகளையும் சொல்லி விடுவது அவசியம் என்று தோன்றுகிறது."

"நண்பா! எனக்கு அவ்வளவு தைரியம் வரும் என்று தோன்றவில்லை. எனக்குப் பதிலாக நீயே அவளைச் சந்தித்துச் சொல்லி விட்டால் என்ன?"

"இளவரசே! நான் சொன்னால் இளைய ராணிக்கு நம்பிக்கை ஏற்படாது. ஒரு முறை நான் அவரை ஏமாற்றி விட்டுத் தப்பித்துக் கொண்டு சென்றிருக்கிறேன். ஆகையால் இதுவும் ஏதோ ஒரு சூழ்ச்சி என்று கருதக் கூடும்."

"ஆனால் நான் நந்தினியைத் தனியாகச் சந்திப்பது எப்படி? அவளோ அந்தப்புரத்தில் இருக்கிறாள்!"

"ஐயா! மணிமேகலையின் மூலம் அது சாத்தியமாகும். அதற்கு வேண்டிய ஏற்பாடு நான் செய்கிறேன்......"

"மணிமேகலையை நீ கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது. நல்ல காரியந்தான்! எது எப்படியானாலும் மணிமேகலையை உனக்குத் திருமணம் செய்து வைத்து விட்டேனானால், என் உள்ளம் ஓரளவு நிம்மதி அடையும்."

"ஐயா! மணிமேகலையை நான் என் உடன் பிறந்த சகோதரியாகக் கருதுகிறேன். அவளுக்கு இன்னும் பன்மடங்கு மேலான அதிர்ஷ்டம் கிட்டக் கூடும் என்று எதிர்பார்க்கிறேன்......"

"எதைப்பற்றிச் சொல்கிறாய்?"

"தெரியவில்லையா, இளவரசே! சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசரின் உள்ளத்தில் கன்னி மணிமேகலை இடம் பெற்றிருப்பதாக ஊகிக்கிறேன். சற்று முன் சம்புவரையர் குமாரியைப் பற்றி ஒரு மாதிரி பேசினேன். என் மனத்தைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காக அவ்விதம் சொன்னேன். இளைய பிராட்டி ஒருவரைத் தவிர இந்த உலகில் பிறந்த வேறு எந்தப் பெண்ணும் மணிமேகலைக்கு அறிவிலும் குணத்திலும் இணையாக மாட்டார்கள். தாங்கள் மட்டும் மணிமேகலையை மணந்து கொண்டால் நம்முடைய தொல்லைகள் எல்லாம் தீர்ந்து விடும். சம்புவரையரும் கந்தமாறனும் நம்முடன் சேர்ந்துவிடுவார்கள். பழுவேட்டரையர்கள் தனித்துப் போய் விடுவார்கள். இளையராணியின் சக்தியும் குன்றி விடும். மதுராந்தகத் தேவர் பின்னர் இராஜ்யம் என்ற பேச்சையே எடுக்க மாட்டார். சிற்றரசர்களின் சூழ்ச்சியையும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளின் சதியையும் ஒரேயடியாய் முறியடித்து வெற்றி காணலாம்......"

"எல்லாம் சரிதான், தம்பி! ஆனால் கடம்பூருக்கு நான் திருமணம் செய்து கொள்வதற்காக வரவில்லை. ஏதோ ஒரு



பெரிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று என் மனத்தில் தோன்றிக் கொண்டிருக்கிறது. நான் சொல்கிறேன், கேள்! பழுவேட்டரையர் மதுராந்தகனோடு திரும்பி வரும்போது ஒரு பெரிய படையுடன் வரப் போகிறார்......"

"ஐயா! அப்படியானால் நாமும் திருக்கோவலூர் அரசருக்குச் சொல்லி அனுப்பிப் படை திரட்டிக் கொண்டு வரச் செய்தால் என்ன? எதற்கும் முன் ஜாக்கிரதையுடன் இருப்பது நல்லதல்லவா?"

"நானும் அதைப் பற்றி யோசித்து வருகிறேன். ஒவ்வொரு சமயம் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? இந்தக் கடம்பூர் அரண்மனையைத் தரை மட்டமாக்கி, இங்கே சதியாலோசனை செய்தவர்கள் அத்தனை பேரையும் அரண்மனை வாசலில் கழுவிலேற்ற வேண்டுமென்று தோன்றுகிறது. என் தந்தையை முன்னிட்டுத்தான் கோபத்தை அடக்கிக்கொள்கிறேன். அவரை மட்டும் நீ காஞ்சிக்கு அழைத்து வந்திருந்தால்..?"

"இளவரசே! அவரிடம் தங்கள் ஓலையைச் சேர்ப்பிப்பதே பிரம்மப் பிரயத்தனமாகி விட்டதே!"

"ஆமாம்; சக்கரவர்த்தி இந்தப் பழுவேட்டரையர்களிடம் நன்றாய் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். என் பெற்றோர்களுக்கென்று காஞ்சிமாநகரில் நான் கட்டிய பொன் மாளிகையில் வௌவால்கள் சஞ்சரிக்கின்றன. நான் உயிரோடிருக்கும்போது அவர்களை அம்மாளிகையில் வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ, என்னமோ தெரியாது. இந்தக் கடம்பூரை விட்டு உயிரோடு போவேனோ என்று கூடச் சந்தேகமாயிருக்கிறது......"

"இளவரசே! தாங்கள் இவ்விதம் பேசப் பேச, மலையமானைப் படைகளுடன் வரச் சொல்வது மிக்க அவசியம் என்று தோன்றுகிறது......"

"அந்தக் காரியத்துக்கு உன்னையே அனுப்பலாமா என்று பார்க்கிறேன்..."

"ஐயா! மன்னிக்க வேணும்! தங்களை விட்டு ஒரு கணமும் பிரியவே கூடாது என்று தங்கள் தமக்கையார் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்......"

"அதை நீ இதுவரை நன்றாக நிறைவேற்றி வருகிறாய்."

"பார்த்திபேந்திர பல்லவர் இங்கே சும்மாத்தான் இருக்கிறார். பொழுது போகாமல் கஷ்டப்படுகிறார்......"

"ஆமாம்; பழுவூர் இளைய ராணியைப் பாராத ஒவ்வொரு கணமும் அவனுக்கு ஒவ்வொரு யுகமாக இருக்கிறது. பார்த்திபேந்திரன் பெண்ணழகுக்கு இவ்வளவு அடிமையாவான் என்று நான் கனவிலும் கருதவில்லை. அவனைத்தான் மலையமானிடம் அனுப்ப வேண்டும்."

"சரியான யோசனை, ஐயா!"

"அவன் இல்லாதபோது எனக்கு ஏதாவது அபாயம் நேரிட்டால் உதவிக்கு நீ இருக்கவே இருக்கிறாய்......"

"இளவரசே! யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும், தங்களுக்குத் தீங்கு செய்யத் துணிவுள்ளவன் இந்த உலகில் இருப்பதாக நான் கருதவில்லை. தாங்கள் இல்லாத போது தங்களைப் பற்றி ஏதேதோ பேசிய வீரக் கிழவர்கள், தங்களை நேரில் பார்த்ததும் கை கால் நடுங்கி வாய் குழறித் தடுமாறுவதை நேரில் பார்த்தேனே?"

"தம்பி! கையில் கத்தி எடுத்துப் போராடக் கூடிய எந்த ஆண் மகனுக்கும் நான் பயப்படவில்லை. பின்னிருந்து முதுகில் அம்பு விடக் கூடிய கந்தமாறன் போன்றவர்களுக்கும் நான் பயப்படவில்லை......"

"மறுபடி கந்தமாறனைப் பற்றி அப்படிச் சொல்கிறீர்களே......?"

"கேள், தம்பி! ஒரு பெண்ணின் நெஞ்சின் ஆழத்தில் உள்ள வஞ்சத்துக்குத்தான் அஞ்சுகிறேன். அவள் மனத்தில் என்ன வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்று எண்ணும் போதெல்லாம் என் உள்ளம் பதை பதைக்கிறது. அவள் என்னை மர்மமாகப் பார்க்கும் ஒவ்வொரு பார்வையும் என் நெஞ்சில் ஈட்டியைச் செலுத்துவது போலிருக்கிறது. அதைப் பற்றி எண்ணிய உடனே என் கை கால்கள் வெடவெடத்துப் போகின்றன."

"ஐயா! நந்தினி தேவியின் வஞ்சத்துக்குப் பயப்படவேண்டியதுதான் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். அவருடைய உள்ளத்தில் எவ்வளவு பயங்கரமான துவேஷம் குடி கொண்டிருக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். என்னை அவர் உயிரோடு போக விட்டதை நினைக்கும்போது சில சமயம் அதில் என்ன சூழ்ச்சி இருக்குமோ என்று பீதி கொள்கிறேன். ஆனால் இதெல்லாம் அவருக்கு உண்மை தெரியாமலிருக்கும் காரணத்தினால்தான் அல்லவா? அவருடைய சகோதரர் தாங்கள் என்பதைத் தெரிவித்து விட்டால் அதற்குப் பிறகு எந்தக் கவலையும் வேண்டியதில்லையல்லவா?"

"அப்படியா எண்ணுகிறாய்? வல்லவரையா! நீ கெட்டிக்காரன்தான். ஆனால் பெண்களின் இயல்பு அறியாத அப்பாவிப் பிள்ளை. நந்தினிக்குத் தான் சுந்தர சோழரின் குமாரி என்பது தெரிந்தால், எங்கள் எல்லாரிடமும் அவளுடைய குரோதம் ஒன்றுக்கு நூறு மடங்கு ஆகும். தஞ்சை சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக அவளுக்குப் பட்டம் சூட்டுவதாகச் சொன்னபோதிலும் அவளுடைய கோபம் தீராது......"

"இளவரசே! அப்படித் தாங்கள் கருதினால் அந்தப் பொறுப்பை என்னிடமே ஒப்புவியுங்கள். நானே நந்தினியிடம் உண்மை வரலாற்றைச் சொல்வேன். அவருடைய கோபத்தையும் தணிக்க முயல்வேன்......"

"உன்னாலும் அது முடியாது, நண்ப! நந்தினியின் கோபத்தை யாராலும் தடுக்க முடியாது. நான் சொல்வதைக் கேள்! எங்கள் சோழ குலத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், ஒன்று நான் சாக வேண்டும்; அல்லது அவள் சாக வேண்டும்; அல்லது இரண்டு பேரும் சாக வேண்டும். வீர பாண்டியனைக் கொன்ற வாளினால் அவளையும் கொன்று விடுகிறேன்......"

"இளவரசே! இது என்ன பயங்கரமான பேச்சு?"

"வல்லவரையா! ஒரு சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காக ஓர் உயிரைக் கொல்லுவது குற்றமா? அவள் பெண்ணாயிருந்தால் என்ன? என் உடன் பிறந்த சகோதரியாக இருந்தால்தான் என்ன? உண்மையில் அவள் பெண் அல்ல; பெண் உருக்கொண்ட மாய மோகினிப் பேய்! அவளை உயிரோடு விட்டிருந்தால் விஜயாலய சோழர் காலத்திலிருந்து பல்கிப் பெருகி வந்திருக்கும் இந்தச் சோழ சாம்ராஜ்யம் சின்னாபின்னமாகி விடும்!...... ஆகா! அது என்ன?" என்று ஆதித்த கரிகாலன் திகிலுடன் கேட்டு விட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அச்சமயம் அவர்கள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் காட்டுப் புதர்களுக்கு மத்தியில் ஏதோ அல்லோல கல்லோலம் நடந்து கொண்டிருந்தது. இருவரும் குதிரைகளைத் தட்டி விட்டு அருகில் சென்று பார்த்தார்கள். மிக அபூர்வமான காட்சி ஒன்று தென்பட்டது. காட்டுப் பன்றி ஒன்றும் சிறுத்தைப் புலி ஒன்றும் கொடூரமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

"ஆகா! நாம் தேடி வந்தவன் இங்கே இருக்கிறான்!" என்றான் கரிகாலன்.

"சிறுத்தை நமக்கு வேலை இல்லாமல் செய்து விடும் போலிருக்கிறது!" என்றான் வந்தியத்தேவன்.

"அப்படியா நினைக்கிறாய்? பார்த்துக் கொண்டே இரு!" என்றான் கரிகாலன்.

சிறுத்தைக்கும் பன்றிக்கும் நடந்த அகோரமான யுத்தத்தை இருவரும் சிறிது நேரம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறுத்தை பன்றியின் மீது பாய்ந்து அதை நகங்களினாலும் பற்களினாலும் தாக்க முயன்றது. ஆனால் காட்டுப் பன்றியின் கடினமான தோல் புலி நகத்திற்கும் பற்களுக்கும் சிறிதும் அசைந்து கொடுக்க வில்லை. ஆனால் பன்றி வேகமாக ஓடிவந்து சிறுத்தையை முட்டித் தள்ளித் தரையிலும் மரங்களிலும் வேர்களிலும் வைத்துத் தேய்த்தபோதெல்லாம் சிறுத்தை படாதபாடு பட்டது. பன்றியின் கோரைப் பற்கள் சிறுத்தையின் தோலைச் சின்னா பின்னமாகக் கிழித்தன. கடைசியாக ஒருமுறை சிறுத்தையைப் பன்றி கீழே முட்டித் தள்ளிய போது அது செத்தது போலக் கிடந்தது.

"தம்பி! சிறுத்தை செத்து விட்டது! பன்றி இனி நம்பேரில் திரும்பும்! அதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும்!" என்று கூறிக் கரிகாலர் வில்லில் அம்பைப் பூட்டி விட்டார்.

அம்பு பன்றியின் கழுத்தில் போய்த் தைத்தது. பன்றி கழுத்தை உதறிக் கொண்டே திரும்பிப் பார்த்தது. இரு குதிரைகளையும் அவற்றின் மீதிருந்தவர்களையும் ஒரு கணம் கவனித்தது. பிறகு ஒரு தடவை சிறுத்தையைப் பார்த்தது. அதனால் இனி ஒன்றும் ஆகாது என்று தெரிந்து கொண்டது போலும்! மூர்க்க ஆவேசத்துடன் குதிரைகளை நோக்கிப் பாய்ந்து வந்தது. கரிகாலன் இன்னொரு அம்பை வில்லில் பூட்டுவதற்கு முன்னால் அவன் ஏறியிருந்த குதிரையைத் தாக்கியது. தாக்குதலின் வேகத்தினால் சிறிது நகர்ந்த குதிரையின் பின்னங்கால் ஒரு மரத்தின் வேரில் அகப்பட்டுக் கொள்ளவே குதிரை தடுமாறிக் கீழே விழுந்தது. குதிரையின் அடியில் கரிகாலன் அகப்பட்டுக் கொண்டான்.

பன்றி சிறிது பின்னால் நகர்ந்து வந்து மறுபடியும் தரையில் கிடந்த குதிரையை நோக்கிப் பாய்ந்து சென்றது. (தொடரும்)

GREATEST ARTISTS

FINEST RECORDING

"HIS MASTER'S VOICE"

The Hallmark of Quality

புதிய வெளியீடு!

N. 95054
பழனி விஜயலக்ஷ்மி
கந்தன் என் முன்
பொற்பதம் காணுவேனோ
(இயற்றியவர்: குகன்)

N. 98014
J. M. லாரன் (பிடில்)
எவரோ எவரோ
எந்த காடு ப்ரமையோ

N. 98015
P. சந்தியம் (கிளாரினெட்)
பிலிசின பிதுவடாரா
கோதிபாவது பென்னென்

கிருஷ்ணா பிக்சர்ஸ்
"மருமகள்"
பாட்டுகள்
(சங்கீதம்: C. R. சுப்பராமன் & G. ராமநாதன்)

N. 65119
P. A. பெரியநாயகி & A. M. ராஜா
சின்ன சின்ன வீடு கட்டி
பேசாத மௌனம்

N. 65120
A. P. கோமளா &
P. G. கிருஷ்ணவேணி (ஜிக்கி)
சின்ன சின்ன வீடு கட்டி
P. A. பெரியநாயகி & A. M. ராஜா
நீ நான் என் சொந்தம்

ராதாகிருஷ்ணா பிலிம்ஸ்
"அந்தமான் கைதி"
பாட்டுகள்

N. 65118
V. S. சுந்தரி
வாழ்வின் ஜீவன்
அஞ்சு ரூபா நோட்டு

அவர் இந்தியா பிலிம்ஸ்
"என் வீடு"
பாட்டுகள்
(சங்கீதம்: V. நாகையா & A. ராமராவ்)

N. 65106
N. L. கானசரஸ்வதி & பார்டி
பொங்கலோ பொங்கல்
R. பாலசரஸ்வதி &
P. G. கிருஷ்ணவேணி (ஜிக்கி)
பூமியிலே ஒரு

N. 65107
N. லலிதா & N. L. கானசரஸ்வதி
கண் மணியே
கொஞ்சு மொழி

N. 65108
V. J. வர்மா
காலமாம்
N. L. கானசரஸ்வதி
என்னென்ன ஆசை

மாடர்ன் தியேட்டர்ஸ்
"வளையாபதி"
பாட்டுகள்
(சங்கீதம்: S. தக்ஷிணாமூர்த்தி)


N. 65112
K. ராணி & S. C. கிருஷ்ணன்
அல்லி அல்லி அல்லி
T. M. சௌந்தரராஜன்
நீதியின் ஜீவன்

N. 65113
A. L. ராகவன்
பள்ளிக்கூடம் பம் பம்
K. ராணி
எண்ணம் போலே

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட், கல்கத்தா, பம்பாய், மதராஸ், டில்லி

"HIS MASTER'S VOICE"

வெள்ளித்திரை



"மாமியார்" விஜயம்

மாமியார் என்ற பதத்துக்குப் பொருள் கூறும்போது, "மாமி, யார்?" என்று ஒரு கேள்வியைப் போட வேண்டும். அப்போது அந்தக் கேள்விக்கு "முன்னொரு சமயம் மருமகளா யிருந்தவள்" என்று பதில் கிடைக்கும். இந்த ஆராய்ச்சியின் பலனாக, மருமகள்தான் மாமியார் ஆகிறாள் என்கிற பேருண்மை புலப்படும். ஆகவே, "மாமியார்" என்ற பதம், வாழையடி வாழையாக, வழி வழி வந்த ஓர் அநாதியான தத்துவம் என்று கூறினால் மிகையாகாது.

உலகத்தில் மலைகளும் மரங்களும் மனிதர்களும் தோன்றின காலத்திலேயே மாமியாரும் தோன்றி விட்டாள். அந்த மாமியார் தோன்றின போதே மருமகளும் தோன்றி விட்டாள். கூடவே, மாமியார் இழைத்த கொடுமைகளும் தோன்றி விட்டன.

மாமியாரின் சர்வாதிகாரத்தைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை, வழியோடு போன பிச்சைக்காரனை அழைத்துக்கொண்டு வந்து "இந்த வீட்டில் நான் ஒருத்தி இருக்கும் போது என் மருமகள் 'பிச்சை இல்லை' என்று எப்படிச் சொல்லலாம்? இப்போது நான் 'பிச்சை இல்லை' என்கிறேன், போ!" என்று கூறிய மூதாட்டி, ஹிட்லருக்கும் ஸ்டாலினுக்கும் எத்தனையோ காலத்துக்கு முன்னால் தோன்றியவள் அல்லவா?


அப்படிப்பட்ட மாதுஸ்ரீ மாமியார் வெள்ளித் திரையில் விஜயம் செய்கிறார் என்றால், அவரைப் பார்க்க விருப்பம் உண்டாவது இயல்பேயாகும். அதுவும், சாதாரண மாமியாரா? கஜானாவின் "மாமியார்" அல்லவா? கஜானா படத் தயாரிப்பாளரின் மாமியாருக்கும் மற்ற சாதாரண மாமியார்களுக்கும் அஜகஜாந்தரமான வித்தியாச மிருக்கக்கூடும் என்றும் எதிர்பார்க்கலாம் அல்லவா?

ஆண்டாம் பாளையம் அசட்டு மிராசுதார், அவர் அருமை மனைவி காமாட்சி, அவர்களுடைய புதல்வர்கள் சங்கர், கோபால், இளம் விதவையான மகள் கருணா, கல்லூரி மாணவி உமா—அவள் மாமன் சண்முகம், அவன் மகன் பித்துக்குளி வெங்கடேசன்—இவர்கள் இந்த "மாமியார்" படத்தில் முக்கிய பாத்திரங்கள்.

கல்லூரி மாணவி உமா, சங்கரைக் காதலிக்கிறாள். பித்துக்குளி வெங்கடேசனை மணந்து கொள்ளும்படி அவள் மாமன் வற்புறுத்துகிறான். உமாவின் தாயார் இறக்கும் தறுவாயில் இதற்குச் சம்மதித்துக் கையெழுத்திட்டுத் தந்ததாக ஒரு பொய் உயிலையும் தயார் செய்கிறான். உமா இந்த மணத்துக்குச் சம்மதிக்கவில்லை. வீராங்கனையாக வெளியேறி, சங்கரிடம் சென்று தன் காதலைக் கூறி அவனைச் சம்மதிக்கச் செய்கிறாள். விவாகம் நடக்கிறது. சங்கரின் தம்பி கோபாலனின் மூலம் கிராமத்திலிருக்கும் அவன் பெற்றோர்களுக்கு இந்த விவாகச் செய்தி எட்டுகிறது. அவர்கள் ஓடோடியும் வந்து விவாகத்தை நிறுத்த முயல்கின்றனர்; சங்கரின் நண்பர்கள் குழாம் அவர்களைத் தடுக்கிறது. விவாகம் தடையின்றி முடிகிறது. சங்கரின் தாயார் காமாட்சி அம்மாளும் அக்காள் கருணாவும் தங்களுக்குள் ஒத்துப் பேசிக்கொண்டு இந்த விவாகத்துக்கு ஆதரவு காட்டுவதுபோல் நடித்து, அவர்களைக் கிராமத்துக்கு அழைத்துச் செல்கின்றனர்.

காமாட்சி மாமியாராகி விட்டாள்: கதையும் களை கட்டுகிறது! மாமியாரின் விசுவரூபத்தையும், எதற்கெடுத்தாலும் மருமகளிடம் குற்றம் காணும் கோர சுபாவத்தையும் மாமியாராக நடிக்கும் ஸ்ரீமதி பி. எஸ். சிவபாக்கியத்திடம் காண முடிகிறது.

உமாவாக நடிக்கும் ஸ்ரீமதி எஸ். வரலக்ஷ்மி சக்கைப்போடு போட்டிருக்கிறார். கல்லூரி மாணவியாக நடிக்கும்போது ஒரு களங்கமற்ற சுபாவம்; மாமனின் கொடுமையிலிருந்து தப்ப முயலும்போது ஒரு வீராங்கனையின் தோற்றம்: சங்கரிடம் தன் உள்ளத்தைத் திறந்து காட்டும்போது ஒரு கதியற்ற அபலையின் நிலை; நாத்தி கருணாவினால் அபாண்டப் பழி சுட்டப்பட்டு வீட்டிலிருந்து



வெளியேற்றப்படும் போது ஒரு சோக வடிவம்; மழைக்கு ஒதுங்கிய சமயம் அந்த வீட்டுக்குடையவனின் தூர்த்தச் செயலை எதிர்த்து அவன் அகக் கண்ணைத் திறந்து வைக்கும்போது ஒரு பரம தத்துவ ஞானி—இப்படி எல்லா இடங்களிலும் ஸ்ரீமதி வரலக்ஷ்மியின் நடிப்பு விளங்குகிறது.

சூறாவளிப் பேய்க் காற்றும் இடியும் மின்னலும் கடும் மழையும் இந்த "மாமியார்"ப் படத்தில் நன்றாய் நடித்திருக்கின்றன. அவைகளுக்கு இடையில் அகப்பட்டுத் தத்தளிக்கும் உமா (ஸ்ரீமதி எஸ். வரலக்ஷ்மி)வின் நடிப்பும் சோபிக்கிறது. அந்தக் கதியற்ற நிலையில், அவளுக்குக் குழந்தை பிறந்து, அழுது, நன்றாய் நடிக்கிறது.

கதாநாயகன் சங்கராக நடிக்கும் மனோஹர் தம் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். தாயாரும், தமக்கை சுகுணாவும் சேர்ந்து கொண்டு தன் மனைவி உமாவைப் பாடாய்ப் படுத்திவைக்கும் போது சங்கர் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிக்கும் தவிப்பை நன்கு காட்டுகிறார். வீட்டை விட்டு வேலைக்காகப் பட்டணம் வந்து படும் அல்லல்களையும் அநுபவித்து நடிக்கிறார்.

சங்கருக்கு வேலை கிடைத்ததும் கிராமத்துக்குப் போகிறான். உமாவின் மீது அபாண்டப் பழி சுமத்தப் பட்டு அவள் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட . சமாசாரத்தையறிகிறான். தன் குழந்தையை அழைத்துக் கொண்டு பட்டணம் வந்து சேருகிறான்.

ஆண்டாம்பாளையம் மிராசுதாரின் இரண்டாவது மகனை கோபாலுக்கு அவன் பெற்றோர் மிகவும் சிரமப்பட்டு மணம் முடித்து வைக்கின்றனர். அவர்களும் அதன் காரணமாகப் பிற்பாடு மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

சுசீலா என்னும் அந்த இரண்டாவது மருமகள், முதல் மருமகள் உமாவைப் போல் சாதுவா யில்லை. தன்னுடைய பிபந்தனைகளையெல்லாம் எழுதி அவர்களிடம் கையொப்பம் வாங்கிக் கொள்ளுகிறாள். கிராமத்துக்குச் சென்று அவர்களைப் பம்பரமாக ஆட்டிவைக்கிறாள். இந்தக் கொடுமை தாங்காது மாமியாரும் மாமனாரும் வெளியேறுகின்றனர்.

கோபாலும் அவன் மனைவி சுசீலாவும் பட்டணம் வந்த போது சங்கரைத் தற்செயலாகச் சந்திக்கின்றனர். தாய் தந்தையர் வீட்டை விட்டு வெளியேறிய செய்தியை அவர்கள் மூலம் அறிந்த சங்கர் அவர்களைக் கடிந்து கொள்கிறான். கோபாலும் அவன் மனைவியும் தாய் தந்தையர்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களிடம் மன்னிப்புக் கேட்கின்றனர்.

மருமகளைத் துன்புறுத்திய மாமியாரைத் தண்டித்த பின், மாமியாரைத் துன்புறுத்திய மருமகளையும் கண்டித்து இந்தப் படத்தில் நல்வழிப் படுத்த முனைந்திருக்கின்றனர்.

இப்படி இந்த நீண்ட கதையில் வரும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஒரு தொடர்பும் முடிவும் கற்பிக்க முயன்றிருப்பதினால் படம் நீளமாகச் செல்லுகிறது.

பித்துக்குளி வெங்கடேசனின் தற்கொலை முயற்சி, காதல் முயற்சி, பணத்தை 'அபேஸ்' பண்ணும் முயற்சி, உமாவின் வாழ்வில் பல முறை தோன்றி அவள் தலையில் கல்லைப் போடும் முயற்சி, படம் பார்ப்பவர்களைச் சிரிக்க வைக்கும் முயற்சி—இவை எல்லாமாகச் சேர்ந்து படத்தின் ஹாஸ்யப் பகுதிகளைப் பரிமளிக்கச் செய்கின்றன.

குளத்தங் கரையில் அவ்வப்போது நடக்கும் ஊர் வம்பிகள் மகாநாடு, "மாமியார்" கதையைப் புரிந்து கொண்டு ரஸிப்பதற்கு உறுதுணையா யிருக்கின்றது.

ஆண்டாம்பாளையம் அசட்டு மிராசுதார், மனைவியை எதிர்த்துப் பேசத் தைரியம் இல்லாமல், எல்லாவற்றுக்கும் "நல்லாச் சொன்னே, நல்லாச் சொன்னே!" என்று விசேஷ பாவத்தோடு அடிக்கடி நல்லாச் சொல்லி வருகிறார். 'ஆமாஞ்சாமி' வேஷத்தை உணர்ந்து நடித்து, தம் சாய்ந்த மூக்குக் கண்ணாடியின் மூலம் எல்லோரையும் பார்த்துக் குஷிப்படுத்தும் ஸ்ரீ பி. ஆர். பந்துலு மாமியாருக்கு ஏற்ற மாமனார்தான்!

மிராசுதாரின் இரண்டாவது மருமகள் தன் மாமியாருக்கும் மாமனாருக்கும் ஆங்கிலம் சொல்லி வைக்கும் காட்சியும், நாகரிகம் சொல்லித் தரும் விதரணையும் ரஸமாயிருக்கின்றன. கொடுமைப் படுத்திய மாமியார் கொடுமைப் படுத்தப் படுவதைப் பார்க்கும் போதுதான், படம் பார்க்கும் ரஸிகர்களின் உற்சாகம் கரை புரண்டு பெருகுகிறது.


வேலைக்காக வீட்டை விட்டு வெளியேறிய சங்கர், அடாத பழியால் வெளியேற்றப் பட்ட உமா, கள்ளக் காதலனுடன் யாரும் அறியாமல் வெளியேறிய சங்கரின் சகோதரி சுகுணா, மனங்கசந்து வெளியேறிய மாமியார் மாமனார் ஆகிய அனைவரும் கதை முடிவில் ஒன்று சேர்ந்து ஒரு காரில் ஏறிக்கொண்டு பட்டணத்திலிருந்து வெளியேறுகின்றனர்!

இந்த மகத்தான வெளியேற்று விழாவைப் பார்த்த பின்னர், படம் பார்ப்பவர்களும் நிம்மதியாகத் தியேட்டரை விட்டு வெளியேற முடிகிறது!

கஜானனுவின் "மாமியார்"—பல பாவங்களும் பலவித ரஸங்களும் ஒன்று சேர்ந்து பரிமளிக்கும் ஜனரஞ்சகமான படம்.

எங்கும்... எந்நேரமும்...

ப்ரூக் பாண்ட் தேயிலை



நித்தமும் வேகமே
வருதலால் புத்தம் புதியது

உறுதிமொழி என்ன செய்யும்?

கொழும்பு, பிப்ரவரி 13௳

இவ்வாரம் இந்திய வர்த்தகச் சங்கமும் வேறு சில சங்கங்களும் பிரதம மந்திரி ஸ்ரீ டட்லி சேனநாயகாவிடம் ஒரு தூது கோஷ்டியை அனுப்பி வைத்தன. இந்தியர்களுடைய கோரிக்கைகளைத் தூது கோஷ்டியின் சார்பாக இந்திய வர்த்தகச் சங்க உபதலைவர் ஸ்ரீ கே. ஜி. ராவ் பிரதமரிடம் எடுத்துக் கூறினார். இமிகிரேஷன் கண்ட்ரோலர் நடத்தும் யதேச்சாதிகாரத்தைப் பற்றியும் இமிகிரேஷன் சட்டத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் பாரதூரமான திருத்தங்களைப் பற்றியும் மூறையிட்டு சில வாக்குறுதிகளைப் பெற்றிருக்கிறார். இமிகிரேஷன் சட்டத்தின் 14 (3) (பி) ஷரத்தில் 1944-ம் வருடம் முதல் இலங்கையில் தொடர்ந்து வசிப்போருக்கு வாசபர்மிட் மறுக்கப்படலாகாது என்றிருக்கிறது. காலஞ்சென்ற பிரதமர் ஸ்ரீ டி. எஸ். சேனநாயகா இந்தியப் பிரதம மந்திரி நேருவுக்கு அளித்த உறுதிமொழியின்படியே இந்த ஷரத்து சட்டத்தில் புகுத்தப்பட்டது. புதிதாக இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் ஒரு திருத்தத்தில் தற்காலிக வாச பர்மிட்டின் ஆயுட்காலம் ஐந்து வருடங்களென்று வரையறுக்கப் பட்டுள்ளபடியினால், இந்தியர்கள் ஐந்து வருட காலத்துக்கு மட்டுமே இலங்கையிலிருக்க அனுமதிக்கப்படுவார்களென்று அஞ்சப்படுவதாயும் இது ஸ்ரீ டி. எஸ். சேனநாயகா கொடுத்த உறுதிமொழியைப் புறக்கணிப்பதாகுமென்றும் தூதுகோஷ்டியினர் முறையிட்டனர்.

இதற்குப் பிரதமர் பதிலளித்த பொழுது, திருத்த மசோதாவின் அர்த்தம் தற்காலிக வாச பர்மிட் ஒரு தடவையில் ஐந்து வருடங்களுக்கு மேல் கொடுக்கப்படாது என்பது தானே தவிர, இந்தியர்கள் ஆக மொத்தம் ஐந்து வருடங்களுக்கு மேல் இலங்கையிலிருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதல்ல என்றும், 1944-ம் வருடம் முதல் தொடர்ந்து இலங்கையில் வசித்து வருகின்றவர்கள் 14 (3) (பி) ஷரத்தின்படி திரும்பத் திரும்ப வாசபர்மிட்டைப் புதுப்பித்துக் கொண்டு விரும்பிய வரை இலங்கையில் நீடித்திருக்க அனுமதிக்கப் படுவார்கள் என்றும் உறுதி கூறினார். இந்த ஷரத்தின் கீழ் உரிமையோடு வாசபர்மிட் பெறுகின்றவர்களுக்கு அதைப் புதுப்பித்துக் கொடுக்க மறுக்கப்படுமோ என்று அஞ்சக் காரணமில்லையென்றும் பிரதமர் சொல்லியிருக்கிறார்.

கேட்பதற்கு இனிமையாகவும் நியாயமாகவுமிருக்கும் இந்த உறுதிமொழியை இமிகிரேஷன் கண்ட்ரோலர் அனுஷ்டானத்தில் பின்பற்றுவாரா! இதையே பலரும் சந்தேகிக்கிறார்கள். வாசபர்மிட் காலாவதியாகிய சுமார் 60,000 இந்தியர்கள் பர்மிட்டைப் புதுப்பிக்க முடியாமலும், அதன் விளைவாக அரிசி ரேஷன் புத்தகம் பெறவோ அல்லது இந்தியாவிலிருக்கும் குடும்பங்களுக்குப் பணம் அனுப்பவோ முடியாமல் தவியாய்த் தவிக்கிறார்கள். இந்திய அரசாங்க வட்டாரங்கள் எதிர்பார்ப்பதைப் போல அரை லட்சம் இந்தியர்களும் கூடிய சீக்கிரம் கூட்டம் கூட்டமாக இந்தியாவுக்குத் திரும்பி வருவதற்கு நேரிடும். இவர்கள் விஷயத்தில் இமிகிரேஷன் கண்ட்ரோலர் ஒரு விசித்திரமான, கொள்கையை அனுஷ்டித்து வருகிறார். 14 (3) (பி) ஷரத்தை மீறி வாச பர்மிட்டைப் புதுப்பித்துக் கொடுக்க முடியாதென்று பர்சையாகச் சொல்லி விடாமல், 1944-ம் வருடம் முதல் இலங்கையில் தொடர்ந்து வசித்ததை ருசுப்படுத்த அத்தாட்சி போதாதென்று மனுவைத் திருப்பித் திருப்பியனுப்பிக் கொண்டிருக்கிறார். இதற்கிடையில் வாச பர்மிட் காலாவதியாகியவர்களை வேலைக்கு வைத்திருப்பது குற்றமென்று சட்டத்துக்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு முதலாளிமார்களுக்குப் பூச்சாண்டி காட்டப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் பிரதம மந்திரி அளித்திருக்கும் உறுதிமொழிக்கு என்ன மதிப்பிருக்கப் போகிறது!

காலாவதியான வாசபர்மிட்டைப் புதுப்பிப்பதற்குள் அதற்குரியவர்களை முதலாளிமார்கள் சட்டத்துக்குப் பயந்து வேலை நீக்கம் செய்து விடுவார்கள். பிழைக்கவழியில்லாமலும், பர்மிட்டைப் புதுப்பிக்க வகையில்லாமலும் பெரும்பாலோர் இந்தியாவுக்குத் திரும்பி விடுவார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அரசாங்க இலட்சியம் இப்படியிருக்கையில் சட்டமும் உறுதிமொழிகளும் என்ன செய்ய முடியும்!

ஆள் தூக்கிச் சட்டம்

நினைத்த இந்தியர்களைக் கள்ளத் தோணிக்காரர்களென்று சந்தேகித்துக் கைது செய்வதும், கைது செய்தபின் குற்றத்தை ருசுப்படுத்தும் பொறுப்பு இல்லாமல் குற்றவாளியல்லவென்பதை நிரூபிக்கும் பொறுப்பை எதிரிகள் மீது சுமத்துவதும் சட்டத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் ஒரு பாரதூரமான திருத்தம். ஆனால் இதைப் பற்றி வர்த்தகச் சங்க தூதுகோஷ்டி பிரதமரிடம் ஏதும் கேட்கவில்லை. பிரதமரும் இதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கேட்காத விஷயத்துக்கு அவர் ஏன் சமாதானம் சொல்லப் போகிறார்!

ஆனால் இவ்வாரம் நடைபெற்ற அரசாங்கக் கட்சியின் வருடாந்திர மகாநாட்டில் இந்தியர் சம்பந்தமாகத் தங்களுடைய கொள்கையில் எவ்விதமான மாறுதலும் இருக்க மாட்டாதென்பதைப் பிரதம மந்திரி தெளிவாக அறிவித்துச் சமரசக் கதவை அழுத்திச் சாத்தி விட்டார். இதன் பின் அவரிடம் என்ன மனமாறுதலை எதிர்பார்க்க முடியும்!

மீண்டும் உரிமை பறிமுதல்

இதற்கிடையில் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் இந்தியர்களுக்கு இருக்கும் வோட்டுரிமையைப் பறிக்க முயற்சிகள் நடக்கின்றன. சென்ற வருட ஆரம்பத்தில் பார்லிமெண்டு தேர்தல்களிலே இந்தியர்களுக்கு வோட்டுரிமையை ஒரு விசேஷ உரிமையாக மதித்து அதைப் பறித்தார்கள். பார்லிமெண்ட் தேர்தலில் வோட்டுரிமையில்லாத பொழுது ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களிலும் வோட்டுரிமையிருக்க நியாயமில்லையென்று தீர்மானித்து இப்பொழுது ஸ்தல ஸ்தாபனத் தேர்தல் சட்டத்தைத் திருத்தவும் ஒரு மசோதா உருவாகி வருகிறது. அதோடுகூட இந்தியர்கள் இலங்கையிலே ஸ்தாவர சொத்துக்களை வாங்குவது தடை செய்யப்பட வேண்டுமென்றும், இதற்குச் சட்டமியற்ற வேண்டுமென்றும் சர்க்கார் பார்லிமெண்டரிக் கட்சிக் கூட்டத்தில் இவ்வாரம் வற்புறுத்தப்பட்டு, அந்த விஷயத்தை மந்திரி சபை ஆராயுமென்று பிரதமர் கூறியிருக்கிறார். ஆகவே கூடிய சீக்கிரம் இது சம்பந்தமாகவும் புதிய சட்டங்கள் முளைக்கலாம்.

— ரஜனி.

தமிழ்க் களஞ்சியம்

டி.கே.சி

21. பொய் சொல்வோமா நாங்கள்?

செஞ்சிக் கோட்டை, செஞ்சி மலை எல்லாம் தொண்டை நாட்டில் உள்ளன என்பது நமக்குத் தெரியும்.

செஞ்சி மலையைச் சேர்ந்த ஊர் ஒன்று கொற்றந்தை. கொற்றந்தையின் அரசன் தமிழை ஆதரித்த வள்ளலாய் இருந்தான். அவன் மீது பல பாடல்களைக் கவிஞர்கள் பாடி இருந்தார்கள். அவற்றுள் ஒரு நாடகக் கவி.

சோழ நாட்டில் இருந்து ஒரு அழகிய பெண் அரசனுக்கு நாயகியாய் வந்திருக்கிறாள். அவளிடத்தில் மிக்க காதல் கொண்டவனாய் உறவாடிக் கொண்டிருக்கிறான் அரசன். ஒரு சமயம் அவன் அயல் நாட்டுக்குப் போயிருந்தான். வருவதற்கு நாளாய் விட்டது.

நாயகி நாயகனைத் தினம் தினம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள். மழைக் காலம் வந்து விடும்போல் இருக்கிறது. மழைக் காலத்தில் நாயகி நாயகர்கள் எந்த விதத்திலும் பிரிந்திருக்கக் கூடாது என்பது ஐதிகம். ஐதிகம் ஒருபுறம் இருக்க மழைக் காலமானது பிரிந்திருக்க நேர்ந்த காதலர்களை ரொம்ப ரொம்பத் துன்புறுத்தி விடும்.

பிரிவாற்றாமையினால், நாயகி எவ்வளவோ துன்பத்துக்கு உள்ளாகிறாள். மேலெல்லாம் ஒரே வெப்பம். வெப்பம் தணியும்படி மலைச்சாரலிலுள்ள பூஞ் சோலையின் கீழே கட்டில் போட்டுப் படுக்க வைத்திருக்கிறார்கள் சேடியர்கள்.

நாயகி இப்படியும் அப்படியுமாகப் புரண்டு இல்லாத அவஸ்தைக் கெல்லாம் உள்ளாகிறாள். நுட்பமான அவளுடைய இடை ஒடிந்து போகுமோ என்று எண்ணத் தோன்றுகிறது பக்கத்தில் நின்றவர்களுக்கு.

கட்டிலைச் சுற்றிச் சேடியர்கள், செவிலியர்கள், தோழிகள் எல்லாரும் நின்று கொண்டு நாயகியின் நிலையைக் கண்டு ரொம்பரொம்பப் பரிதாபப்படுகிறார்கள்.

நேரம் சாயங்காலம். செஞ்சி மலை மேல் பல ஊர்கள். அந்த ஊர்களில் உள்ள பெண்கள் ஸ்நானம் செய்து விட்டுக் கூந்தலை அகில்ப் புகை போட்டு உலரவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி எழுந்த அகில்ப்புகை திரண்டு திரண்டு மேகம்போல் தோன்றுகிறது.

நாயகி பார்த்தாள். "சரி, சரி, மேகம் வந்து விட்டது. மழைக் காலம் வந்து விட்டது. இதோ மழைத் துளிதான் மேலே விழுகிறதே!" என்று கதறுகிறாள்.

சமாதானம் சொல்லுகிறார்கள் சேடியர் முதலானவர்: "ஏன் இப்படி எல்லாம் வேண்டாத அவஸ்தைக்கு உன்னை உள்ளாக்கிக் கொண்டிருக்கிறாய்? அதோ தெரிகிறதெல்லாம் மேகம் அல்ல, அகில் புகை தான். உன் மேல் விழுகிற துளி எல்லாம் பூவிலிருந்து விழும் பன்னீர்த் துளிதான். மழைத் துளி அல்ல. ஏதோ தெரியாமல் சொல்லுகிறோம் என்று எண்ணாதே."

நையும் படியேன்!
கொற்றந் தை
நம்கோன் செஞ்சி
வரைமீ தே,—



இக்கட்டுரையில் வரும் காட்சிகளைத்தான் இவ்விதழின் அட்டைப் பட ஓவியமாக நமது சித்திரக்காரர் தீட்டி யிருக்கிறார்.

ஐயம் பெறும்நுண்
இடைமட வாய்

அகிலின் தூபம்,
முகில்அன் று

பெய்யும் துளியோ
மழையன் று

பிரசத் துளியே ;
பிழையா து ;—

நாங்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்று உனக்குத் தெரிய வேண்டாமா?

நையும் படியேன் !
கொற்றந் தை

நம் கோன் செஞ்சி
வரைமீ தே,—

ஐயம் பெறும் நுண்
இடைமட வாய்

அகிலின் தூபம்,
முகில் அன் று

பெய்யும் துளியோ
மழையன் று

பிரசத் துளியே ;
பிழையா து :

வையம் பெறினும்
பொய்உரைக் க


மாட்டார் தொண்டை
நாட்டா ரே.

[நையும் படியேன் : ஏன் இப்படி நொந்து கொள்ளுகிறாய் ; கொற்றந்தை நம் கோன் செஞ்சி வரை மீதே : நம் கொற்றந்தை நகரின் அரசனது செஞ்சி மலை மேல் ; ஐயம் பெறும் நுண் இடைமடவாய் : உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கும்படி நுட்பமான இடை உள்ள பெண்ணே ; அகிலின் தூபம் முகில் அன்று : அகிலின் புகை தான் அதோ தெரிகிறது, மேகமல்ல ; பெய்யும் துளியே மழையன்று பிரசத்துளியே : மேலிருந்து விழும் துளிகள் மழையல்ல, புஷ்பங்களில் இருந்து கசிந்து விழுகிற பன்னீர்த் துளிதான் ; பிழையாது : இதில் பிசகில்லை ; எங்களுக்கு நன்றாய்த் தெரியும். மேலும் :

வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டார் : நீ சோழ நாட்டில் இருந்து வந்திருக்கிறாய், விஷயம் தெரியாது உனக்கு. உலகத்தையே கொடுத்தாலும் பொய் சொல்ல மாட்டார்கள் இங்குள்ள மக்கள் — அதாவது தொண்டை நாட்டார்களாகிய நாங்கள்தான்.]

அபூர்வமான நாடகப்பண்பும் தமிழின் இசைப் பண்பும் அமைந்த பாடல், பாடிக் கொண்டே இருக்க வேண்டியது தான். நாவுக்குச் சலிப்பு ஏற்படாது.

சைனுவின் சவால்!



கொரியா போரைக் கடைசி வரை நடத்திப் பார்த்து விடுவதாகச் சீனத் தலைவர் மாவோ துங் அமெரிக்காவுக்குச் சவால் விடுத்திருக்கிறார்.

ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு

எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களுக்கு குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.


ஆலோசனை நேரம்:

காலை 9 மணி முதல் 11 மணி வரை; மாலை 3 மணி முதல் 5 மணி வரை

இடம்	தேதி	விலாசம்:
கரூர்	23-2-53 (மாலை 3 முதல் 5 மணி வரை)	மெஸர்ஸ். செண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்
ஈரோடு	24-2-53 (காலை 9 முதல் 11 மணி வரை)	மெஸர்ஸ். ஸ்ரீ கிருஷ்ணா & கம்பெனி, ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்
சேலம்	25-2-53	மெஸர்ஸ். தி சேலம் மெடிகல் சப்ளைஸ் & பார்மஸி லிமிடெட்
திருப்பூர்	26-2-53	மெஸர்ஸ். ஆர். எஸ். வாசன் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ்
கோயமுத்தூர்	27-2-53	மெஸர்ஸ். ஈஸ்வர் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ், ராஜா தெரு
பாலக்காடு	28-2-53	மெஸர்ஸ். காதம் & கம்பெனி, கெமிஸ்ட்ஸ்
பொள்ளாச்சி	2-3-53 (காலை 9 முதல் 11 மணி வரை)	மெஸர்ஸ். எல். எஸ். மணி & கம்பெனி, கெமிஸ்ட்ஸ்
உடுமலைப்பேட்டை	3-3-53 (காலை 9 முதல் 11 மணி வரை)	மெஸர்ஸ். ராஜேந்திரா & கம்பெனி, கெமிஸ்ட்ஸ்
பழனி	4-3-53 (காலை 9 முதல் 11 மணி வரை)	மெஸர்ஸ். கே. பி. ஆர். முத்துகிருஷ்ணன் செட்டியார் & சன்ஸ், காமகிரி லக்ஷ்மி நிலையம்
திண்டுக்கல்	5-3-53 (காலை 9 முதல் 11 மணி வரை)	மெஸர்ஸ். சி. ஆறுமுகம் பிள்ளை & சன்ஸ், ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்
மதுரை	6, 7-3-53	மெஸர்ஸ். டி.என்.சி. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ், கெமிஸ்ட்ஸ், வடக்கு சித்திரை தெரு

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

சென்னை — திருச்சிராப்பள்ளி



5. ராணி பிறந்தாள்!

மகாராஜாவின் கனிந்த குரலைக் கேட்டதும் சுந்தரி தன் எண்ணம் நிச்சயம் வெற்றி பெற்று விட்டது என்று தீர்மானமாக நம்பினாள்.

“மகாராஜா! இந்த அபாக்கியவதிக்கு உடம்பில் நோய் ஏதும் இல்லை. ஆனால் உள்ளத்தில்தான் நோய் ஏற்பட்டு வதைத்து எடுக்கிறது!” என்று விம்மிக் கொண்டே கூறி, சுந்தரி கண்ணீரை மாலை மாலையாக வடித்தாள். வீரவர்மனின் மனம் அவள் கண்ணீரில் கரைந்தது.

“சுந்தரி, பூப்போன்ற உன் மனசை நோகும்படி செய்ய இந்த அரண்மனையில் எந்தப் பாதகன் துணிந்தான்? சொல்! அவனை உடனே......” என்று சொல்லுவதற்குள் சுந்தரி குறுக்கிட்டு, “மகாராஜா, என் மனசை வேதனைக்குள்ளாக்கும் தைரியம் இந்த அரண்மனையில் வேறு யாருக்கு வந்துவிடும்? உங்கள் அருமை மூத்த ராணி மல்லிகாதான் என் மனசைச் சதா வேதனைக் குள்ளாக்குகிறாள். ‘இந்த அரண்மனையில் உன் அதிகாரம் செல்லாது. உனக்கு முன்னால் மகாராஜாவின் கரம் பிடித்தவள் நான்; அவருடைய அன்புக்குப் பாத்திரமானவள். ஆகவே நீ என் விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்!’ என்று கூறி என்னைத் தூக்கி யெறிந்து பேசினாள். இனிமேல் இந்த அரண்மனையில் அவளும் நானும் சேர்ந்து வாழ்வதென்பது கொஞ்சங்கூட முடியாத காரியம். அவளை வெளியே அனுப்புங்கள்! இல்லை யென்றால்......நான் போகிறேன்! நீங்களும்...... மல்லிகாவும்......!” என்று மேலே பேச முடியாமல் கண்ணீர் பெருக்கினாள்.

அரசன் பதறிப் போனான். “சுந்தரி, என்ன வார்த்தை சொன்னாய்? நீ என்னை விட்டுப் போவதா? அது ஒரு நாளும் நடக்காது. மல்லிகாவை நாளைக்கே வெளியேற்றிவிடுகிறேன். நீ கவலைப்படாதே!” என்று இதயம் குழைந்து கூறினான்.

வெற்றி யடைந்த பெருமிதத்துடன் சுந்தரி வீரவர்மனைத் தன் அகன்ற விழிகளால் பார்த்தாள்.

சுந்தரியின் வஞ்சகப் பார்வையில் அரசன் வீரவர்மன் தன் அரசை மறந்தான். அரண்மனை ஆனந்த வாழ்வை மறந்தான்; இந்த உலகத்தை மறந்தான்; தன்னையே மறந்து விட்டான்.

வீரவர்மன் இளையராணி சுந்தரியிடம், மல்லிகாவை அரண்மனையை விட்டு அகற்றி விடுவதாகக் கூறினானே தவிர, அவனால் அந்தக் காரியத்தைச் சுலபமாகச் செய்ய முடியவில்லை. உத்தம குணங்களுக்கு இருப்பிடமானவளும் தன்னிடம் பேரன்பு கொண்டிருப்பவளுமான மல்லிகாவை எப்படி அவன் துரத்துவான்? மல்லிகாவின் மனம் புண்படும்படி இந்த விஷயத்தை அவளிடம் நேரில் சொல்ல விரும்பவில்லை அவன்.

அரசன் மல்லிகாவின் அரண்மனைக்குச் சென்று, அவளிடம் அன்பாகப் பல விஷயங்கள் பேசிக் கொண்டிருந்தான். கடைசியில் மெதுவாக அந்தச் சமாசாரத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

"மல்லிகா, எனக்கு இந்த நகரத்து எல்லையைத் தாண்டி வெகு தூரத்தில் காட்டுப் பிரதேசத்தில் ஒரு அழகிய மாளிகை இருக்கிறது, உனக்குத் தெரியுமா? அதில் சிலகாலம் உன்னோடு வசிக்கலாம் என்று விரும்புகிறேன். நகரத்து நாகரிக வாழ்க்கையும், அரண்மனையின் ஆடம்பரமும், பட்டண வாழ்க்கையின் படாடோபமும், கொஞ்ச நாளைக்கு இல்லாமல் இருந்தால் மனசுக்குத் திருப்தியாயிருக்கும் போல் இருக்கிறது! நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் அரசன்.

"மகாராஜா, தங்கள் விருப்பத்துக்கு மாறாக நான் என்றைக்காவது நடந்ததுண்டா? தங்கள், விருப்பம்தான் என் விருப்பமும்! எனக்கும் இந்த அரண்மனை வாழ்க்கை அலுப்பாகத் தான் இருக்கிறது. அமைதியான வனவாசம் எனக்கு ரொம்பவும் பிடிக்கும்!" என்றாள் சூது வாதறியாத மல்லிகா.

மறுநாளே அரசனின் உத்தரவுப்படி, மல்லிகாவை ஒரு அழகிய மூடு பல்லக்கில் ஏற்றி வன மாளிகைக்கு மந்திரி அனுப்பி வைத்தான்.

வன மாளிகையில் சகல சௌகரியங்களும் நிறைந்திருந்தன. வேலைக்காரர்கள் இருந்தனர்; தாதிகள் இருந்தனர்.

மல்லிகாவின் மனத் திருப்திக்காக, அவளை, ஏமாற்றுவதற்காக, அரசன் அந்த வனமாளிகையில் சிலகாலம் அவளோடு தங்கியிருந்தான். மல்லிகாவின் வாழ்நாளிலேயே அந்தச் சில நாட்கள் தான் மிகவும் இன்பமான நாட்கள் என்று கூறவேண்டும். அரசன் அவளிடம் கபடமாகப் பழகினாலும், மல்லிகா அவனைக் கொஞ்சங்கூடச் சந்தேகிக்கவில்லை. அவனிடம் மிகவும் அன்போடு இருந்தாள்.

இந்த அமைதியான வாழ்க்கையை அரசனால் திருப்தியாக அநுபவிக்க முடியவில்லை. அவன் மனசில் இளையராணி சுந்தரியின் நினைவே மிகுந்திருந்தது. ஆகவே, அவன் மறுபடியும் அரண்மனைக்குப் போய்ச் சேருவதிலேயே ஞாபகமாயிருந்தான்.

கடைசியில், மல்லிகாவினிடம் விடை பெற்றுக் கொண்டு அரசன் அரண்மனைக்குப் புறப்பட்டான். மல்லிகாவுக்கு அரசனை விட்டுப் பிரிவது மிகவும் கஷ்டமாயிருந்தது.

"மல்லிகா, நீ ஏன் கண்ணீர் விடுகிறாய்? நான் என்ன ஊரை விட்டே போய் விடுகிறேனா? அரசாங்கக் காரியங்களையெல்லாம் நான் இங்கேயே இருந்தால் எப்படிக் கவனிப்பது? நான் அடிக்கடி வந்து கொண்டிருப்பேன். நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். எனக்கு மனமகிழ்ச்சியோடு விடைகொடு!" என்று சொன்னான் அரசன்.

அரசனின் கள்ள எண்ணத்தை, வெள்ளை உள்ளம் படைத்த மல்லிகா அறியவில்லை. முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "மகாராஜா, என்னை மறந்து விடாதீர்கள். இந்த வன மாளிகையில் என்னை விட்டுவிட்டு, நீங்கள் அரண்மனைக்குச் சென்றதும் எத்தனையோ காரியங்கள் குறுக்கிடும். என்னை நினைப்பதற்குச் சந்தர்ப்பமே இருக்காது. பிரபு, என்னைக் கைவிட்டு விட மாட்டீர்களே! உங்களுக்கும் இளைய ராணி சுந்தரிக்கும் குறுக்கே நான் இடைஞ்சலாக இருப்பதாக நினைக்க மாட்டீர்களே! எனக்கென்னவோ திகிலாயிருக்கிறது!" என்று கூறி ராணி மல்லிகா கண்ணீர் பெருக்கினாள்.

அரசன் வீர வர்மன் பெருகி வழிந்த அவள் கண்ணீரைத் துடைத்தான். "அசடே, ராஜாதி ராஜனான வீரவர்மனின் மனைவியான நீ இப்படிக் கோழை மாதிரி கண்ணீர் விடலாமா? நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், அர்த்தம் இல்லாமல் என்னத்தையெல்லாமோ நினைத்து மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே!" என்று கூறி மல்லிகாவைத் தேற்றி விட்டுக் குதிரை மீது ஏறி வாயுவேகமாய்ப் பறந்து இரண்டு நாட்கள் பிரயாணம் செய்து அரண்மனை வந்து சேர்ந்தான்.

அரசன் போனதிலிருந்து வன மாளிகையில் இருள் சூழ்ந்தது. உண்மையாகவே மல்லிகா வனவாசம் செய்யலானாள். அரண்மனையிலிருந்து யாரும் வரவில்லை. அரசனைப் பற்றிய செய்தியே அவளுக்கு ஒன்றும் எட்டவில்லை. ஏவலாளர் மூலம் அரசனுக்குச் செய்தி அனுப்பினாள். அதற்கும் பதிலில்லை.

பாவம், மல்லிகா! அவளுக்கு உண்மை நிலைமை என்ன தெரியும்? இளைய ராணி சுந்தரி, மல்லிகாவினிடமிருந்து வரும் கடிதங்களையெல்லாம் பறிமுதல் செய்து அரசனிடம் அவைகள் கிடைக்காமலே இருக்கும்படி செய்து வந்தாள் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

மல்லிகா, தானாக அரண்மனைக்குப் புறப்பட்டுப் போய்விடலாமா என்று யோசித்தாள். அவள் தன் அருமைத் தோழியாக இருந்த சுதா என்பவளை இது சம்பந்தமாக யோசனை கேட்டபோது, அவள் மல்லிகாவுக்கு விஷயங்களையெல்லாம் தெளிவாக விளங்கும்படி கூறினாள்.

"மகாராணி, நீங்கள் அரண்மனைக்குப் போக முடியாது. அங்கே இளைய ராணியின் ஆட்சி நடக்கிறது. உங்களை நிரந்தரமாக அங்கே வர விடாமல் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே கொண்டு வந்து வைத்தது. இந்த இளைய ராணியின் சூழ்ச்சி எனக்கும் முதலில் தெரியவில்லை. அப்புறம் அங்கிருந்து வரும் ஆட்கள் மூலம் தெரிந்து கொண்டேன்!" என்றாள் ராணியின் தோழி சுதா.

மல்லிகாவுக்கு இப்போதுதான் தன் கணவன் வீரவர்மனின் சூழ்ச்சி தெரியவந்தது. உண்மையிலேயே அவள் மனதை இப்போது ஒரு திகில் பற்றிக் கொண்டது.

மல்லிகா வேதனைப்பட்டதற்குக் காரணம், அவள் பூரண கர்ப்பிணியாயிருந்ததுதான். தான் கர்ப்பமாயிருக்கும் செய்தி அறிந்தால் அரசன் பெரு மகிழ்ச்சியோடு தன்னை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போக ஓடோடியும் வருவான் என்று நினைத்தாள். அந்தச் சமாசாரம் அவனிடம் போனால்தானே அவன் வருவதற்கு? இளைய ராணி சுந்தரிதான் அந்தச் சமாசாரத்தை அரசன் காதில் எட்ட விடவில்லையே!

அரண்மனையில் அரசபோகத்தில் பிறக்க வேண்டிய குழந்தை, ராஜா வீர வர்மனின் புதல்வி, ராணி மல்லிகாவுக்கு அந்த வன மாளிகையில் ஒரு நாள் பிறந்தது. அது பெண் குழந்தை என்று அறிந்ததும் மல்லிகா அடைந்த மன வேதனையைச் சொல்லி முடியாது.

"அரசனால் கைவிடப்பட்ட எனக்கு இதிலும் ஒரு சோதனையா? பிறந்த குழந்தை பிள்ளையாய்ப் பிறக்கக் கூடாதா?" என்று வருந்தினாள் மல்லிகா. அவளுடைய அந்தரங்கத் தோழி சுதா ரொம்பவும் தேறுதல் கூறி அவளைச் சமாதானப் படுத்தினாள்; குழந்தை பிறந்த சந்தோஷச் செய்தியை அரசனுக்கு வேலையாட்கள் மூலம் அனுப்பினாள். இளைய ராணியின் இஷ்டப்படி நடந்து வந்த அரசனுக்கு இந்தச் செய்தியும் எட்டாதபடி அவள் மிகவும் சாமர்த்தியமாகப் பார்த்துக்கொண்டாள்.

மல்லிகாவின் குழந்தை அந்தப் பயங்கர வனப்பிரதேசத்தில் வளர்ந்து வந்தாள். இளைய ராணி சுந்தரி அரசனுக்குத் தெரியாமல் அவன் உத்தரவிட்டதுபோல் ஒரு பொய் உத்தரவு அனுப்பி, மல்லிகாவை அந்த வனமாளிகையிலிருந்து வெளியேற்றி விட்டாள். மல்லிகாவினிடம் விசுவாசமுள்ள சில வேலைக்காரர்களும், அந்தரங்கத் தோழி சுதாவும் அங்கிருந்து புறப்பட்டு, ஒரு குடிசை கட்டி அதில் மல்லிகாவையும் குழந்தையையும் பத்திரமாகப் பாதுகாத்து வந்தனர்.

மல்லிகா அந்தப் பச்சைக் குழந்தையின் களங்கமற்ற புன்சிரிப்பில் தன் வேதனையையெல்லாம் மறந்திருந்தாள். (தொடரும்)

கணிதப் புலி

ஒரு ஊரில் ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய அரண்மனையில் எப்பொழுதும் ஜோதிடர்களும், கணித நிபுணர்களும் 'ஜே, ஜே' என்று குழுமியிருப்பார்கள்.

கணித சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்ற ராமநாத சாஸ்திரி என்று ஒருவர் இருந்தார். அவருக்குச் சீனு என்ற புத்திசாலி மகன் இருந்தான்.

ஒரு நாள் ராமநாத சாஸ்திரி அரண்மனை சபைக்குப் போக வேண்டியிருந்ததால் சீக்கிரமாகப் புறப்பட்டார். அந்தச் சமயம் சீனு வந்தான். தகப்பனாரைப் பார்த்து, 'என் அப்பா! இன்று அரண்மனையில் என்ன விசேஷம்?' என்று கேட்டான். "கணிதப் புலி என்ற பட்டம் பெற்ற ஒருவர் வந்திருக்கிறார். அவருக்கும் அரண்மனையில் உள்ள கணித சாஸ்திரிகளுக்கும் போட்டி நடத்தப்போகிறார்கள்" என்று சொன்னார் அப்பா. சீனு தானும் வருவதாகச் சொல்லிப் புறப்பட்டான். புறப்படும்பொழுது கையில் ஏதோ ஒரு பொட்டலத்தையும் எடுத்துக் கொண்டு சென்றான்.

குறிப்பிட்ட நேரம் வந்ததும் கணிதப் புலியும் அரசனும் சபையில் வந்து அமர்ந்தனர். போட்டி ஆரம்பமாயிற்று. முதலில் ராமநாத சாஸ்திரிக்கும் கணிதப் புலிக்கும் போட்டி நடந்தது. அதில் கணிதப் புலி வெற்றி பெற்றார். இதைப் பார்த்த அரசனுக்குக் கோபம் வந்தது.

அந்தச் சமயம் சீனு எழுந்திருந்து, தானும் போட்டியில் கலந்து கொள்ள அனுமதி கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான். அரசன் சம்மதிக்கவே தான் கொண்டு வந்திருந்த பொட்டலத்தை அவிழ்த்து அதிலிருந்து ஒரு பிடி மண்ணை அள்ளி, கணிதப் புலியிடம் காண்பித்து, "இது எவ்வளவு மண்?" என்று கேட்டான். கணிதப் புலி அரசனைப் பார்த்து, "இது என்ன, விளையாடுமிடமா? இந்த உலகத்தில் யாராவது மண்ணை எண்ணியது உண்டா?" என்று கேட்டார்.

உடனே சீனு அரசனை வணங்கி, "மகாராஜா! நான் இதற்கு விடை சொன்னால் என்னுடைய தகப்பனாரிடம் தோல்வியடைந்து விட்டதாகச் சம்மதித்து, 'கணிதப் புலி' என்ற பட்டத்தையும் அவர் தம் பெயருக்கு முன்னாலிருந்து எடுத்துவிட வேண்டும். இதற்குச் சம்மதித்தால் நான் விடை சொல்லுகிறேன்" என்றான். கணிதப் புலி சம்மதித்தார்.

சீனு அரசனைப் பார்த்து "மகாராஜா! நான் மண்ணை வைத்துக் கொண்டு கையை மூடிக் கொண்டு 'இது எவ்வளவு மண்' என்று கேட்டேனே தவிர, 'எத்தனை மண்' என்று கேட்கவில்லை. ஆனால் நான் கேட்ட எவ்வளவு மண் என்பதற்கு விடை ஒரு பிடி மண் என்று பதில் சொல்லியிருக்கலாம் அல்லவா? ஆனால் அவர் விடை அளிக்கவில்லை. ஆகையால் அவர் தோல்வியடைந்தார்" என்று சொல்லி முடித்தான். இதைக் கேட்ட அரசனும் சபையில் உள்ளவர்களும் அளவுகடந்த ஆச்சரியமடைந்தனர். —கங்கு.


Design for living
It looks good, it feels good and it is good. Designed for comfort and beauty, the new Plymouth represents the finest value in Cars for its price. Spacious, attractive and smooth running, it brings you the car you need at a price you can afford.
Plymouth
THE PREMIER AUTOMOBILES LIMITED
FACTORY AGRA ROAD, KURLA. H. O. CONSTRUCTION HOUSE, BOMBAY.
SISTA'S PAL-129
Dealers : SOUTHERN MOTORS, Mount Road, Madras



வாழ்வின் விருப்பம்

கி.ரா.கோபாலன்

‘சாமி......!’

அவன் நடந்து கொண்டிருந்தான்.

‘சாமி...!’ இரண்டாவது குரல்.

அவன் ஏதோ கனவு உலகத்தில் நடப்பவன் போல்தான் நடந்து கொண்டிருந்தான்.

‘சாமி...!’ மூன்றாவது குரல்.

அப்பொழுதுதான் அவன் திரும்பிப் பார்த்தான். பூக்காரக் கிழவி தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்த வண்ணமே அவனை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டு நின்றாள். அவளது இடையில் ஒரு சிறு பூக்கூடை இருந்தது. ஒரு முழ நீளமுள்ள கதம்ப சரம் அவள் கையில் தொங்கிக் கொண்டிருந்தது. அவளைக் கண்டதும் அவன் திகைப்படைந்து அப்படியே நின்று விட்டான்.

"என்ன சாமி! இப்படி மறந்துட்டீங்க? கடை வீதிப் பக்கமே உங்களைக் காணுமே? வருசக் கணக்கா எங்கிட்டே பூ வாங்கிக்கிட்டிருந்தவங்க, இப்படி ஏன் ஏழு மாசமா அடியோடு மறந்து போயிட்டீங்களே? வேறு ஏதாவது புதுக்கிராக்கி பிடிச்சிருப்பீங்க!" என்றாள் கிழவி.

அந்தக் கிழவியின் வார்த்தைகளுக்கு உடனடியாக அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அவளிடம் சென்ற ஆறு, ஏழு மாதமாகப் பூ வாங்காத காரணத்தை அவ்வளவு எளிதாக அவன் சொல்லிவிட முடியாது. அவன் எங்கோ பார்த்துக் கொண்டே, "காரணமாய்த்தான் நான் இப்போதெல்லாம் பூ வாங்குவதில்லை!" என்றான். அப்பொழுது அவன் முகத்தில் தோய்ந்திருந்த துயரத்தை அந்தக் கிழவியின் ஒளி மங்கிய கண்கள் அறிந்து கொள்ளும் சக்தியற்றனவாய்த்தான் இருந்திருக்க வேண்டும்.

"ஏன் சாமி, பொய் சொல்லுறீங்க? என்னைவிட உங்களுக்கு வேறு யாராவது மலிவா பூக் கொடுப்பாங்க!" என்றாள் கிழவி மறுபடியும் சிரித்துக்கொண்டே.

"இல்லை" என்று சொல்லி விட்டு மேலும் எதுவும் சொல்ல முடியாதவனாய்த் தயங்கி நின்றான் சேதுராமன்.

"சரி! அது எப்படியாவது போவட்டும். நல்ல பூவு! புதுக் கதம்பம்! இரண்டு முழம் வாங்கிக்கிங்க! உங்க கையாலே காசு வாங்கி நெடுநாளாச்சு!" என்றாள் கிழவி கையிலிருந்த கதம்ப சரத்தை இரண்டு முழம் அளந்து நறுக்கிக் கொண்டே.

அவன் அப்பொழுது ஏதோ தர்ம சங்கடமான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டவன்போல் தடுமாறினான். கிழவி அதற்குள் இரண்டு முழம் கதம்பத்தை நறுக்கி இலையில் சுற்றி அவனிடம் நீட்டினாள். அவன் அதைத் தயக்கத்தோடு வாங்கிக் கொண்டு, பையிலிருந்து ஒரு இரண்டணா நாணயத்தை எடுத்து அவளிடம் நீட்டினான். கிழவியின் பொக்கை வாய்ச் சிரிப்பிலிருந்து அப்பொழுது அவள் மனத்தில் ஏற்பட்ட ஆனந்தம் புலனாயது.

"இப்போதான் வியாபாரம் செய்தமாதிரி இருக்கிறது. அந்தக் கையாலே நான் காசு வாங்காமே, எத்தனை வியாபாரம் செய்தாலும் அது வியாபாரம் செய்தமாதிரியே இல்லை, சாமி! என்னை இப்படி அடியோடு மறக்கலாமா, சாமி?" என்றாள் கிழவி.

அவன் அவனுக்கு எவ்விதமான பதிலும் சொல்லவில்லை. அந்தப் பூவை வாங்கிக் கொண்டு மெதுவாக நடந்தான்.

*　　　*　　　*

மனிதர்களுக்கு வாழ்க்கையில் எத்தனையோ பழக்கங்கள் உண்டு. ஒரு சில பழக்கங்கள் பிறவியோடு வந்தவைகளாக இருக்கலாம். ஆனால் அனேக பழக்கங்கள் வாழ்வின் இடையே வந்து புகுந்தவைகளாகத்தான் இருக்க வேண்டும். பிறருடைய பழக்கங்கள் சிலருடைய புத்திக்கு அர்த்த மற்றவைகளாகவோ, பைத்தியக்காரத்தனமானதாகவோ பட்டாலும் தனி மனிதனைப் பொறுத்த வரையில் அந்தப் பழக்கம் அவன் வாழ்வுக்கு அத்தியாவசிய மானதாகப் போய் விடுகிறது.

சேதுராமன் தினமும் இரண்டணாக் கொடுத்து அந்தக் கிழவியிடம் இரண்டு முழம் பூ வாங்கிக் கொண்டு போவது வழக்கம். இது இன்று நேற்று மாத்திரம் நடந்த கதையல்ல! அவன் கடந்த பத்து வருஷங்களுக்கு மேலாக நாள் தவறாமல் அந்தக் கிழவியிடம் பூ வாங்கிக் கொண்டிருந்தான். தினமும் சாயந்திர வேளையில் அந்தக் கிழவி கடைத் தெருவிலுள்ள அனுமார் கோயில் வாசலில் பூ விற்றுக் கொண்டிருப்பாள். அவன் தவறாமல் தினமும் வந்து அவளிடம் பூ வாங்கிக் கொண்டு போவான். நிச்சயம் அவன் வந்து இரண்டணா கொடுத்துப் பூ வாங்குவான் என்ற நம்பிக்கை அந்தக் கிழவிக்கு உண்டு. அவன் எதற்காகத் தினமும் பூ வாங்குகிறான் என்று அந்தக் கிழவிக்குத் தெரியாது. அது எதற்காக வேண்டுமானாலும் இருக்கலாம். பூவை வாங்கி யாரேனும் ஊக்குவார்களா? தினமும் சுவாமி படத்துக்குப் பூ வாங்கிப் போடக்கூடாதா? அல்லது தன் மனைவிக்குத்தான் ஒருவர் தினமும் அன்போடு பூ வாங்கிக் கொண்டுபோய்க் கொடுக்கக் கூடாதா? எப்படியோ? பூக்காரக் கிழவிக்கும் அவனுக்கும் ஏற்பட்ட வியாபாரத் தொடர்பு குறுகிய கால அளவுக்குட்பட்டதல்ல. பத்து வருஷங்களுக்கு மேலாகத் தினமும் தவறாமல் நடந்துகொண்டிருந்த வியாபாரத் தொடர்பாகி விட்டது.

பத்து வருடங்களாக நாள் தவறாமல் நடந்து வந்த வியாபாரம் திடீரென்று ஒரு நாள் நின்றுவிட்டால்......! 'இன்று அந்த ஐயா ஏனோ வரவில்லை. நாளைக்கு வருவாரு......' என்று ஒரு நாளைத் தள்ளினாள் கிழவி. மறு நாளும் அவன் வரவில்லை. 'ஏதேனும் காரியமாய் வெளியூருக்குப் போயிருப்பாரு!' கிழவி தன் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். ஒரு வாரம் ஓடியது! இரண்டு வாரமும் ஓடியது. கடந்த ஆறு மாதங்களாக அவள் அவனைப் பார்க்கவேயில்லை. இது கிழவிக்கு மிகவும் மனோ வியாகூலத்தையும் ஏக்கத்தையும் கொடுத்தது. எதைச் சொல்லித் தனக்குள் சமாதானம் செய்து கொள்வோமென்றாலும் முடியவில்லை. உண்மையாகவே அந்தக் கிழவிக்கு அவன் தினமும் வந்து பூ வியாபாரம் செய்யாதது, மற்றவர்களிடம் எத்தனை வியாபாரம் செய்தாலும் மன நிறைவே ஏற்படுவதில்லை. எத்தனையோ வியாபாரத்தில், இரண்டணா வியாபாரம் குறைந்து விட்டதனால் அவளுடைய வியாபாரமே க்ஷீணித்து விடுமா? ஆனால் அவன் ஒருவன் வந்து தினசரி அவளிடம் பூ வாங்காதது, அவளுக்கொரு பெரிய மனக் குறைதான். அவனை அவள் பார்க்கவேயில்லையாதலால் அவன் இறந்து விட்டானோ என்றுகூட நினைத்தது உண்டு. அவன் உயிரோடு இருந்தாலும் மறுபடியும் அவளிடம் வந்து இரண்டணா துட்டை நீட்டிப் பூ வாங்குவான் என்ற நம்பிக்கையையும் அவள் இழந்து விட்டாள். ஆனால் அவனை மாத்திரம் அவளால் மறக்க முடியவில்லை.

அன்று-ஆறு ஏழு மாதங்களுக்குப் பிறகு அவள் வீட்டிலிருந்து பூத் தொடுத்து எடுத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போகும் பொழுது அவனைச் சந்தித்து விட்டாள். நெடு நாட்களுக்குப் பிறகு அவனைக் கண்டதும் சுலபமாக விட்டுவிடுவாளா கிழவி? தட்ட மாட்டாமல் அவளிடம் இரண்டணாக் கொடுத்துப் பூவும் வாங்கிக் கொண்டான். இதனால் கிழவியின் மனத்தில் சந்தோஷமும் சாந்தியும் ஏற்பட்டது. ஆனால் அவன் மனதிற்குச் சந்தோஷமும் சாந்தியும் ஏற்பட்டதா?—என்பதுதான் கேள்வி!

கடந்த ஆறு ஏழு மாதங்களாக அவளிடம் பூ வாங்காதவன் அன்று ஏன் வாங்கினான்? கிழவியின் மூக தாட்சண்யத்திற்காகவா? ஏழைக் கிழவி, அவளிடம் தான் இரண்டணாவுக்குப் பூ வாங்கி வைப்போமே என்று



"ஏன் ஸார், இந்தத் தூக்க மருந்து நன்றாய் வேலை செய்யுமா? உங்களால் உத்தரவாதம் அளிக்க முடியுமா?"

"உத்தரவாதமா? அதென்ன, அப்படிக் கேட்கிறீர்கள்? இந்த மருந்து வாங்குபவர்கள் கூடவே எங்கள் அலாரம் கடிகாரம் ஒன்றையும் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று விளம்பரம் செய்திருக்கிறோமே. நீங்கள் பார்க்கவில்லையா?"

பரிதாபங் கொண்டதனால்தானா......? என்னவோ அது அவனுக்கே தெரியாது.

எப்பொழுதோ அவன் வாடிக்கையாகப் பூ வாங்கிக் கொண்டிருந்தான். ஆனால் இப்பொழுது அவனுக்குப் பூ வாங்க வேண்டிய அவசியமே இல்லை. கடந்த ஆறு மாதமாக—அவனுடைய மனைவி இறந்த நாளிலிருந்து—அவன் பூவைக் கண்ணால் பார்க்கவே அஞ்சினான். மலரின் மணம் எங்கேயாவது வீசினால் கூட அவனுக்கு விஷ கெடி ஏறுவது போல் தானிருக்கும். பத்து வருஷங்களுக்கு மேலாகத் தன் மனைவிக்காகத்தான் சேதுராமன் தினமும் பூ வாங்கிக் கொண்டிருந்தான். அவள் இப்பொழுது இறந்து விட்டாள். மலரைப் பற்றிய நினைவு மனத்தில் தோன்றினால் கூட வெறுப்பு அடைவதற்குக் காரணம் இருக்கிறதல்லவா......?

அவன் மனைவி பத்மாவுக்குத் தினமும் தலையில் பூச்சூட்டிக் கொள்ளா விட்டால் நிம்மதியே இருக்காது. அவளுக்குப் பூவிலுள்ள ஆசை உலகத்தில் வேறு எதிலுமே இல்லை என்று சொல்லலாம். நீண்ட கேசத்தை அழகாகப் பின்னித் தொங்க விட்டு, அவள் பூ வைத்துக் கொள்வதே ஒரு தனி அழகு. நெற்றியில் எப்பொழுதும் குங்குமத் திலகம் இருக்க வேண்டியது எப்படி ஸ்திரீகளுக்கு மங்களகரமோ அப்படியே தலையில் குலுங்கக் குலுங்கப் பூ இருக்க வேண்டியதும் அவசியம் என்பது பத்மாவின் தீர்மானம். தலையில் பூச்சூட்டிக் கொள்ளும் கலையும், அழகும் பத்மா ஒருத்தியிடம்தான் இருப்பதாகத் தீர்மானமாகக் கருதினான் சேதுராமன். உண்மையாகவே அது அவன் மனத்தைக் கவரக் கூடியதாய்த் தானிருந்தது. அவள் தலையில் ஒரு நிமிஷமாவது பூ இல்லாமல் இருந்தால் அதைக் காணச் சகிக்க மாட்டான் சேது. அவளுக்குப் பூ வைத்துக் கொள்வதில் எவ்வளவு ஆவல் இருந்ததோ அதைவிடப் பன்மடங்கு அவளுக்கு நாள் தவறாமல் பூ வாங்கிக் கொடுப்பதில் ஆவல் இருந்தது சேதுவுக்கு.

கல்கி

(வாரப் பதிப்பு)

சந்தா விவரம்

	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா, சிலோன்	ரூ. 13-0-0	6-8-0
பர்மா, மலேயா, வெளிநாடு	ரூ. 14-10-0	7-5-0

குறிப்பு :—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்ப வேண்டும். சிலோன் நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை

அவர்கள் சதிபதிகளாகி வாழ்க்கை நடத்த ஆரம்பித்த பத்து வருட காலத்தில் அவர்களுடைய தூய அன்புக்கும் காதலுக்கும் காரணமாய் இருந்தது மலர் என்று தான் சொல்ல வேண்டும்.

*

பத்து வருடங்கள் ஓடிவிட்டன. வாழ்வைக் குலைக்கும் சோதனைகள் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாக வருகிறது. உலகத்தில் மனமொத்த தம்பதிகள் இருவர் இருந்து விட்டால் அது கடவுளுக்குக் கூடப் பொறாமையை உண்டாக்கும் போலிருக்கிறது. திடீரென்று அவள் காச நோயால் பீடிக்கப்பட்டாள். எமனின் திருஷ்டி அவள்மீது விழுந்த பிறகு வைத்தியர்களோ, மருந்தோ என்ன செய்ய முடியும்? நாளுக்கு நாள் உடல் இளைத்தது. மேனியின் மினுமினுப்பு மங்கியது. அவளுடைய அழகுக்கே பிரதானமாக விளங்கிய நீண்ட தலைக்கேசம் உதிரத் தொடங்கியது. அவர்கள் தாம்பத்தியத்தில் சுகம் ஒழிந்தது. ஆனால் அன்பு அழியாமலிருந்தது. சில நாளில் அவள் படுத்த படுக்கையாகி விட்டாள். அவள் மரணப் படுக்கையில் இருந்தபோதும்கூட ஒவ்வொரு நாளும் பூ வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை அவளை விட்டுப் போய் விட்டதாய்த் தெரியவில்லை. அவனும் தினமும் அவளுக்குப் பூ வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பதை நிறுத்தவில்லை. அவள் அழகு குன்றி, உடல் மெலிந்து, முகம் வெளுத்து, தலைக்கேசம் உதிர்ந்து மரணப் படுக்கையில் கிடக்கும் வேளையிலும் அவன் தவறாமல் தினமும் பூ வாங்கிக் கொண்டு வந்து தருவதை நிறுத்தாதது எல்லோருக்கும் வியப்பாகத்தான் இருந்தது.

அவள் ஒருநாள் இறந்து விடுவாள் என்று எல்லோரும் நினைத்தபடியே அவளும் இறந்து விட்டாள். அவள் இறந்த பிறகு அவனும் கிழவியிடம் பூ வாங்குவதை நிறுத்திக் கொண்டான். அவன் பூவைக் கண்ணால் பார்க்கவே விரும்புவதில்லை. அவன் வாழ்வில் இப்படி ஒரு மாறுதல் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை அல்லவா?

ஆறு மாதங்களுக்குப் பிறகு அவன் மறுபடியும் சந்தித்து இரண்டு முழம் கதம்பத்தைக் கொடுத்துவிட்டு இரண்டணா வாங்கிக் கொண்டு விட்டான் அந்தப் பூக்காரக் கிழவி... அவன் மனத்தில் எத்தனையோ நினைவுகள். ஒருவன் தன் மனைவிக்காகப் பத்து வருட காலம் தினம் தினம், தவறாமல் பூ வாங்கிக் கொடுத்தானென்றால், தாம்பத்ய வாழ்க்கையிலே சிகரத்தை எட்டிவிட்ட அன்பாகத் தானே அதைச் சொல்ல வேண்டும்? திடீரென்று அந்த அன்பு விளக்கு அணைந்து விட்டது. வாழ்வோடு ஒட்டிய ஒரு பழக்கமும்

அன்றோடு நின்று விட்டது — மறுபடியும் இன்று அவன் இரண்டணுக் கொடுத்து மலர் வாங்கியதில் ஏதாவது அர்த்தமுண்டா? ஏதோ வாங்கி விட்டான். ஆனல் அவன் மனத்தில் எழுந்த பெரும் போராட்டத்தை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அவன் தன் அறையில் வந்து மேஜை மீது அந்தப் பூப் பொட்டலத்தை வைத்துவிட்டு நாற்காலியில் அமர்ந்தான். நாற்காலியில் அமர்ந்தவன் நெடுநேரம் வரையில் சிந்தனைக் கடலில் சிக்கித் தவித்தான்.

திடீரென்று அவனுக்கொரு யோசனை தோன்றியது. அந்தப் பூவை எடுத்து ஜன்னல் வழியாக வெளியே விட்டெறிந்து விடலாம் என்று தீர்மானித்தான். அதனல் அவன் மனத்திற்கு நிம்மதி ஏற்பட்டு விடுமா...? கண நேரத்தில் அவன் மனசு மாறியது. அவன் கண்ணுக்கெதிரே சுவரில் பராசக்தியின் திருவுருவப் படம் மாட்டப் பட்டிருந்தது. அந்தப் பூச்சரத்தை அந்தப் படத்திற்கு அணிவித்தால்...? சட்டென்று எழுந்தான். மேஜை மீது இருந்த பூப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்து அதைப் படத்தில் மாட்ட முயற்சித்தான். படத்தின் சட்டத்தில் சரியான பிடிப்பில்லாததால் பூச்சரம் நழுவிக் கீழே விழுந்தது. மறுமுறை அதைப் படத்தில் பொருத்த முயற்சித்தான்! மறுமுறையும் அந்த மலர்ச் சரம் படச் சட்டத்தில் தரிக்காமல் நழுவிக் கீழே விழுந்தது.

அவன் மனத்தில் திடீரென்று ஒரு குழப்பமும் பயமும் எழுந்தது. அவன் மறுபடியும் அந்த மலரைப் படத்திற்கு அணிவிக்க முயற்சி செய்யவில்லை. அதை அப்படியே அலட்சியத்தோடு மேஜை மீது போட்டுவிட்டு மறுபடியும் நாற்காலியில் வந்து அமர்ந்தான்.

அந்தப் பூவை அவன் எதற்காக வாங்கினன்? பக்தி சிரத்தையுடன் அம்பிகையின் படத்திற்கு அணிவிப்பதற்காகவா? இல்லையே? அப்படி இருக்கும்போது அவன் அதை அந்தப் படத்திற்கு அணிவிக்க முயற்சிக்கலாமா? அந்தப் புஷ்பத்தை வாங்கும் பொழுதோ அதற்கப்புறமோ அவன் தெய்வத்தைப் பற்றி உள்ளத்தூய்மையோடு நினைத்த துண்டா? ஏதோ அர்த்தமற்ற காரணத்துக்காக வாங்கப்பட்ட மலர்ச் சரம் மேஜை மீது கிடந்து வாடுவானேன் 'என்பதற்காக தேவியின் படத்திற்கு அணிவிக்க விரும்புவது தகுமா...? அதைத் தேவிதான் ஏற்றுக் கொள்வாளா?

மெதுவாகக் கட்டிலில் வந்து சாய்ந்து படுத்துச் சிந்தனையில் ஆழ்ந்தான். அவனுடைய மனைவி பத்மாவின் இளமையும் பொலிவும் நிறைந்த அழகான உருவமும், வியாதியால் பீடிக்கப்பட்டு உடல் மெலிந்து களையிழந்த உருவமும் மாறி மாறி அவன் மனத்திடையே தோன்றி மறைந்தன.

இருளிடையே அவன் வந்தான். மேஜை மீது இருந்த கதம்ப மலரை நாளுக்காக

விசேஷ சலுகை

வாடச்புரூப் - ஷாக்புரூப் - ஆல் புரூப் செண்டர் செகண்டுடன் கூடிய கைக் கடிகாரங்கள்

10 வருஷ உத்தரவாதம்

ஒரேவித மூன்று கடிகாரங்கள் ஒரு தடவையில் ஆர்டர் கொடுத்தால் ஒரு கடிகாரமும், ஒரு கடிகாரம் ஆர்டர்கொடுத்தால் ஒரு தங்க மூடி போட்ட பவுண்டன் பேனா இலவசம்.


வாடச் புரூப்



டெ. 25. சைஸ் 8¾"

15 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 39/-
17 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 44/-

வாடச் புரூப்



டெ. 26. சைஸ் 8¾"

15 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 39/-
17 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 43/-

வாடச் புரூப்



டெ. 27. சைஸ் 8¾"

15 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 42/-
17 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 46/-

வாடச் புரூப்



டெ. 28. சைஸ் 8¾"

15 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 37/-
17 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 42/-

வாடச் புரூப்



டெ. 29. சைஸ் 8¾"

15 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 41/-
17 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 45/-

வாடச் புரூப்



டெ. 30. சைஸ் 8¾"

15 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 44/-
17 ஜூவல்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் ரூ. 47/-

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவேண்டும். தபால் செலவு தனி. இரண்டு கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு தபால் செலவு இலவசம்

CALCUTTA WATCH Co., (Sec. 73.)

Post Box No. 12203 CALCUTTA. 5.

எடுத்துப் பணிக்காகத் தலையில் அணிந்து கொண்டாள். அழகாக அவனுக்குச் சமீபமாக வந்து நின்றாள். 'இந்தப் பூவை எனக்காகத் தானே வாங்கிக் கொண்டு வந்தீர்கள்? அழகாக வைத்துக் கொண்டிருக்கிறேனா? இத்தனை நாளாக என்னை இப்படி மறக்கலாமா? தினமும் பூ இல்லாமல் என் ஆவி எவ்வளவு துடித்தது தெரியுமா...?' என்றாள் இனிமையும் அடக்கமும் நிறைந்த குரலில்.

மறுநாள் காலையில் அவன் கண் விழித்து எழுந்தான். முதன் முதலாக அவன் கண் பார்வை மேஜைமீதுதான் சென்றது. நேற்று வாங்கிக் கொண்டு வந்து வைத்த 'கதம்பம்' மேஜைமீது வாடிக் கிடந்தது. நேற்றிரவு கண்டது கனவுதான் என்பதை அப்பொழுது தான் அவன் திடமாக உணர முடிந்தது. அது கனவாக இருந்தாலும் அவன் மனத்திற்கு ஒரு சாந்தியையும் தெளிவையும் உண்டாக்கி விட்டது.

அன்றும் அவன் சாயந்திர வேளையில் கடைத் தெரு வழியாக வந்து பூக்காரக் கிழவியிடம் இரண்டு முழம் கதம்பம் வாங்கிக் கொண்டு வந்தான். ஒவ்வொரு நாளும் அப்படியே செய்தான். செடு நாட்களாக நின்று போன வாடிக்கை வியாபாரம் மறுபடியும் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தது.

வீடு கூட்ட வரும் வேலைக்காரிக்கு அவனுடைய செய்கை வியப்பாகவும் விநோதமாகவும் இருந்தது. ஒவ்வொரு நாளும் பூவை வாங்கிக் கொண்டு வந்து மேஜை மீது போட்டு வைப்பதென்றால் யாருக்குத்தான் அது பயித்தியக்காரத்தனமானதாகப் படாது. மேஜைமீது வீணாகக் கிடந்து வாடும் மலரை ஏன் எடுத்து அம்பிகையின் படத்திற்கு அணிவிக்கக் கூடாது என்று வேலைக்காரிக்குத் தோன்றியது. அன்று காலையில் வந்த அவள், அவனுடைய அனுமதியின்றியே மலர்ச் சரத்தை எடுத்துப் பதட்டமடையாமல் ஜாக்கிரதையாக அம்பிகையின் படத்திற்கு அணிவித்தாள். அது படத்தில் அலங்காரமாகத் திகழ்ந்தது.

அவன் காலையில் கண் விழித்து எழுந்ததும் முதன் முதலில் அவன் பார்வை மேஜைமீது தான் சென்றது. அவன் திடுக்கிட்டான். மேஜைமீது இருந்த பூ எங்கே? அவன் திகைப்போடு சுற்றிலும் பார்த்தான். அவன் மேஜைமீது வாங்கி வைத்திருந்த புஷ்பம் அலுங்காமல் அழகாக அம்பிகையின் படத்தை அலங்கரித்திருந்தது. இதை யார் செய்திருப்பார்கள்...? அவனுக்கு விளங்கி விட்டது. 'முனியம்மா...' என்று உரத்த குரலில் கூப்பிட்டான். கொல்லைப் புறத்தில் வேலை செய்து கொண்டிருந்த வேலைக்காரி குரல் கேட்டு ஓடோடி வந்தாள்.

அவன் ஆத்திரமும் கோபமும் பொங்க அவளைப் பார்த்தான். "மேஜைமீது இருந்த

"பேர்ஸ்பெக்ஸ்" பிளாஸ்டிக் கண்காட்சி!



இது பிளாஸ்டிக் யுகம். "பேர்ஸ்பெக்ஸ்" பிளாஸ்டிக்கினால் இந்தியாவில் திறமை வாய்ந்தவர்களால் தயாரிக்கப்பட்ட பல நேர்த்தியான உயர்ந்த வஸ்துக்கள் கொண்ட பிளாஸ்டிக் கண்காட்சியை தம் தேசத்தின் பிரபல ரசாயன உற்பத்தியாளர்களான இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் சென்னை, ஸ்பிரிங்ஹாவன் ரோடிலுள்ள தங்களது காரியாலயத்தில் திறந்து வைத்துள்ளார்கள். இக்காட்சியில் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் "பேர்ஸ்பெக்ஸ்" பிளாஸ்டிக் உபயோகப்படும் விதமும் விளம்பர சாதனமாக எவ்விதம் உபயோகப்படுகிறது என்பதையும் மிகவும் நன்கு அறிந்து கொள்ளலாம். மேற்படி கண்காட்சி இரண்டு வாரங்களுக்குத் திறந்திருக்கும். இந்த "பேர்ஸ்பெக்ஸ்" பிளாஸ்டிக்கின் பூரண உபயோகத்தை அறிந்துகொள்ள விரும்புவோர் மேற்படி கண்காட்சி சாலைக்கு ஒருமுறை விஜயம் செய்யுமாறு கோரப்படுகிறார்கள்.

பூவை யார் எடுத்துப் படத்திற்குப் போட்டது?'' என்று கேட்டான்.

முனியம்மா நடுங்கிக் கொண்டே ''நான் தான் சாமி'' என்று கூறினாள்.

''என் உத்தரவு இல்லாமல் நீ எப்படி அந்தப் பூவைத் தொடலாம்...?'' என்று சீறினான் சேதுராமன்.

அவள் பயத்தோடும் நடுக்கத்தோடும் ''மேஜைமீது கிடந்து வாடுதேன்னு எடுத்து...'' என்று மேலே சொல்ல முடியாமல் தயங்கினாள்.

''அது வாடினால் வாடிப் போகட்டும். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்... இனிமேல் அதை நீ தொடக்கூடாது. தெரியுமா...?'' என்று எச்சரிக்கை செய்தான்.

முனியம்மா 'சரி' யென்பதுபோல் தலையை அசைத்துவிட்டு வெளியே சென்றாள்.

'இதென்ன இந்த ஐயாவுக்கு இப்படிப் பயித்தியம் பிடிச்சுப் போச்சு' என்று நினைத்துக் கொண்டு போனாள் வேலைக்காரி.

அவனுக்கா பயித்தியம்? இவ்வளவு நாளும் குழம்பி யிருந்த அவன் மனத்திற்கு இப்பொழுதுதான் ஒரு தெளிவும் நிம்மதியும் ஏற்பட்டது. வாழ்வை வாழ்வாக்கிக் கொள்ள அவனுக்கொரு வழி புலனாகியது. தன் மனைவியின் ஆவிக்குச் சிறிதாவது சாந்தி ஏற்பட வேண்டுமென்றால் தினமும் இரண்டு முழம் புஷ்பத்தை வாங்கிக் கொண்டுவந்து மேஜை மீது வைத்து வீணாக்குவது அவனுக்குப் பாதகமானதாகப் படவில்லை.

படித்துப் பாருங்கள்!

சுந்தர காண்டம், வால்மீகி ராமாயணம்

காவியங்களுக்குள் மகா காவியம் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்; பழம் பெரும் இதிகாசங்களில் தலைசிறந்தது.

ஏழு காண்டங்கள் கொண்ட ஸ்ரீமத் ராமாயணத்தில், அநுமான் சீதா தேவியைக் கண்டு அவள் துயரம் நீக்கிய கதையைக் கூறும் சுந்தர காண்டம், பாராயணம் செய்வதற்கும் சிரவணம் செய்வதற்கும் மிகச் சிறந்தது என்று பல்லோராலும் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது.

அத்தகைய சுந்தர காண்டத்துக்கு, ராமாயணக் கதா பிரசங்கத்தில் பிரசித்தியடைந்து விளங்கும் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள், தமிழில் விரிவான உரை எழுதியிருக்கிறார். தேவநாகரி லிபியிலும் தமிழ் எழுத்திலும் ஸ்லோகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. நூலின் இறுதியில், பாராயணம் செய்பவர்கள் ஸ்ரீராம பட்டாபிஷேகத்தையும் பாராயணம் செய்து முடிப்பது மரபாதலால், அந்த அத்தியாயத்தையும் சேர்த்திருக்கிறது. சுந்தர காண்டத்தைப் பொருள் அறிந்து பாராயணம் செய்ய விரும்புவோருக்கு இந்நூல் பேருதவியா யிருக்கும்.

கிடைக்கும் இடம்: கடலங்குடி. பிரம்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள், 17. நடேச ஐயர் தெரு, தியாகராய நகர், சென்னை-17 விலை: ரூ. 12-0-0. தபால் கூலி: ரூ. 1-0-0.

வாழ்க்கைத் துணை நூல்

விஷயம் செறிந்த நல்ல நூல் படிப்பதற்கு வேண்டும் என்றால் அதற்கு விஷயம் தெரிந்தவர் எழுதிய நூலைத் தேடிப் படிக்க வேண்டும்.

உதாரணமாக, சில விஷயங்களைப் பார்ப்போம். எத்தனையோ கோடி மக்களை ஆளும் சர்க்கார், கடன் வாங்குவானேன்? சொந்த நாட்டில் வாங்கும் கடன் போதாது என்று பிற நாட்டினிடமிருந்தும் கடன் வாங்க வேண்டுமா? அப்படி வாங்கின கடனை சர்க்கார் எப்படி அந்த நாட்டுக்குச் செலுத்துகிறது? பணம் வேண்டும்போதெல்லாம் சர்க்கார் நோட்டுக்களை அச்சுப் போட்டுக் கொள்ளுவது தானே?—இந்த மாதிரி சிக்கலான விஷயங்களை யெல்லாம் இந்நூல் பல கட்டுரைகள் மூலம் நன்கு விளக்குகிறது.

''யுத்தச் செலவு'' என்னும் கட்டுரை விஷயம் செறிந்த கட்டுரை; ''பணப்போல் வலை'', சுவாரஸ்யமான ஆராய்ச்சிக் கட்டுரை. ''மணிப் பிரவாளம்'', ரஸமான ஹாஸ்யக் கட்டுரை; ''நினைவுகள்'', நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய கட்டுரை; ''வாழ்க்கைத் துணை நூல்'' என்னும் இந்நூலின் முதல் கட்டுரை, திருக்குறளைப் பற்றிய முதல்தரமான கட்டுரை.

அருங் கலை விநோதரும், தொழில் அதிபரும், அறிஞருமான ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் இந்நூலை எழுதி யிருக்கிறார் என்று சுருக்கமாகக் கூறினால் போதுமானது. இந்நூலின் தனிச் சிறப்புக்கு வேறு அபிப்பிராயம் தேவையில்லை. பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-17. விலை: ரூ. 1-8-0.

வீரபாண்டியக் கட்டபொம்மு

அன்னியனுக்கு அடிபணிய மறுத்து, வீரப் போர் புரிந்து, வீர மரணம் அடைந்த வீர பாண்டியக் கட்டபொம்மன், நம் தேச சுதந்திரப் போருக்கு முதல் முழக்கம் செய்தவன்; பாரதத்தின் பழம் பெரும் வீரன்; அஞ்சா நெஞ்சத்தையே அருந்துணையாகக் கொண்டவன்.


அந்த வீர மன்னனின் சரித்திரம் எளிய நடையில் அழகாக எழுதப்பட்டிருக்கிறது இந்நூலில்.

ஆசிரியை: வி. சே. லீலா; பிரசுரம்: அருணா பப்ளிகேஷன்ஸ் லிமிடெட், 173-ஏ, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை. விலை ரூ. 1-8-0.


ராதையின் கனவு

அவன் மனம் ஒருமாதிரி தத்துவ விசாரணையில் இறங்கிவிட்டது. ஏதோ பெற்றோர்களின் வற்புறுத்தலுக்காகக் கல்யாணம் செய்து கொண்டான். திருமணத்தன்று மனைவியின் கரம் பற்றியவன்தான்; பிறகு அவளை அவன் உள்ளத்தாலும் தீண்டவில்லை. மணவாழ்க்கையைப் பற்றி இன்பக் கனவு கண்டு வந்த ராதை மனம் முறிந்து போனாள். அவர்கள் வாழ்வு எப்படி மலர்ந்தது, சோகப் பின்னணியில் ஆரம்பமாகி யிருக்கும் இந்தக் கதை இன்பமாக முடிவதற்கு யார் யார் எங்கெந்த விதத்தில் உறுதுணையா யிருந்தனர் என்பது படிப்பதற்குச் சுவாரஸ்யமாயிருக்கிறது.


எழுதியவர்: வேங்கடலக்ஷ்மி; பிரசுரம் அலயன்ஸ் கம்பெனி, தபால் பெட்டி நெ. 617, மயிலாப்பூர், சென்னை - 4. விலை: ரூ. 1—4—0.



"குரங்கு மார்க்கு"
கறுப்பு பற்பொடி
சகல பல் நோய்களுக்கும் சிறந்தது
MONKEY BRAND
BLACK TOOTH POWDER
NOGI & COMPANY
87, CHINA BAZAAR ROAD, MADRAS-1
எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்



ASK FOR
New Look
PLAYING CARDS
PLAYING CARDS
No. 371
POPULAR
PLAYING CARDS



ஜலதோஷமும் குளிரும்
'பெப்ஸ் அருந்துங்கள்'
என்று டாக்டர்
சொல்லுகிறார்
ஜலதோஷம், குளிர், இருமல், தொண்டைப் புண், இன்புளுயென்ஸா, சளி அல்லது வேறு தொண்டை மார்பு சம்பந்தமான எந்த நோயிருப்பினும் பெப்ஸ் சாப்பிடுங்கள். நீங்கள் பெப்ஸ் சாப்பிடும்போது நோய்தீர்க்கும் மருந்துச் சத்துள்ள ஜீவரஸங்கள் உங்கள் மார்புக்குள்ளும், சுவாசகோசங்களுக்கும் போய்ச்சேருவதை உணரலாம். பெப்ஸ் அபாயகரமான விஷக்கிருமிகளை அழிக்கிறது. புண்ணைத் தணியச்செய்கிறது. எரிச்சலைப்போக்கடிக்கிறது. டாக்டர்கள் பெப்ஸைச் சிபார்சு செய்கிறார்கள். இன்களையளிக்கும், தொண்டை, மார்பு நோய்தீர்க்கும் மாத்திரை அது.
பெப்ஸ் நன்கு அருந்துங்கள்
PEPS
தொண்டை, மார்பு வலி, நிவாரண மாத்திரைகள்
மதராஸிற்கு விநியோகஸ்தர்கள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, மதராஸ்.

அந்த நாள்

ராஜ்

ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு வெளியே பார்த்தவாறு தன் அறையில் நின்று கொண்டிருந்தாள் மாலதி. மாலை மணி ஆறு அடிக்க ஐந்து நிமிஷம். அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது அவள் கணவன் மாதவனை. உள்ளூர் பாங்கியில் மாதவன் காஷியர் உத்தியோகம் பார்க்கிறான். ஆபீஸிலிருந்து ஐந்தரை மணிக்கெல்லாம் திரும்பி வந்து விடுவான். அநாவசியமாக வெளியே சுற்ற மாட்டான். நேரே வீடு வந்ததும் மனைவி கொடுக்கும் டிபனையும் காப்பியையும் அருந்திவிட்டு அவளை அழைத்துக் கொண்டு வெளியே புறப்படுவான். இருவரும் கொஞ்சம் உலாவி விட்டுத் திரும்பி வந்துவிடுவார்கள். வீட்டில் மாதவன் தாயார் இவர்கள் வருகையை எதிர்பார்த்து இலை போட்டுத் தயாராக வைத்திருப்பாள். அன்று மாலதி தன் கணவனை எதிர்பார்த்திருந்ததற்குக் காரணம் மாமியார் ஊரிலில்லை. அவளுடைய பெண் பிரசவத்திற்காக ஊருக்குப் போயிருந்தார். தனியாக இருந்த மாலதிக்கு மாதவனின் வருகைக்குத் தாமதமாகும் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது. ஆறு அடித்தும் கணவன் இன்னும் வரவில்லை. சூரியனும் அஸ்தமனமாய் விட்டான். இருட்டு சூழ ஆரம்பித்ததும் விளக்கைப் போட்டாள். ரேடியோவை முடுக்கினாள். பாட்டு அரைகுறையாக அவள் காதில் விழுந்து கொண்டு இருக்கும்போது ஒரு சப்தம் அவளைத் தூக்கி வாரிப் போட்டது. திரும்பினாள். மாலை தினசரியைப் பேப்பர்க்காரப் பையன் 'தொப்' என்று போட்டுவிட்டுப் போய்க் கொண்டிருந்தான்.

பேப்பரைக் கண்டவுடன் ரேடியோவை நிறுத்திவிட்டு அன்றையச் செய்திகளைப் படிக்கத் தொடங்கினாள். வெளியில் ஒரு கண்ணும் பேப்பரில் ஒரு கண்ணுமாக இருந்தவளை "பாங்கு காஷியர் படுகொலை" என்ற செய்தி 'திக்' என்று கையை மார்பில் கொண்டு சென்றது. "இந்த ஊர் பாங்கிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த காஷியர் ஒருவரைக் கத்தியால் குத்திவிட்டு அவரிடமிருந்த பணத்தைத் திருடிக் கொண்டு போய் விட்டார்கள். போலீஸார் புலன் விசாரித்து வருகிறார்கள்" என்று படித்த மாலதிக்கு அந்தத் தினசரி நிருபர் மேல் கோபம் வந்தது. எந்த பாங்கி, காஷியர் பெயர் என்ன என்று ஒன்றுமே போடாமல் 'மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான்' என்று என்ன செய்தி வேண்டிக் கிடக்கிறது என்று சொல்லிக் கொண்டே அதை மறுபடியும் படித்ததும் தலைப்பில் 'பம்பாய்! என்றிருந்ததைப் பார்த்ததும் ஒரு பெருமூச்சு விட்டாள். மேலும் படித்தாள். 'காணாமற்போன வைரம்' என்ற செய்தி அடுத்ததாகக் கண்ணில் பட்டது. 'ஒரு கொலை ஆயிற்று. ஒரு திருட்டு வேறு' என்று படித்தாள். "எதிர்பாருங்கள்! எங்கள் பத்திரிகையில் அடுத்த வாரம் முதல் வெளிவரும் துப்பறியும் தொடர் நாவல்" என்று போட்டிருந்தது. உள்ளூறச் சிரித்துக் கொண்டாள்.

அப்பொழுது நிச்சப்தமாக இருந்த வீட்டின் ஹாலில் இருந்த கடிகாரம் 'டண்' என்று அடித்து மணி 6-30 என்று எச்சரித்தது. ஆனால் மாதவன் வரும் வழியாக இல்லை. 'என்ன மனுஷன் இவர். அம்மா அகத்தில் இல்லை என்பது தெரியும். நான் வீட்டில் தனியாக இருக்கிறேன். சீக்கிரம் வராமல் எங்கு போயிருப்பார்? யாரையேனும் அனுப்பலாம் என்றாலோ யாரை அனுப்புவது?' அவள் வீட்டின் வலது புறம் ஒரு பங்களா. மறுபுறம் ஒரு சிறு வீடு. பங்களாவில் சினிமா கம்பெனி ஒன்று இருக்கிறது. அங்கு பாட்டும் கொம்மாளமுமாக இருக்கும். கார்கள் வரும், போகும். இன்று அங்கும் சந்தடியே இல்லை. ஹாலில் ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. இடது பக்கத்து வீடு ஒரு ஓட்டு வீடு. அங்கு ஒரு அம்மாள் தன் பிள்ளை வைரமுத்துவுடன் வசித்து வந்தாள். அவள் சமையல் வேலை செய்கிறவள். அவள் வேலை முடிந்து தினம் ராத்திரி பத்து மணிக்குத் தான் வருவாள். ஆனால் பிள்ளை பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவந்து விடுவான். வீட்டைப் பூட்டிக் கொண்டு மாதவன் வீட்டு ஹாலில் வந்து உட்கார்ந்து பேப்பர் படித்துவிட்டு மாமாவுடன் பேசிவிட்டு மாமியிடம் தமாஷ் செய்து விட்டுப் போவான். அந்தப் பிள்ளை கூடத் திரும்பிவந்ததாகத் தெரியவில்லை. எதிர் மைதானத்தில் பையன்கள் விளையாடிவிட்டுப் போய் விட்டார்கள். ஒரே இருட்டாக இருந்த அந்த இடத்தில் ஜன நடமாட்டம் இல்லை. நாழிகை ஆக ஆக மாலதியின் மனம் படாத பாடு பட்டது. மணி நிர்த்தாக்ஷண்யமாக 'டண் டண்' என்று ஏழு அடித்தது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

உள்ளே போய், பால் காய்ந்து விட்டதா என்று பார்த்தாள். அதை எடுத்து மூடி வைத்தாள். மறுபடியும் வாசல் அறையில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

'இது என்ன இவர் இன்னும் வரவில்லை?' என்று ஏங்கிய அவள் காதில் வெளி முற்றத்தில் சில ஓடுகள் 'மடமட' என்று கீழே விழுந்து நொறுங்கும் சத்தம் அவளுடைய சப்த நாடியையும் ஒடுக்கி விட்டது. 'சரி! எவனோ உளவு தெரிந்து கொண்டு உள்ளே புகுந்து விட்டான். தொலைந்தோம். கத்துவோமா' என்று யோசித்தவள் தைரியத்தைக் கையில் பிடித்துக் கொண்டு எட்டிப் பார்த்தாள். அடுக்களைக் கதவு கொஞ்சம் திறந்திருந்தது; உள்ளே யாரோ நடமாடுவது போல் இருந்தது. ஒரு யோசனை தோன்றிற்று. 'மடமட' என்று போனாள். அடுக்களைக் கதவை இழுத்துச் சாத்தினாள். பூட்டு மாட்டும் இடத்தில் செருக ஏதேனும் அகப்படுமா



நடிகர் (திரைக்குப் பின்னும் ஸ்டேஜ் மானேஜரிடம்):—ஏன் இப்படி ஜனங்கள் என் பேரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கலாட்டா பண்ணுகிறார்கள்? நான் 'ஒன்ஸ் மோர்' பாடுவதில்லையே?

ஸ்டேஜ் மானேஜர்:—ஒன்ஸ் மோரும் இல்லே, ஒரு மோரும் இல்லே, ஐயா! மேடைக்குப் போய், 'தெரியாமல் பாடி விட்டேன். இனிமேல் நான் பாட்டுப் பாடுவதில்லை' என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்!

என்று பார்த்தான். ஒன்றும் அகப்படவில்லை. உள்ளே தாம்பாளம் சத்தம் போட்டுக் கொண்டிருந்தது. உடனே மாலதி தன் இரு விரல்களையும் பூட்டு மாட்டும் இடத்தில் கொடுத்துக் கொண்டிருந்தாள். உடல் நடுங்கியது. உள்ளே இருந்த ஆசாமியோ இந்த சத்தம் கேட்டதும் கதவருகில் வந்து தள்ளுவது போல் அவளுக்குத் தோன்றியது. என்ன ஆனாலும் விடுவதில்லை என்று அப்படியே அழுத்திப் பிடித்துக் கொண்டாள். கைவிரல்களில் அப்படியே ரத்தம் கட்டிக் கொண்டது. உயிர் போனாலும் சரி என்று நின்றாள். அப்பொழுது உள்ளே இருந்து வந்த சத்தம் அவளைத் திகைக்க வைத்தது. கதவை யாரோ தட்டுவது போல் பட்டது. கதவைத் திறந்தாள். உள்ளே இருந்து வேகமாக வெளியில் ஓடி வெளி முற்றத்தின் ஓட்டின் மேல் ஏறி ஓடியது. அந்த நாசமாய்ப் போகிற வெள்ளைப் பூனை. உள்ளே சென்று பார்த்தாள் மாலதி. நல்ல வேளை, பூனை பாலைக் குடிக்கவில்லை. அந்த மட்டும் க்ஷேமம் என்று வாசலறைக்கு மறுபடியும் வந்தாள்.

வாசற்கதவு 'தடதட' வென்று தட்டப் பட்டது. 'யாரங்கே?' என்று கேட்டாள். 'ஸார்? தந்தி!' என்று பதில் வந்தது. மாலதிக்கு வயிற்றைக் கலக்கியது. அவள் மனம் எண்ணாததை யெல்லாம் எண்ணியது. தந்தியை நடுங்கும் கைகளுடன் வாங்கிப் பிரித்துப் படித்தாள். 'அப்பாடா' என்று போன உயிர் வந்தது. அவள் நாத்தனார் பிள்ளை பெற்றுக் குழந்தையும் தாயும் சௌக்கியம் என்று மாமியார் தந்தி அடித்திருந்தார். அதை மேஜை மேல் வைத்துவிட்டு மறுபடியும் ரேடியோவை முடுக்கினாள்.

மணி ஏழரை. இன்னும் மாதவன் வரவில்லை 'இப்படி இருக்க மாட்டாரே, பாங்கியில் இப்பொழுது வருஷ முடிவு இல்லையே. ஏன் இன்னும் வரவில்லை! அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. இப்படித் திண்டாடியது இது தான் முதல் தடவை. அவளால் தாங்க முடியவில்லை. இன்னும் அரை மணி பார்ப்போம். வரவில்லை என்றால் ஏதேனும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எண்ணியவாறு இருப்புக் கொள்ளாமல் தவித்தாள் மாலதி.

அந்தச் சமயம் ஜன்னல் வழியாக "அம்மா! ஓ, அம்மா!" என்ற குரல் அவள் கவனத்தைக் கவர்ந்தது. வெளியில் அவள் வீட்டு வேலைக்காரி கன்னியம்மா நின்று கொண்டிருந்தாள். ஏதோ தெய்வம் தான் அவளைக் கொண்டு வந்து விட்டது போல் தோன்றியது. மாலதிக்கு. "வாடி! கன்னியம்மா!" என்று சொல்லிக் கொண்டே வாசற் கதவைத் திறந்தாள்.

"என்னம்மா! தனியாகவா குந்திக்கிட்டு இருக்கிறீங்க!"

"ஆமாண்டி! ஐயா இன்னும் வரவில்லை. நீ எங்கே வந்தே?"

"ஒண்ணுமில்லே. கொஞ்சம் ரசம் இருந்தா வாங்கிக்கிட்டுப் போகலாம் என்று வந்தேன். அது சரி, அம்மா! ஐயா ஏன் இன்னும் வரவில்லை? பெரியம்மா கூட இல்லையே!"

"அதுதான் தெரியவில்லை. ரசம் எதுக்கு? உள்ளே வா. உனக்குச் சோறு போடுகிறேன். சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நேரம் இங்கேயே இரு" என்றாள் மாலதி.

"இல்லேம்மா! கொஞ்சம் ரசம் கொடுங்களேன். வீட்டிலே அதுக்குச் சோறு போட்டு விட்டு இதோ ஓடியாந்துடறேன்!" என்றாள் கன்னியம்மா.

ரசத்தைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்து, "சரி, சீக்கிரம் வந்துவிடு!" என்றாள் மாலதி.

"நீங்கள் பயப்படாதிங்க, அம்மா! இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள் கன்னியம்மா.

சிறிது நேரம் சென்றதும் கன்னியம்மா சொன்னபடி திரும்பி வந்தாள். தனியாக வரவில்லை. கூட ஒரு ஆளும் வந்தான். அவன் போட்டிருந்த உடையிலிருந்து அவன் ஒரு போலீஸ்காரனைப்போல் இருந்தது.

"அம்மா! இதுதான் என் அண்ணன் பாலு. ஜவான் உத்தியோகம். ஊரிலெல்லாம் திருட்டுப் போகுதுன்னு ராவு பீட்டுக்குப் போட்டிருக்காங்களாம். நம்ம ஊட்டுக்கு வந்திருந்தது. 'ஐயா இன்னும் வரவில்லை. அம்மா தனியா இருக்காங்க. நான் போறேன்' என்றேன். நானும் வரேன்னு வந்துது. ஐயா இன்னும் வரலையே? பாலு அண்ணனைத் தேடிக்கிட்டு வரச் சொல்றேன், அம்மா!" என்றாள் கன்னியம்மா.

"போமா, பைத்தியம்! ஒண்ணும் கலாட்டா பண்ணாதே! ஆபீஸ் வேலை ஜாஸ்தியாக

இருந்திருக்கும். தானே வந்துடுவார், பார்!'' என்றாள் ரொம்ப தைரியமாக மாலதி.

''இல்லையம்மா! காலம் கெட்டுக் கிடக்குது. ஐயா எந்த ஆபீசில் இருக்கிறார் என்று சொல்லுங்கள். நான் போய்ப் பார்த்துக் கொண்டு வருகிறேன், அம்மா!'' என்று ரொம்பப் பணிவாகக் கேட்டான் பாலு.

இரண்டு பேர்களைக் கண்டதும் மாலதிக்குத் தெம்பு வந்தது. கணவன் வேலை பார்க்கும் பாங்கியின் பெயரைச் சொன்னாள். அவனும் சீக்கிரம் ஐயாவை அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டுப் போனான்.

மணி பத்து இருக்கும். மாலதிக்கு அழுது, அழுது முகம் வீங்கிப் போய்விட்டது. கன்னியம்மாவுக்குச் சமாதானம் சொல்லிச் சொல்லி வாய் வலித்து விட்டது. வாசலில் ஒரு ஜீப் வந்து நின்றது. இரண்டு போலீஸ் ஜவான்கள் அதிலிருந்து இறங்கினார்கள். நடுவில் மாதவனும் இருந்தான். அதில் ஒரு போலீஸ்காரன் பாலு.

''அம்மா! தைரியமாகப் பேசினீங்களே! நல்ல வேளையா என்னிடம் சொன்னீங்க. ஐயாவைப் பத்திரமா கொண்டுவந்து சேர்த்துட்டேன். அவரே எல்லாம் சொல்லுவாங்க!'' என்று சொல்லிவிட்டுக் கன்னியம்மாவை அழைத்துக் கொண்டு போய் விட்டான்.

உள்ளே மௌனமாகச் சோபாவில் அலுப்போடு வந்து உட்கார்ந்திருந்தான் மாதவன். மாலதிக்கு அவன் இல்லாத சமயத்தில் எல்லாம் அவள் உயிர் மாதவனையே நாடி இருந்தது. அவனை நேரே கண்டதும் அவளுக்குக் கோபம் எங்கிருந்தோ வந்தது. ''வாயைத் திறக்காமல் உட்கார்ந்திருக்கிறீர்களே! இன்றைக்கு ஏன் இத்தனை நேரம்? ஏதடா, வீட்டிலே இவள் தனியா இருக்கிறாளே என்று கொஞ்சமேனும் உங்களுக்குக் கவலை இருந்ததா?'' என்றாள்.

''மாலதி! மன்னித்துவிடு! இனிமேல் இதுபோல் நடக்காது. போதும், போதும் நான் அனுபவித்த அனுபவம்'' என்று சொன்னதும் மாலதியின் கோபம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்தது.


''என்ன நடந்தது? எங்கே போனீர்கள்?'' என்று பரபரப்போடு கேட்டாள்.

''நம் அடுத்த வீட்டு சினிமாக் கம்பெனி முதலாளி இன்று மத்தியானம் பாங்கிக்கு வந்து செக் ஒன்றைக் கொடுத்துப் பணம் மாற்றிக் கொண்டார். 'சார், எங்கள் படம் ஓடிக்கொண்டிருக்கிறதே! நீங்கள் பார்க்கவில்லையா?' என்று இரண்டு பேருக்கு டிக்கெட் கொடுத்தார். நான் சாயங்காலம் வந்து உன்னையும் அழைத்துக் கொண்டு போகலாம் என்று நினைத்தேன். சற்றுநேரம் கழித்து நம்ம அடுத்த வீட்டு வைரமுத்து அங்கு வந்தான். 'மாமா! இரண்டணா கொடுங்கோ, டிபன் சாப்பிடணும்' என்றான். அப்பொழுது மேஜையின் மேல் இருந்த சினிமா டிக்கெட்டைப் பார்த்தான். 'மாமா! நானும் வரேனே, என்னை அழைத்துப் போங்கள்!' என்றான். சரி; பாவம், அவனை யார் அழைத்துப் போகப் போகிறார்கள் என்று நினைத்து, 'சரி! சாயந்திரம் வா. ஆனால் வீட்டில் மாமியிடம் சொல்லிவிட்டு வா!'' என்றேன். அவனும் ஆபீசுக்கு சரியாக வந்து சேர்ந்தான். இருவரும் சினிமாவுக்குப் போய் விட்டோம். பாதி சினிமா பார்த்துக் கொண்டிருக்கையில் 'ஏண்டா! அம்மாமியிடட்டே நான் வருவதற்கு நாழிகையாகும் என்று சொன்னாயோ இல்லையோ!' என்றேன். ''ஓ' சொல்லி விட்டேனே! எங்கம்மாவிடம் சொல்லிட்டுத்தான் வந்தேன்' என்றான். 'ஏண்டா! உங்கம்மாவிடமா? மாலதியிடம் சொல்லவில்லையா' என்றேன். 'இல்லை மாமா. மாமி என்றீர்களே! எங்கம்மாவைத்தான் சொன்னீர்கள் என்று நினைத்தேன்' என்றான். 'அட! அசடே! மாலதி தவியாய்த் தவிப்பாளே' என்ற தவிப்புடன் அந்தப் படத்தை முழுவதும் பார்த்தேன்.''

''சரி! அவன்தான் சொல்லவில்லை என்றானே! உடனே திரும்பி வீட்டுக்கு வந்து விடுவதுதானே, சினிமா பார்த்தது போதும் என்று?'' என்று கேட்டாள் மாலதி.

''ஆமாம்! மாலு. எனக்குத் தோணவில்லை. என்னவோ இன்று நீ செய்த பாக்கியம் என்னை உயிரோடாவது பார்க்கிறாய்'' என்றான் மாதவன்.

''ஐயோ! என்ன நடந்தது!''



எஜமானி:—ஏண்டா முனியா, போன பொங்கலுக்கு வெற்றிலையில் அரை ரூபாய் கொடுத்தோம். சந்தோஷமா வாங்கிக்கிட்டே. இப்பொழுது வெற்றிலைப் பாக்குடன் ஒரு ரூபாய் கொடுத்திருக்கு, முகத்தைச் சுளிக்கிறாயே?

முனியன்:—போன தடவை 'அசோகா' பாக்கும் வைத்துக் கொடுத்தீங்க. இப்பொழுது வெறும் வெற்றிலைப் பாக்குடன்தானே கொடுத்தீர்கள், அதாங்க.

Advt.

சூடு கண்ட பூனை!



காஷ்மீரில் ஜன சங்கம் கிளப்பிவிட்ட ஜம்மு பிரச்னையைச் சமாதான முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென்று அதே ஜன சங்கம் இப்போது முறையிட்டு வருகிறது.

"அதை ஏன் கேட்கிறாய்! சினிமா முடிந்து திரும்பி பஸ்ஸுக்காக க்யூவிலே நின்றோம். 'க்யூ' ஒரு மைல் நீளம். பஸ்ஸே கிடைக்காது போல் இருந்தது. நீ தனியாக இருக்கிறாய் என்று பயம். 'அடே வைரம்! நடக்கலாம் வா' என்று அவனையும் அழைத்துக் கொண்டு குறுக்கு வழியாக நடந்தேன். இரண்டு பக்கமும் மரங்கள் வைத்து அழகாக இருந்தது. குளு குளு என்று காற்று. கொஞ்ச தூரம் நடந்திருப்போம். திடீரென்று ஒருவன் என்னெதிர் பளிச்சென்று ஒரு கத்தியை வீசினான். ஆனால் மறு கணம் அந்தக் கத்தி கையிலிருந்து பறந்தது. வைரமுத்து அவன்மேல் பாய்ந்து ஒரு குத்து விட்டான். அதற்குள் நான் அவனைக் கட்டிப் பிடிக்கப் போனேன். ஆனால் வைரம் கீழே சாய்ந்து விட்டான். அவன் மண்டையில் ஒருவன் கட்டையால் அடித்து விட்டான். என்னமோ தோன்றியது. கீழே விழுந்திருந்த கத்தியை நான் எடுத்துக் கொண்டு 'வாங்கடா பசங்களா' என்று கத்தியைக் காட்டினேன். என்னமோ நல்ல காலம், அவர்களில் ஒருவன் 'டேய் ஓடடா' என்று சொன்னவுடன் அவர்கள் ஓட்டம் பிடித்து மறைந்தார்கள்.

என் எதிரே ஒரு ஜீப் வந்து நின்றது. இரண்டு போலீஸ்காரர்கள் குதித்தார்கள். கீழே வைரம் நினைவிழந்து படுத்திருந்தான். என் கையிலே கத்தி. நான் 'பிடியுங்கள், திருடன்' என்று கத்தினேன். அவர்களும் வண்டியில் போய் ஏதோ பேசிவிட்டு என்னிடம் வந்தார்கள். 'ஸார்! நீங்கள் யார்? கையிலே கத்தி! கீழே மயக்கமாக ஒரு ஆளு! 'ஏறுங்கள் ஸ்டேஷனுக்குப் போகலாம்' என்றான். 'என்னய்யா, திருடன் ஓடிவிட்டான். என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்பிடறே' என்றதும் 'நீங்கள் யார்' என்று இன்னொரு போலீஸ்காரன் கேட்டான். அவன் தான் நம்ம கன்னியம்மா அண்ணன் பாலு. நான் என் பெயர், வேலை எல்லாம் சொன்னதும் 'என்ன சாமி, இது? வீட்டிலே அம்மா கவலைப்பட்டுக்கிட்டுக் கிடக்காங்க. நீ இப்படி காரியம் பண்ணிக்கிட்டிருக்கிறே' என்றான். வைரத்தைத் தூக்கிப் போட்டுக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றோம். அங்கே இன்ஸ்பெக்டர் ரொம்ப நல்லவர். உடனே போலீஸ் ஸர்ஜனை வரவழைத்து வைரத்துக்குச் சிகிச்சை செய்வித்தார். பையனும் கண்ணை விழித்து 'மாமா' என்று கூப்பிட்டான். எனக்கும் மூச்சு வந்தது. 'ஒன்றும் பயமில்லை ஸார்! பையன் பிழைத்துவிட்டான். அதிர்ச்சிதான்' என்றார். இன்ஸ்பெக்டர் என்னிடமிருந்து வாக்கு மூலம் பதிவு செய்துகொண்டு அந்தக் கத்தியையும் ,வாங்கி வைத்துக்கொண்டு என்னை ஜீப்பிலேயே வீட்டிற்கு அனுப்பினார்" என்று முடித்தான் மாதவன்.

'சரி! எழுந்திருங்கள். நான் நீங்கள் இல்லாதபோது நடந்தது எல்லாம் சொல்கிறேன்!" என்று அவனுக்கு மருமான் பிறந்த செய்தியை முதன் முதலாகச் சொன்னாள்.

'பலே! அந்திம்பேர் பணத்துக்குப் பயல் பிறந்து விட்டான்' என்று உள்ளம் பூரித்தான்.

"இதோ பாருங்கள்! இனிமேல் அம்மா வரும் வரையில் சமத்தாகச் சீக்கிரம் வீடு வந்து சேருங்கள்" என்றாள் மாலதி.

"ரொம்ப சரி, மாலு! ஒரு சமாசாரம். அக்கா தனக்குப் பின்னே பிறந்தால் என் பெண்ணுக்குத்தான் கொடுக்கப் போகிறேன் என்பாள். இப்போ என்ன பண்ணுவது? நமக்குப் பெண் வருவதாய்க் காணோமே!" என்றான் குறும்பாக.

"வருத்தப்படாதேங்கோ! அக்கா இன்னும் ஏழு மாதத்தில் நடக்கப் போவதை முன்பே சொல்லிக் கொண்டிருந்தார் போலிருக்கு" என்றாள் மாலதி.

"அப்படியா! அடி கள்ளி! விஷயத்தைச் சொல்லவே இல்லையே" என்று அவள் கன்னத்தை இலேசாகத் தட்டினான் மாதவன்.

ஏது நியாயம்?

எஸ். கிருஷ்ணன்

வேலிக்கரைப் பண்ணை நாகநாத ஐயர் முகம் அன்று அபூர்வமாக மலர்ந்திருந்தது. தந்தையின் மகிழ்ச்சிக்கு ஓரளவு தானும் பொறுப்பாளியே என்று எண்ணிப் பெருமிதம் கொண்டார் பசுபதி. நாகநாத ஐயருடைய பெண் வயிற்றுப் பேரன் ரங்கராஜனுக்கும், பிள்ளை வழிப் பேத்தி சுமதிக்கும் அன்று மாலை விவாகம் நிச்சயிக்கப்பட்டது தான் நாகநாத ஐயருடைய மகிழ்ச்சிக்குக் காரணம்.

இரவு ஒன்பது மணிக்குச் சாப்பிட்டு விட்டு வெற்றிலைத் தட்டை முன்னால் வைத்துக் கொண்டிருந்த பசுபதி தன் தங்கை லலிதாவைக் கற்பனைக் கண்களால் பார்த்துக்கொண்டு சில நிமிஷம் பிரமை பிடித்து இருந்து விட்டார். லலிதா இன்று இவ்வுலகில் இல்லை. ஆறு வருஷங்களுக்கு முன் அவளும் அவள் கணவனும் ஒரு லாரி விபத்தில் மலேயாவில் காலமானதும் அவர்களுடைய ஒரே மகன் ரங்கராஜன் வேலிக்கரையில் பாட்டனார் வீடு தேடி வந்தான். பசுபதிதான் ரங்கராஜனை ஆறு வருஷங்களுக்கு முன் ஐந்தாம் பாரத்தில் சேர்த்தார். இன்று ரங்கராஜன் பி. ஏ. பட்டதாரி.

நாகநாத ஐயர் தம் சுயார்ஜித சொத்து முழுவதையும் பேரன் ரங்கராஜனுக்கே கொடுத்துவிடுவதுடன் தம் பேத்தி சுமதியையும் அவனுக்குக் கொடுத்துவிட நிச்சயித்தார்.

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னால் லலிதா சென்னையில் கல்லூரி யொன்றில் படித்துக் கொண்டிருந்தபோது நடந்த விஷயம். லலிதாவைப் பெற்றோரின் இஷ்டத்துக் கெதிராகக் கல்லூரியில் சேர்த்தவர் பசுபதியே. பி. ஏ. பரீக்ஷை எழுதிய சில நாட்களுக் கெல்லாம் லலிதா ஒருநாள் திடீரென்று பசுபதியிடம் வந்து அப்பா அவளை வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னதாகச் சொல்லி அழுதாள். அவள் தன்னுடன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவனை மணந்துகொள்ள விரும்புவதைத் தகப்பனாரிடம் தெரிவித்ததுதான் அவர் கோபத்துக்குக் காரணம். "அண்ணா, அப்பாதான் என்னைக் கைவிட்டு விட்டார். நீ பழைய காலத்து மனிதனல்லவே. உன்னால் என் நிலைமையை அறிந்து கொள்ள முடியாதா?" என்று கேட்டாள். எம்.ஏ., எம். எல். பட்டம் பெற்றிருந்த நீதி நிபுணன் பசுபதியும் ஒரு நிமிஷம் தங்கையை ஆமோதிப்பது நியாயமா, தகப்பனாரை ஆமோதிப்பது நியாயமா என்று யோசித்தார். பிறகு தங்கையின் கட்சியை ஆமோதித்தார். அண்ணன் ஆசியுடன் லலிதா மனத்துக்கிசைந்தவனை மணந்து கொண்டு மலேயாவுக்குச் சென்றாள். அங்கே அவள் கணவன் ஒரு ரப்பர் தோட்ட மானேஜராக அமர்ந்தான். லலிதா அண்ணனுக்கு அடிக்கடி கடிதம் எழுதுவாள். அவளுக்கு மகன் பிறந்த தகவலைப் பசுபதி தன் தகப்பனாருக்குத் தெரிவித்தபோது அவர் உலகத்தில் யார் யாருக்கோ குழந்தைகள் பிறந்து கொண்டுதா னிருக்கின்றன என்ற அற்புத உண்மையை மறுமொழியாக வெளியிட்டார். சில நாட்களுக்குப் பிறகு தங்கை தன் குழந்தையின் போட்டோவை அனுப்பி வைத்தாள். அதைப் பசுபதி தன் தகப்பனாருக்குக் காட்டவில்லை. ஆனால் தாயாரிடம் காட்டிக் கொண்டிருந்தபோது எங்கிருந்தோ தகப்பனார் வந்து சேர்ந்தார். தம் மனைவியின் கையிலிருந்த படத்தை வாங்கி யாருடையது என்று விசாரித்து விட்டுக் கிழித்தே போட்டுவிட்டார். அதே குழந்தை அனாதைச் சிறுவனைப்போல் நாகநாத ஐயரைத் தேடி வந்தபோது அவனைத் தன்னுடன் வைத்துக்கொள்ளாமல் பசுபதியிடமே அனுப்பி விட்டார். பெண் காலமாகியும் அவளை மன்னிக்க முடியாத தகப்பனாரை நினைத்துப் பசுபதி ஆச்சரியப்பட்டார். ஆனால் அதை விட ஆச்சரியப்படும்படியாக நாகநாத ஐயர் மாறிப் போனார் காலக்கிரமத்தில். ரங்கராஜன் சென்னைக் கல்லூரி மாணவனானதும் அவனைக் காண்பதற்காகச் சென்னையில் அவன் தங்கி யிருந்த ஹாஸ்டலுக்கு மாதந் தவறாமல் போகலானார் பெரியவர்.

தாய் அருகில் வரவே பசுபதியின் சிந்தனை தடைப்பட்டது. அவர் தாயிடம், "அம்மா ஒரு காலத்தில் அப்பா லலிதாவிடம் காட்டின வைராக்கியத்தை நினைத்துப் பார்த்தால் இன்று ரங்கராஜனுக்கும் சுமதிக்கும் முடிச்சுப் போட்டவர் அப்பா என்று நம்பவே முடியவில்லை" என்றார். புன்முறுவலுடன். அதற்கு அந்த அம்மாள், "அவர் மனசில் புதைந்திருக்கும் துயரத்தை நீயோ நானோ புரிந்து கொள்ள முடியுமா, பசுபதி! லலிதாவை அவர் தன் உயிர்போல் மதித்திருந்தும் அவள்......அதெல்லாம் இப்போ நினைக்கத் தேவையில்லை. லலிதா குழந்தை குட்டிகளுடன் வாழ்வதைப் பார்க்கத் தான் கொடுத்து வைக்கவில்லை. அந்த வழியில் வரும் புதுக் கொடியாவது புது மலர் சொரிவதைப் பார்க்க அவர் ஆசைப்படுவது சகஜம்தானே!" என்று கூறிக் கொண்டு அங்கே யிருந்து சென்றுவிட்டாள். தாய் கண்ணீரை மறைப்பதற்காகவே அங்கிருந்து சென்றாள் என்று ஊகித்துக் கொண்டார் பசுபதி. "அம்மா, நீ லலிதாவுக்கும் தாய் என்பதை மறந்து போய்ப் பேசி விட்டேன்" என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டார்.

இரவு மணி பத்தாகி விட்டது. சுமதி தாத்தா வீட்டு மாடி அறை ஒன்றில் உட்கார்ந்து ஏதோ புத்தகம் பார்த்துக் கொண்டிருந்தாள். புத்தகத்தின் ஏடுகளை அர்த்தமில்லாமல் புரட்டிக் கொண்டிருந்த அவளுடைய மனசில் நினைவின் ஏடுகள் சில சில புரண்டன. பள்ளியில் படிக்கும் போது அவள் விடுமுறை நாட்களைக் கழிக்கத் தாத்தாவின் வீட்டை அடைவது வழக்கம். நிம்மதியாகப் புத்தகங்களைப் படிக்க வேலிக்கரை கிராமம் வசதியான இடம்.

ஆறு வருஷங்களுக்கு முன் மூன்றும் பாரம் படித்துக் கொண்டிருந்த சுமதி நவராத்திரி விடுமுறைக்குத் தாத்தா வீட்டுக்கு வந்தாள். அவள் வந்த அன்று மாலையில்தான் ரங்கராஜனும் வேலிக்கரைக்கு வந்தான், முதன் முறையாய். அன்று ரங்கராஜன் எவ்வளவு பரிதாபக் கோலத்தோடு வந்திருந்தான் என்பதை இன்றும் நினைத்தால் தெய்வம் யாருக்கும் அவனைப்போல கஷ்டங்களைக் கொடுக்கலாகாது என்று அவள் எண்ணிக் கொள்வாள். கிராப் தலை எண்ணெய் கண்டு எத்தனை நாட்களாயினவோ! உடுத்திருந்த வேஷ்டி சொக்காய் தவிர வேறெதுவுமில்லை துணிமணி. உலகத்திலிருக்கும் சோகம் அனைத்தையும் தாங்கிக் கொண்டிருந்தும் கலங்கிய பார்வை. "நான்" என்று தன்னைப் பாட்டனாரிடம் அறிமுகப்படுத்திக்



எஜமானி (புதிய வேலைக்காரியிடம்) :— நீ முன்பு வேலை பார்த்த இடத்தை ஏன் விட்டாய் என்பதற்குக் காரணம் சொல்லவில்லையே !

வேலைக்காரி :— அது சரிதான். நீங்கள் பழைய வேலைக்காரியை ஏன் அனுப்பி விட்டீர்கள் என்பதற்குக் காரணம் சொல்லவில்லையே !

கொள்ள முயலும்போது உணர்ச்சி வேகத்தில் சொற்கள் வெளி வர மறுத்தன. வாயிலிருந்து அன்று அவனுடைய பெற்றோரின் பரிதாப முடிவைக் கேட்டு "ஐயோ பாவம்" என்று இரங்கியது சுமதியின் உள்ளம். அன்று இரவெல்லாம் ரங்கராஜன் தூங்கவில்லை. முகத்தை வலக் கரத்தால் தாங்கிக் கொண்டு படுக்கையில் உட்கார்ந்து கண்ணீர் வடித்ததைச் சுமதி கவனித்தாள். இரவில் தாத்தா பாட்டி இவர்களுக்கு எதிரில் அவனுக்கு ஆறுதல் சொல்ல அவளுக்குத் துணிவு ஏற்படவில்லை.

மறு நாள் காலை ரங்கராஜன் திண்ணையில் நின்று கொண்டு ஏதோ யோசித்துக் கொண்டிருந்த போது சுமதி அவனருகே போய், "அத்தான், நீங்கள் போனதை எண்ணி வருத்தப்படக் கூடாது என்று வேதாந்தம் பேச நான் தயாராயில்லை. ஆனால் இரவெல்லாம் இப்படி தூக்கம் விழித்துக் கொண்டு உங்கள் உடம்பைக் கெடுத்துக் கொள்ளலாமா என்று யோசியுங்கள். இப்போதும் ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அளவு மீறிக் கவலைப்பட்டாலும் போனவர் வரவா போகிறார்கள் !" என்றாள். அன்று அவ்வளவு தைரியமாய்ப் பேச சுமதியால் எப்படி முடிந்ததோ !

ரங்கராஜன் ஒரு கணம் அவளைப் பார்த்து விட்டு மறுபடியும் சூனியத்தில் கண்களைச் செலுத்திக் கொண்டு, "நான் இப்போ அதைப்பற்றிக் கவலைப் படவில்லை. தாத்தா என்னை உங்கள் தகப்பனாரிடம் போகச் சொல்கிறார். உங்கள் தகப்பனார் என்னை எங்கே போகச் சொல்லுவாரோ !" என்று நிறுத்தினான்.

சுமதிக்குத் தன் அத்தையின் விவாகத்தைப் பற்றித் தெரியும். ஆகவே அவள், "உங்கள் தாயார் தன் தந்தையை மீறி மணந்து கொண்டபோது என் தகப்பனார் தன் தங்கையைத்தான் ஆமோதித்தார்" என்று சமாதானம் சொன்னாள் அன்று.

அவள் எதிர்பார்த்தது போலவேதான் நடந்தது. ரங்கு அத்தானை அவள் தகப்பனார் பசுபதி தம் சொந்தப் பிள்ளைமாதிரி வளர்த்தார். அத்தான் முகம் வாடினால் அவருக்குப் பொறுக்காது. "என் தங்கையின் ஆத்மா நோகும்" என்று சொல்லும் போதே அவர் கண்கள் கலங்கி விடும். ஆனால் காலக்கிரமத்தில் தாத்தாவின் மனம் மாறியது தான் ஆச்சரியம். ஆனால் ஆச்சரியமும் இல்லை தான். அத்தானுடைய சாந்தமான சுபாவம் யார் மனதையும் இழுக்கும் காந்த சக்தி கொண்டது.

அத்தான் பொறுமைக்கு ஒரு உதாரணம். ஒரு முறை அத்தான் நோட் புத்தகத்தின் ஒரு புறத்தில் இலைகளும் மறுபுறத்தில் குறிப்புகளுமாகப் பல பக்கமுள்ள ஒரு பெரிய நோட்டு புத்தகத்தைக் கொண்டு வந்திருந்தான். தாவர சாஸ்திரம் படிக்க, மத்தியானம் அந்தப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு அவன் படித்துக் கொண்டிருந்த சமயம் சுமதி டம்ளரில் காப்பியுடன் அவ்வறைக்குள் நுழைந்தாள். மேஜைமேல் அவள் டம்ளரை வைப்பதும் ஏதோ எடுப்பதற்காக மேஜை 'டிராயரை' அவன் திறப்பதும் ஒன்றாக விருந்தது. மேஜை மேலிருந்த காப்பி டம்ளர் சாய்ந்தது. பிரித்து வைத்த புத்தகத்தின் சில பக்கங்கள் நனைந்து விட்டன. அவன் என்ன சொல்வானோ என்று நடுங்கினாள். ஆனால் அவன், "பரவாயில்லை. இன்னொரு புத்தகம் வாங்கி மறுபடியும் கொஞ்சம் சிரமமெடுத்துக் கொண்டு எழுதி விட்டால் போகிறது" என்றான் புன்முறுவலுடன்.

பாட்டியிடம் இதைச் சொன்னபோது அவள், "அவன் புத்திசாலி. உன்னைத் தாஜா பண்ணுகிறான்" என்று கேலியாய் மறுமொழி கூறினாள்.

பாட்டி சொன்னதுபோல் அவளைத் தாஜா செய்யவில்லை என்றாலும் அவன் என்னமோ சுமதியின் மனதில் இடம் பெற்று விட்டான்.

அவள் அன்று முதல் கண்ட கனவு இன்னும் சில நாளில் நனவாகி விடும். இந்த விவாகம், பாட்டி தாத்தா அவள் பெற்றோர் எல்லோருக்கும் திருப்தியளிக்கக் கூடியது. இந்த சம்பந்தத்தைப் பற்றிய திட நிச்சயம் சுமதியின் மனதில் பலநாளாக இருந்ததாலோ என்னமோ அவள் உள்ளம் இன்று சொல்லுக் கடங்காமல் மகிழ்ந்து பொங்கிக் கொண்டிருக்கிறது. இன்று ரங்கு அத்தான் மனதிலும் அதேமாதிரியான திருப்தி நிலவுகிறதா ! அவன் என்ன எண்ணுகிறான் இப்போது !......

யாருடையவோ காலோசை அவள் சிந்தனையைத் தடை செய்து கொண்டு வந்தது வெளியேயிருந்து.

"நான்தான் ரங்கு! உங்களிடம் சில முக்கிய விஷயங்களைப் பேச வந்திருக்கிறேன்" என்றான் ரங்கராஜன்.

சுமதி எழுந்து கதவைத் திறந்தாள். வாசலில் நின்றிருந்த ரங்கராஜன் முகத்தில் மின்சார ஒளி படிந்து கொண்டிருந்தது. அவனுடைய முகம் களை யிழந்து வாடிப் போயிருந்ததைச் சுமதி கவனித்தாள். ஆச்சரியத்துடன் அவள் ரங்கராஜனிடம், "ஏன் ஒரு மாதிரியா யிருக்கிறீர்கள் ! உள்ளே வந்து உட்காருங்கள், பேசலாம்" என்று கூறினாள்.

ரங்கராஜன் அறைக்குள் நுழைந்தான். இரவின் அமைதியில் இதயத்தின் துடிப்பைக் கேட்டுக் கொண்டு சொல்ல வேண்டியதை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் அவன் சில நிமிஷம் மௌனமா யிருந்தான் அவன். நெற்றியில் வேர்வைத் துளிகள் அரும்பிக் கொண்டிருந்தன.

அவனுடைய கலக்கத்தை உணர்ந்த சுமதி, "விஷயமென்ன ! தாராளமாய்ச் சொல்லுங்கள். உங்களுடைய சுக துக்கங்களில் இனிமேல் எனக்கும் பங்கு உண்டல்லவா !" என்றாள்.

“பங்கில்லை; இருக்க முடியாது என்பதைச் சொல்லத்தான் நான் இப்பொழுது இங்கே வந்தேன்” என்று கூறி விட்டு மேலே பேச முடியாமல் கமலினியைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான் சில கணம்.

கமலி கலவரத்துடன், “அப்படி யென்றால்!” என்று கேட்டது அவனுக்குச் சற்றுத் தெம்பு கொடுத்தது போலும். மேலே அவன் தொடர்ந்தான்: “நான் உங்கள் அத்தை மகன் ரங்கராஜன் அல்ல. இத்தனை நாட்களாக உங்களிடமிருந்து மறைத்து வைத்திருந்த இந்த உண்மையைச் சொல்லத்தான் வந்திருக்கிறேன்.

“மலேயாவில் உள்ள பல ரப்பர் தோட்டங்களின் சொந்தக்காரர்கள் வெள்ளையர். அவர்களுக்கெதிராக அங்கே பெரிய கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறதல்லவா! ஒரு வெள்ளையர் தோட்டத்தின் மானேஜராக இருந்தார் ரங்குவின் தந்தை. அவர் கீழ் வேலை செய்து வந்தார் என் தகப்பனார். மலேயாவில் நெருக்கடி முற்றியதும் ரப்பர் தோட்டத்திலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. ரங்குவின் பெற்றோரும் என் பெற்றோரும் ரப்பர் தோட்டத்திலிருந்து ஒரு லாரியில் வெளியேறிக் குலாலம்பூர் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வந்து கொண்டிருந்த லாரி எப்படியோ ரோடிலிருந்து விலகி ஒரு மரத்துடன் மோதிக் கொண்டது. லாரியிலிருந்த எட்டுப் பேருடைய வாழ்வும் அன்று முடிவடைந்தது.

இதெல்லாம் குலாலம்பூரில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த எனக்கும் ரங்கராஜனுக்கும் மறுநாள் ரப்பர் தோட்டச் சொந்தக்காரர் சொல்லித்தான் தெரியும். அவர் எங்கள் இருவருக்கும் எவ்வளவோ ஆறுதல் கூறி இந்தியாவுக்குக் கப்பல் ஏற்றினார். எனக்கு இங்கே உறவினர் யாருமிருப்பதாகத் தெரியாது. ரங்கராஜனும் நானும் பல வருஷத் தோழர்கள். ஆகவே அவன் என்னை வெளிக்கரைக்கு அழைத்து வருவதாகச் சொன்னான். புகலிடமில்லாதவன் எங்கேயாவது போய்த்தானாக வேண்டுமல்லவா! இருவரும் கப்பலேறினோம். ஆனால் இந்தியாவுக்கு வந்தபோது என்னுடன் ரங்கராஜனில்லை.

“ரங்கராஜன் பலசாலி. நல்ல கட்டமைந்த உடல். முகத்தைப்பார்த்தாலும் கம்பீரம் நிறைந்ததாகவே தோன்றும். ஆனால் அவன் உள்ளம் சிறு அதிர்ச்சியையும் தாங்கத் திறமையற்ற மென்மை பெற்றிருந்தது.

“விஞ்ஞான வகுப்பில் ஒரு முறை ஒரு முயலைக் கொண்டு வந்து அதன் இதயத்தைக் காட்டினார் ஆசிரியர். ரங்கராஜன் வகுப்பை விட்டு வெளியே போய் விட்டான். அதற்கப்புறம் பிராணி சாஸ்திரம் கற்பிக்கும் நாட்களில் ஆசிரியர் அனுமதியுடன் பல தடவை ரங்கராஜன் வெளியே சென்றிருக்கிறான். ‘ஒரு ஆட்டின் துன்பத்தைக் கண்டு மனம் தாளாத புத்தர் மறு பிறவியெடுத்து நம் வகுப்பில் வந்திருக்கிறார்’ என்று ஆசிரியர் அவனைக் கேலி செய்வார். மற்ற மாணவர்கள் “அபி நவ புத்தர்” என்று அவனுக்குப் பட்டம் சூட்டினர்.

“அவனால் பெற்றோரின் கோர முடிவைச் சகிக்க முடியவில்லை. கப்பலில் பைத்தியம் பிடித்தவன் போல் காணப்பட்டான். நான் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. கப்பலின் மேல் தட்டில் கிராதியைப் பிடித்துக் கொண்டு அடிவானத்தைக் கண்களால் அளந்து கொண்டிருப்பான் சதா. இப்படியே இரண்டு நாட்கள் சென்றன. மூன்றும் நாள் அவன் மாலையில் என் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு, ‘வேணு, நானும் நீயும் எட்டு வருஷ காலமாய் ஒன்றாயிருந்திருக்கிறோம். இப்போ நாம் பிரிய வேண்டிய காலம் வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. இந்த எட்டு வருஷ காலத்தில் நீ எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறாய்! என்றைக்குமே நீ என் சோர்வுற்ற மனதுக்கு அரு மருந்தாயிருந்து வந்திருக்கிறாய். ஆனால் இன்று உன்னைக் கொண்டும் என் மனம் தேற மாட்டேன் என்கிறது’ என்றான் வெறி பிடித்தவன்போல். நான் அவன் பதற்றத்தைக் கண்டு திகைத்து, ‘ஏன் ரங்கு இப்படிப் பேசுகிறாய்! நாம் சேர்ந்துதானே இந்தியாவுக்குப் போகிறோம்!’ என்றதும் அவன், ‘இல்லை. என் அப்பா அம்மா என்னை அழைக்கிறார்கள். நான் அவர்களிடம் போக விரும்புகிறேன்’ என்றான். அவனுக்கு என்ன நேர்ந்து விட்டது! பைத்தியம்தான் பிடித்து விட்டதா என்று நான் யோசிக்கும்போது அவன் என்னை இறுகத் தழுவிக் கொண்டு, ‘ஆனால் நான் உன்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன். என் பிரதிநிதியாய் வெளிக்கரைக்குப் போய் நீதான் ரங்கராஜன் என்று சொல்லிக் கொள். அதில் தவறொன்றுமில்லை’ என்றான். ‘தூர வேகத்தில் பிதற்றுகிறவனைப் போல் இவன் ஏன் பிதற்றுகிறான்!’ என்று மனதில் எண்ணிக் கொண்டேன். அவனுக்கு விசேஷ ஆறுதல் ஒன்றும் கூறத் தெரியவில்லை. நாளடைவில் அவன் நிம்மதி அடைவான் என்று எண்ணி விட்டேன். அப்படி நான் எண்ணியது எவ்வளவு முட்டாள்தனமான எண்ணம் என்று மறுநாள் காலையில் பேரதிர்ச்சியுடன்



விழுப்புரத்தில் பிரபல காங்கிரஸ்காரரும் பாங்கருமான ஸ்ரீ S. R. கந்தப் பக்தர் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி சென்ற 6—2—1953 வெள்ளிக்கிழமை யன்று மிக சிறப்பாக நடைபெற்றது.

உணர்ந்தேன். காலையில் அவனைக் கப்பலில் காண வில்லை. எனக்கும் அவனுக்கும் இருந்த சிநேகத்தை அறுத்துக் கொண்டு அவன் இரவுக் கிரவே அலைகடலின் ஆழத்தில் பெற்றோரைத் தேடிச் சென்று விட்டான். அவன் மறைவுதான் நான் அடைந்திருந்த நஷ்டத்தின் உண்மை மதிப்பை எனக்கு உணர்த்தியது. நான் ஏகாங்கியாய் நின்றிருந்தேன். வாழ்க்கைப் பாதை எங்கே அழைத்துச் செல்லப் போகிறது என்று பிரமித்தேன். ரங்குவைப் போல் பாச பந்தங்களை அறுத்துக் கொண்டு என்னை மாய்த்துக் கொள்ள முடிய வில்லை. உயிரிடத்திலுள்ள ஆசையால் நான் ரங்கராஜன் வேஷம் போட்டுக் கொண்டு இங்கே நடித்தேன். என் மனச்சாட்சி ஒவ்வொரு சமயம் இடித்துக் காட்டும். ஆனால் நாளடைவில் மனச் சாட்சியும் மழுங்கி விட்டது. ஆனால் இன்று நிலைமை வேறு. என் பொய்வேஷம் இன்னொருவர் வாழ்வையும் பாதிக்கும். நேற்று இரவு பல காலத் துக்குப் பின் ரங்கராஜனைக் கனவில் கண்டேன். அவனுடைய புன்முறுவல் பூத்த முகம் என்னைப் பார்த்துக் கேலி செய்ததாகவே தோன்றியது...... அநியாயத்துக்கும் எல்லையுண்டல்லவா! என்னை யாரோ ஒருவனாகச் சொல்லிக் கொண்டு உங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அப்புறம் உங்களைப் பார்ப்பதற்குக் கூட எனக்குத் தைரியம் கிடை யாமல் போய்விடும். உங்களை நம்பிக்கைத் துரோ கம் செய்துவிட்டு என்னை நானே இகழ்ந்து கொண்டு இன்பமாய் வாழவா முடியும்!

"நான் துரதிர்ஷ்டம் பிடித்தவன். உங்கள் தாத் தாவும் பாட்டியும் என்னை மன்னிக்கா விட்டா லும் நீங்கள் என்னை மன்னிப்பீர்கள் என்றே நம்புகிறேன். நான் எங்கே யிருந்தாலும் உங்கள் வாழ்வு நிறைவு பெற்றுப் பொலிய ஆண்டவனை வேண்டிக் கொண்டிருப்பேன். இதைச் சொல்லத் தான் நான் வந்தேன். போய் வரட்டுமா!" என்று கேட்டுக்கொண்டு கமலியைப் பார்த்தான் ரங்கராஜன்.

குனிந்த தலையுடன் நின்றிருந்தாள் கமலி. அவள் மனதில் சற்று முன் நிலவியிருந்த அமைதி எங்கே! இப்போது அங்கே வீசும் புயல் எங்கே! மெய் என்று எண்ணிய தனைத்தும் கணப்பொழு தில் பொய்யாகவா முடிவடையப் போகிறது! இப்பொழுது அவள் செய்ய வேண்டியதென்ன! எதிரே நிற்பவன் ரங்கராஜனில்லா விட்டாலும் பல நாளாக அவள் மனதில் இடங் கொண்ட வாலிபன். ஆனால் அவள் அபிப்பிராயம் மட்டு மல்ல பிரதானம், அவள் அபிப்பிராயத்தில் வேணு பெரிய குற்றவாளியில்லா திருக்கலாம். ஆசைக் கெதிரில் நியாயமும் தர்மமும் அற்ப மாகத் தோன்றலாம். ஆனால் அவளுடைய பெற் றோர் இருக்கின்றனர்; பாட்டி, தாத்தா இருக் கிறார்கள். அவர்கள் அபிப்பிராயமென்ன!......

அறைக்குள் யாரோ நுழைவதுபோல் தோன் றவே கமலி நிமிர்ந்து எதிரே பார்த்தாள். அவள் தகப்பனார்தான் அறைக்குள் வந்து கொண்டிருந் தார். "அறையில் இவ்வேளையில் விளக்கு ஏன் எரிகிறது!" என்று கேட்டுக் கொண்டே அவர் வேணுவின் அருகே வந்தார். அவன் தோள்மேல் கைவைத்துக் கொண்டு அவர் 'வேணு என்ன நம்மை விட்டுப் போய்விடக் கதை சொன்னு ணுக்கும்! நான் வெளியே நின்று எல்லாவற்றை யும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். அவன் போவதை நான் விரும்ப வில்லை. உன் அபிப் பிராயமென்ன, கமலி!' என்றார் மகளை நோக்கி.


கமலி ஒரு கணம் தன்னை மறந்து "எனக்கும் இஷ்டமில்லை, அப்பா!" என்றாள். மறுகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "என்னை ஒன்றும் கேட்காதீர்கள், அப்பா. பெரியவர்களாக நீங்கள் எல்லோரும் இருக்கிறீர்கள்" என்று நிறுத்தினாள்.

பசுபதி அவளைப் பார்த்துப் புன்முறுவலுடன், "மற்றவர்கள் அபிப்பிராயத்துக்காக யார் மனத் தையும் கசக்கிப் பார்க்கும் ஆசை எனக்கில்லை, கமலி! உன் அத்தை இன்றைக் கிருந்தால் நான் சொல்வதன் உண்மை தன் சொந்த அனுபவம் என்று சொல்லியிருப்பாள். வேணு நம்மைவிட்டு எங்கும் போகப் போகிறதில்லை. அவன்தான் உன் கணவன். சரிதானே, கமலி!" என்று கேட்டு விட்டு வேணுவிடம், "மனிதனுக்காக நியாயம் ஏற்பட்டதே யொழிய நியாயத்துக்காக மனிதன் ஏற்படவில்லை, வேணு! சந்தர்ப்பங்களை அனு சரித்து நியாயம் அமையும். நியாயத்தை எதிர் பார்க்க, சந்தர்ப்பம் அமையாது. நீ குற்றம் ஏதும் செய்யவில்லை. வா. மனதிலிருந்த சுமை யைக் கீழே இறக்கி விட்டாயல்லவா! நிம்மதி யாய்த் தூங்கு. கமலியும் தூங்கட்டும்" என்று கூறிக் கொண்டு அவனுடன் அறையிலிருந்து வெளியே சென்றார்.

கமலி தந்தையை மானசீகமாக வணங்கிக் கொண்டே, "அப்பா, உங்களுடைய பெண் என்று சொல்லிக் கொள்ளும்படி பெருந் தன்மை யும் உறுதியும் விசால மனமும் எனக்கு அமைய வேண்டும் என்று ஆசி கூறுங்கள்" என்று மனத் துக்குள் வேண்டிக் கொண்டாள்.

மிகவும் குறைந்த விலை!

வாட்டர் புரூப், ஷாக் புரூப் ஒவ்வொன்றும் 10 வரு உத்திரவாதம் எந்த மாடலுக்கும் ஒரே விலை.



பயனீர் வாட்ச் கம்பெனி

தபால் பெட்டி நெ. 11428, கல்கத்தா-6

குறைந்த விலையில் பவுண்டன் பேனாக்கள்



ஸ்வான் கோல்டு நிப்	ரூ. 14/-	கோல்டு கேப்	ரூ. 16/-
பிளாக் பேர்டு	ரூ. 13/-	ஈகுள் ஜெர்மனி	ரூ. 10/-
வெர் ஷார்ப் மாடல்	ரூ. 6/-	வில்சன்	ரூ. 5/-

பார்க்கர் ஜூனியர் மாடல் (ஜப்பான்) ரூ. 7/-

எச். டேவிட் அண்டு கம்பெனி


தபால் பெட்டி நெ. 11424, கல்கத்தா-6

ருசித்து

அனுபவிப்பது

பிரிட்டானியா

பிஸ்கோத்துகள்



லிப்டன்



டீ கெர்ல்
டஸ்ட்
டீ

சிறந்த ஸ்டிராங் டீ
தருகிறது.




பார்த்தாலே சொல்லலாம்
அந்தப்
பாதரக்ஷைக்கு
போட்டிருக்கும்
பாலிஷ் கிவீ
என்று

கிவி பாலிஷ் போடும் போதே உங்களுக்கு அதற்கு முன்னிருந்த பாலிஷின் வித்தியாசம் தெரிந்து விடும்—கிவியின் பளபளப்பைப்பற்றிக் குறை சொல்லவே முடியாது. கிவி பாலிஷ் தோலுக்குள் நுழைந்து, அதைப் பாதுகாத்து, தண்ணீர் தங்காதபடி செய்கிறது. கிவி பாலிஷ் பாதரக்ஷைக்கு வனப்புதரும் இன்ப ஒளியை அளிக்கிறது. இன்றே கிவி பாலிஷ் வாங்குங்கள். பிளாக், டார்க் டான், மற்றும் ஏழு நிறங்களில் கிடைக்கும்.



கவர்ச்சித்தோற்றத்தை விரும்புவோர் பளபளப்பான பாதரக்ஷைகளே அணிகிறார்கள்.



வன தெய்வம்

பரிசுக் கதை : ஏ. கிரைஜ்
(தென்னாப்பிரிக்கா)
மொழிபெயர்ப்பு : வாஞ்சி

அதுவரையில் உற்சாகத்துடன் என்னோடு அளவளாவிப் பேசிக் கொண்டிருந்த டெனிஸின் முகத்தில் திடீரென்று சோகம் படர்ந்தது. கண்களில் நீர் முட்டி நின்றது. சிறிது நேரம் அவனால் பேசவே முடியவில்லை.

''என் கதையைச் சொல்லி விட்டேன்; இனிமேல் உன் கதையைச் சொல்லு, கேட்க வேண்டும்'' என்று நான் கூறியதே அவனிடம் ஏற்பட்ட மாறுதலுக்குக் காரணம்.

டெனிஸ், பக்கத்தில் உட்கார்ந்திருந்த தன் மனைவி மேரியைப் பார்த்த வண்ணம் கூறத் தொடங்கினான்.

''எனது சோகமான கதையில் ஒரு பாதியைத்தான் நான் மேரியிடம் கூறியுள்ளேன். அந்தக் கதையின் முடிவை இதுவரையில் நான் யாருக்குமே சொல்லவில்லை. கதை முழுவதையும் உன்னிடம் கூறிவிட வேண்டும். அப்போதுதான் என் நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் பாரம் குறையும்'' என்றான் டெனிஸ்.

நான் டெனிஸைப் பார்த்துப் பல வருஷங்கள் ஆகி விட்டன. அவனைக் கண்டு பேச என் மனம் துடிதுடித்துக் கொண்டிருந்தது. எனவே அன்று காலை நான் லண்டனுக்கு வந்ததும் வராததுமாக அவனுக்கு டெலிபோன் செய்தேன். அவன் உடனே சர்ரேயிலிருந்து லண்டனுக்கு மோட்டாரில் வந்து என்னை அழைத்துச் சென்றான். சர்ரேயில் உள்ள தன் பங்களாவில் பல நாட்கள் தங்கியிருந்து விட்டுத்தான் போக வேண்டும் என்று என்னை மிகவும் வற்புறுத்தினான்.

1942-ம் வருஷம் இத்தாலியிலே பிரிட்டிஷ் யுத்தக் கைதிகள் முகாமில் நாங்கள் இருவரும் நண்பர்கள் ஆனோம். 1943-ம் வருஷம் இத்தாலி நேச தேசங்களுடன் சமாதானம் செய்து கொண்டபின் ஒரு நாள் ஜெர்மன் படைகள் எங்கள் முகாமை உக்ரமாகத் தாக்கின. அப்போது நாங்கள் அடுத்துள்ள மலையையும் காடுகளையும் நோக்கி ஓடினோம். அதன்பின் டெனிஸை நான் சந்திக்கவே இல்லை. எனவே, ஜெர்மன் தாக்குதலிலிருந்து எப்படித் தப்பினோம் என்பதை ஒருவருக்கு ஒருவர் விவரித்துக் கூறினோம்.

அந்த முகாமில் இருந்த கைதிகளுக்குக் கிராம ஜனங்கள் பல விதத்திலும் உதவி செய்தனர். பலர் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகள் தங்குவதற்குத் தங்கள் வீட்டில் இடம் கொடுத்தார்கள். மற்றும் பலர் கைதிகளுக்கு உணவு அளித்தனர். வேறு பலர் உடைகள் கொடுத்து உதவினார்கள். அவ்விதம் எல்லோரும் நிம்மதியாக இருந்து கொண்டிருக்கையில், இத்தாலி சமாதானம் செய்து கொண்ட செய்தி சகலருக்கும் அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அந்தச் சமயத்தில்தான் ஜெர்மானியரின் கோரத் தாக்குதல் ஆரம்பமாயிற்று. யுத்தக்

கைதிகளை வேட்டையாட முற்பட்ட ஜெர்மன் படைகள் நிரபராதிகளான கிராம வாசிகளையும் விடவில்லை. அவர்களையும் கொடூரமாகப் பலியிட்டனர். மலைக்கும் காட்டுக்கும் ஓடிய கைதிகளைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் ஜெர்மானியரின் துப்பாக்கிகளுக்கும் பீரங்கிகளுக்கும் கை வெடிகுண்டுகளுக்கும் இரையாயினர்.

*　　　*　　　*

நான் தப்பிய விவரத்தை டெனிஸுக்குக் கூறிய பின், டெனிஸ் தான் தப்பிய அதிசயத்தைக் கூறத் தொடங்கினான்:

நான் காட்டுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு குடிசையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது அந்தக் குடிசையின் சொந்தக்காரர் பெருங் கிலியுடன் ஓடி வந்தார். "ஓடிப் போ, ஓடிப் போ! அந்தப் பாவிகள் வந்து விட்டார்கள்" என்று சொல்லிவிட்டுத் திக்குத் திசை தெரியாமல் ஓடினார்.

நானும் மலைச் சரிவில் ஏறிக் காட்டை நோக்கி ஓட்டம் பிடித்தேன். அன்று நான் உயிர் தப்பியது பெரும் விந்தையாகும். என்னைச் சுற்றிலும் தரையில் துப்பாக்கி ரவைகள் பாய்ந்து மண்ணையும் கல்லையும் பெயர்த்த வண்ணம் இருந்தன. நூறு அடி தூரம் ஓடிக் காட்டில் மறைவதற்குள் என் உயிர் என்னிடம் இல்லை. அந்த நூறு அடி தூரத்தைக் கடப்பது நரகத்தைக் கடப்பது போலவே இருந்தது.

நான் காட்டுக்குள் சென்ற பிறகு கூட மரங்களின் மீது தோட்டாக்கள் பாயும் சப்தம் எனக்கு நன்றாகக் கேட்டது. நல்ல வேளையாக அப்போது சூரியன் மறையத் தொடங்கியதால், ஜெர்மானியர்கள் என்னைத் தொடர்ந்து வரவில்லை. இல்லாவிடில் ஏராளமான கைதிகள் நான் ஓடிய பக்கமாகப் போயிருக்கக் கூடும் என்று எண்ணி, அவர்கள் என்னைத் தொடர்ந்து வந்திருப்பார்கள்.

நான் ஓடிக் கொண்டேயிருந்தேன். ஓடி என்ன பலன்? மெயல்லா மலைப் பிரதேசத்தை யாராவது கடந்து செல்ல முடியுமா? அவ்வாறு செல்வது சாத்தியமாயின் யுத்தக் கைதிகளான நாங்கள் வெகு காலத்துக்கு முன்பே அந்த மலையைக் கடந்து ஓடித் தப்பித்துக்கொண்டிருப்போமே! எனினும் ஜெர்மானியர்களின் துப்பாக்கிக்கு இரையாவதைக் காட்டிலும் மலையைக் கடந்து செல்லும் முயற்சியில் மாண்டு போவதே மேல் என்று எனக்குத் தோன்றியது.

அப்படி ஓடிக் கொண்டிருக்கையில் பூமிக்குக் கீழே திடீரென்று பெரும் சப்தம் கேட்டது. உடனே பூமி அதிர்ந்து என்னைத் தூக்கி வாரிப் போட்டது. ஒன்று பூகம்பமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் ஜெர்மானியர்களின் விசித்திரமான வெடி குண்டுகளின் வேலையாக இருக்க வேண்டும் என்று பிரமித்துப் போய்த் தடுமாறிக் கீழே விழும் தறுவாயில் இருந்தேன்.



பிறகுதான் அந்தப் பிரதேசங்களில் மலைக்குக் கீழே குடையப்பட்டு ரயில் போகிறது என்ற ஞாபகம் எனக்கு வந்தது. அப்போது பூமிக்குக் கீழே ரயில் சென்றதுதான் மேற்படி அதிர்ச்சிக்குக் காரணம் என்பதை ஊகித்துக் கொண்டேன்.


*　　　*　　　*

அதே சமயம் மற்றொரு அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடிய சம்பவம் நிகழ்ந்தது. பூமியிலிருந்து முளைத்தாற்போல் திடீரென்று ஒரு கிழவர் என் முன் தோன்றி என் கையை இறுகப் பிடித்தார்.

என் திகைப்பு தணிந்து அவர் யார், நண்பரா, விரோதியா, என்பதை நான் தீர்மானிப்பதற்குள் அவர் என்னை ஒரு குறுக்குப் பாதை வழியாக இழுக்கத் தொடங்கினார்.

"நீ திரும்பிப் போனால் ஜெர்மானியர்களின் துப்பாக்கிக்கு இரையாவாய். நேராகப் போனால் முடிவற்ற கானகத்தில் சிக்குண்டு துஷ்டமிருகங்களுக்குப் பலியாவாய்."

இவ்விதம் அந்தக் கிழவர் கூறிய பின்தான் எனக்கு அவர் விஷயத்தில் நம்பிக்கை உண்டாயிற்று. எந்த விநாடியில் பேராபத்தில் சிக்கி உயிர் பலியாகப் போகிறதோ என்று பரிதவித்துக் கொண்டிருந்த எனக்கு அந்தக் கிழவர் கை கொடுத்தது, அந்த வனத்தில் உள்ள தெய்வமே என் உதவிக்கு வந்தது போல் தோன்றியது. என் காலடியைத்



தொடர்ந்து வந்த மரணம் அந்தத் தெய்வத்தைக் கண்டதும் ஓடி மறைந்து விட்டது போலத் தோன்றியது.

சிறிது நேரம் வரையில் அந்தக் கிழவர் என் கையைப் பிடித்த வண்ணம் சென்றார். பிறகு என் கையை விட்டு விட்டு வெகு வேகமாக நடந்தார். அந்தக் கிழவருக்குச் சரியாக நடப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அவரது தேக பலமும் திடசித்தமும் உற்சாகமும் என்னை வெட்கித் தலை குனியும்படி செய்தன.

அவர் என்னுடன் பேசிக் கொண்டே சென்றார். அவரது பேச்சிலிருந்து கீழ்க் கண்ட விவரங்களைத் தெரிந்து கொண்டேன்.

ஆர்தர் தக்கி என்பது அவரது பெயராம். அவரது புதல்வனான பீட்ரோவும் மருமகளான மேரியானும் அவருடனேயே காட்டில் இருந்தார்கள். பீட்ரோ நல்ல குணசாலி. அவனுடன் பழகியவர்கள் அவனை ஆயுள் உள்ளவரையில் விட்டுப் பிரிய மாட்டார்கள் என்றும் கிழவர் பெருமையுடனும் உற்சாகத்துடனும் குறிப்பிட்டார்.

"ஜெர்மானியர் தாங்கள் படையெடுக்கும் கிராமங்களில் உள்ள நிரபராதிகளான ஜனங்களைக் கூட இரக்கமின்றிக் கொன்று விடுகிறார்கள். அதனாலேயே நாங்கள் இங்கு ஓடிவந்து காட்டிலேயே காலம் தள்ளி வருகிறோம். இனி யுத்தம் நின்ற பின்தான் நாங்கள் எங்கள் கிராமத்துக்குச் செல்லுவோம். ஜெர்மானியர்களிடம் பலியாகாமல் தப்பி இங்கு வருவோருக்குப் பாதுகாப்பு அளித்து, அவர்களைப் பத்திரமாக மலைக்கு அப்பால் கொண்டு போய் விடுவதே பீட்ரோவின் வேலை. எனவே, நீ பயப்பட வேண்டாம். சில நாட்கள் எங்களுடனேயே தங்கியிரு. பிறகு பீட்ரோ மலையை குறுக்குப் பாதையின் வழியாகக் கடந்து உன்னை அப்பால் கொண்டு போய் விட்டு விடுவான்" என்று முடித்தார் அந்தக் கிழவர்.

"நீங்கள் இருக்குமிடத்துக்கு ஜெர்மானியர் வர மாட்டார்களா?" என்று கேட்டேன்.

"இங்கு வருவது எளிதான காரியம் இல்லை. இங்கு வரும் குறுக்கு வழியை நன்கு அறிந்தவர்கள்தான் இங்கு வர முடியும். இல்லாவிடில் காட்டில் திரிந்து அலைந்து வழி தெரியாமல் பட்டினி கிடக்கும்படி நேரும். அப்படியே அவர்கள் வந்தாலும் அவர்களிடம் சிக்காமல் தப்பித்துக் கொள்வதற்காக மலைக் குகைக்குள் ஓடி விடுவோம்" என்றார்.

இவ்விதம் பேசிக் கொண்டே சென்றதால், எனக்கு வழி போனதே தோன்றவில்லை. எனினும் நாங்கள் வெகுதூரம் வந்து விட்டோம் என்பது மாத்திரம் தெரிந்தது.

அந்தச் சமயம் சந்திரனும் உதித்ததால் சூழ்ந்த அந்தகாரம் மறைந்து சிறிது வெளிச்சம் ஏற்பட்டது.

கடைசியாக, கிழவரின் குடிசைக்கு வந்து சேர்ந்தேன். அங்கு வெளிப்புறத்தில் நின்று கொண்டிருந்த இளம் தம்பதிகளைக் கண்டதும் அப்படியே பிரமித்துப் போய் நின்று விட்டேன். அத்தகைய அழகான, பொருத்தமான தம்பதிகளை அதற்கு முன் நான் பார்த்ததே யில்லை. ராஜ மாளிகையில் இருக்க வேண்டிய அத் தம்பதிகள் காட்டில் தனிமையாக வாழ்க்கை நடத்தும் கோலம் என் மனத்தை வேதனைக்கு உள்ளாக்கியது. அந்தச் சூழ் நிலையில், யாரையும் பிரமிக்க வைக்கும் கட்டழகியான மேரியான் ஒரு வனதேவதையைப் போல் தோன்றினாள்.

கிழவர் அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். கிழவரின் முகத்தில் அப்போது பெருமிதம் தாண்டவமாடியது.

அவர்கள் எனக்கு அளித்த உணவும் பழங்களும் மிகவும் ருசியாக இருந்தன. அந்தக் காட்டில் கூட அவர்கள் ஆடு வளர்த்துக் கொண்டிருந்ததால் எனக்கு ஆட்டுப் பாலும் கிடைத்தது. கிழவரின் மகனான பீட்ரோவும் அவன் மனைவி மேரியானும் என்னிடம் சகஜமாகவும் அன்புடனும் பழகினார்கள். அவர்களுடைய இனிய குணம் அவர்களது அழகுக்கு அழகு செய்வதாக இருந்தது.

"என் தந்தை உங்களைக் கண்டு இங்கு அழைத்து வராவிட்டால், என்ன நேர்ந்திருக்குமோ?" என்றான் பீட்ரோ.

சகோதரனிடம் எவ்விதம் பழகுவார்களோ, அவ்விதமே பீட்ரோவும் மேரியானும் என்னுடன் பழகினார்கள். மாலை வேளை

களில் அவ்விருவரும் சேர்ந்து பாடுவது என் செவிகளுக்கு அமுதமாக இருந்தது. எனவே, நான் காட்டிலிருந்து வெளியேறுமுன் அவர்களுடன் சில நாட்கள் தங்கி யிருக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னை ஆட்கொண்டது.

அதற்கு முன் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகள் அடங்கிய பல கோஷ்டிகளுக்குப் பீட்ரோவும் அவனது தந்தையும் அபயம் அளித்து, அவர்களை மலைக்கு அப்பால் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்துள்ளனர் என்பது எனக்குத் தெரிய வந்தது.

சிற்சில நாட்களில் பீட்ரோ என்னை மலை உச்சிக்கு அழைத்துச் செல்வது உண்டு. அங்கிருந்து பார்ப்போருக்குச் சந்திரன் உதயமாவது என்றென்றும் மறக்க முடியாத கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

* * *

யுத்தம் முடியும் வரையில் நான் அவர்களுடனேயே இருக்க வேண்டும் என்று அம்மூவரும் வற்புறுத்தினார்கள். எனினும் அவ்வளவு காலம் அவர்களுக்குப் பாரமாக இருக்க நான் விரும்பவில்லை. எனவே, ஒரு நாள் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட முற்பட்டேன்.

கிழவர் ஆர்தர் தக்கி என்னை மலையுச்சி வரையில் கொண்டு வந்துவிட்டுத் திரும்பினார். பீட்ரோவும் மேரியானுவும் மேலும் தொடர்ந்து என்னுடன் வந்தனர். நான் அவர்களை விட்டுப் பிரிந்து செல்லுவதில் அவர்களுக்குச் சிறிதும் விருப்பமில்லை என்பதை அவர்களுடைய முகங்கள் நிதர்சனமாக எடுத்துக் காட்டின.



தாயார் :—என்னடா கோலம் இது? அடுத்த வீட்டுப் பையனோடு விளையாடாதே என்று உனக்கு எவ்வளவு தடவை சொல்வது?

பையன் :—ஏன், அம்மா? என்னைப் பார்த்தால் விளையாடின மாதிரியா தெரிகிறது?

அவர்கள் என் உயிரைக் காப்பாற்றி என்னை ஆதரித்ததற்கே நான் அவர்களுக்கு என் ஆயுள் உள்ளளவும் கடமைப் பட்டுள்ளேன். அப்படி யிருக்க, அவர்கள் என் விஷயத்தில் காட்டிய அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

"இனி நீங்கள் செல்லலாம். இங்கிருந்து சுமார் பதினைந்து மைல் தூரத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. நீங்கள் அங்கு சென்று விட்டால், பிறகு அங்கிருந்து உங்கள் நாட்டுக்குச் செல்வதற்கு யாதொரு தடையும் ஏற்படாது" என்றான் பீட்ரோ.

அவர்கள் எனக்கு இரண்டு, மூன்று நாளுக்குத் தேவையான உணவைத் தயாரித்துக் கொடுத்ததுடன், செலவுக்குப் போதிய தொகையும் கொடுத்திருந்தார்கள்.

கண்களுக்குத் தெரியும் வரையில் நான் அவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றேன். அப்போது மேரியானு பீட்ரோவின் தோளில் சாய்ந்துகொண்டிருந்தாள். பீட்ரோ தன் கைக்குட்டையால் அவள் கண்களைத் துடைத்ததிலிருந்து அவள் கண்ணீர் விட்டிருக்க வேண்டும் என்பதை நான் ஊகித்துக் கொண்டேன்."

இவ்விதம் கூறிய டெனிஸின் கண்கள் கலங்கின. அதைக் கண்ட மேரியும் கண்களைக் கசக்கிக் கொண்டாள். உடனே அவள் உள்ளே சென்று எங்களுக்குக் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். சோகமான கதையைக் கூறிய டெனிஸுக்கும் கதையைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்கும் அச்சமயம் அவள் கொடுத்த காப்பி அத்தியாவசியமாக இருந்தது.

நாங்கள் காப்பி சாப்பிட்டதும், "அவ்வளவு உத்தமர்களான ஆர்தர் தக்கி, பீட்ரோ, மேரியானு இவர்களை மறுபடியும் சந்திப்பதற்காக நீ இத்தாலிக்குச் செல்லவில்லையா?" என்று கேட்டேன்.

"என் கதையின் கடைசிக் கட்டம் இதுதான்" என்று கூறிவிட்டு, டெனிஸ் மேலும் தொடர்ந்தான் :

அவர்களைப் பார்த்து என் நன்றிக் கடனைச் செலுத்துவதற்காக நான் சென்ற வருஷம் இத்தாலிக்குச் சென்றேன். ரோம் நகரில் நான் தங்கியபோது, யுத்தம் மேற்படி நகரின் பெருமையை எவ்வளவு தூரம் சிதைத்து விட்டது என்பதை நேரில் கண்டேன்.

அங்கு ஜனங்களிடையே ஒழுக்கம் என்பதே இல்லை. பெண்கள் படு மோசமாக நடந்து கொண்டார்கள். எங்கு பார்த்தாலும் கறுப்பு மார்க்கெட்டும் வறுமையும் பிணியும் தாண்டவமாடின.

மறுபடியும் மெயல்லா மலைப் பிராந்தியத்துக்குச் செல்லலாமா? அங்கு சென்றால் அவர்கள் அந்தக் காட்டில் இன்றும் இருப்பார்களா? அப்படியே இருந்தாலும் காட்டுக்குள் சென்று அவர்களைக் கண்டு பிடிப்பது சுலபமான காரியமா?

இவை போன்ற பல கேள்விகள் என் மனத்தில் எழுந்தன. இவ்விஷயமாகச் சிந்

த்துக் கொண்டே நான் ரோம் தெருக்களின் வழியாகச் சென்றபோது, ஓரிடத்திலிருந்த விளம்பரப் பலகை திடீரென்று என் கவனத்தைக் கவர்ந்தது.

அதில் "நேச தேசத் தகவல் ஸ்தாபனம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

உள்ளே சென்று விசாரித்துப் பார்ப்போம் என்ற உத்தேசத்துடன் அந்தக் கட்டிடத்துக்குள் சென்றேன். அங்கு ஒரு அமெரிக்க சார்ஜெண்ட் உட்கார்ந்திருந்தார்.

"நான் இந்த நாட்டில் பிரிட்டிஷ் கைதியாக இருந்தவன். மாயெல்லா மலைப் பிராந்தியத்தில் இருந்த ஒரு குடும்பத்தினர் நான் ஜெர்மானியர்களிடமிருந்து உயிர் தப்புவதற்குப் பேருதவி புரிந்தனர். அவர்களைப் பற்றிய தகவல் ஏதாவது இங்கிருந்து கிடைக்குமா?" என்று கேட்டேன்.

"உங்களைப்போல் நானும் ஜெர்மானியர்களின் கையில் அகப்படாமல் தப்பிச் சென்று உயிர் பிழைத்தவன் தான். தப்புவதற்கு உதவி புரிந்தவர்களைப் பற்றி நீங்களாவது வந்து விசாரிப்பதைக் குறித்து நான் சந்தோஷம் அடைகிறேன்" என்றார் சார்ஜெண்ட்.

சார்ஜெண்டின் பதில் என் உள்ளத்தில் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. பேராபத்திலிருந்து என்னைக் காப்பாற்றி எனக்கு உயிர் அளித்த உத்தமர்களுக்கு ஓரளவாவது நன்றிக் கடனைச் செலுத்த எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கப் போவதைக் குறித்து என் மனத்தில் ஆனந்தம் ஏற்பட்டது.

"ஏன், வேறு யாரும் அவர்களைப் பற்றி விசாரித்துக் கொண்டு வரவில்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

ஏனெனில் அச்சமயம் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகள் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. பெரும்பாலான கைதிகளும் ஜெர்மானியரின் துப்பாக்கிகளுக்குப் பலியாயினர். கைதிகளுக்கும் சுதந்திரத்துக்கும் நடுவில் மாபெரும் மலையும் காடும் இருந்ததால், ஒரு சிலரே உயிர்தப்பியிருக்க வேண்டும். அவர்களும் கருணை உள்ளம் படைத்த சில உத்தமர்களின் உதவியினால்தான் உயிர் தப்பியிருக்க முடியும். எனவே, அப்படிப்பட்டவர்களுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிக்க யாருமே வரவில்லை எனில், அது மிகுந்த வேதனையையும் வெறுப்பையும் கொடுக்கக் கூடிய விஷயம் அல்லவா?

"நூற்றுக்கணக்கானவர்கள் இத்தாலிக்குத் திரும்பி வந்திருக்கிறார்கள். ஆனால் தாங்கள் உயிர் தப்புவதற்கு உதவி புரிந்தவர்களின் க்ஷேம லாபங்களை விசாரித்துக் கொண்டு இரண்டொருவர்தான் இந்த இடத்துக்கு வந்தார்கள்" என்றார் சார்ஜெண்ட்.

பிறகு அவர் உள்ளே சென்று ஒரு குறிப்புப் புத்தகத்தைக் கொண்டு வந்தார். உடனே நான் அதை அவரிடமிருந்து மிகுந்த ஆர்வத்துடன் வாங்கிப் பார்த்தேன்.



போட்டோ எடுப்பவர் :— டேய்! காசு ஒன்றும் கொடுக்க முடியாது. வேண்டுமானால் உன் பிள்ளை குட்டிகளையெல்லாம் அழைத்து வா. போட்டோ எடுத்து பத்திரிகையில் இனாமாகப் போடுகிறேன்.

பிச்சைக்காரன் :— அதுதான் நடக்காதுங்க. அப்படித்தான் ரொம்ப ஏழைங்களை ஏமாத்திகிட்டு திரியறீங்க. எங்களை போட்டோ எடுக்கணும்னா எங்கள் ரேட்டைச் சொல்லிவிடுகிறேன். 'பீனாஷ்' பல்பு போட்டு எடுத்தால் ஒரு தடவைக்கு 20 ரூபாயும் வெறும் 'ஸ்நாப்பு' மட்டும் என்றால் ரூபாய் 15ம் கொடுத்தால் போட்டோ எடுக்கலாம்.

அதில் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகள் உயிர் தப்புவதற்கு உதவி புரிந்தவர்களின் பெயர்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பெயருக்கு எதிரிலும் X என்றும், O என்றும் அடையாளங்கள் காணப்பட்டன. அந்த அடையாளங்கள் எதைக் குறிப்பிடுகின்றன என்று சார்ஜெண்டைக் கேட்டேன்.

X அடையாளத்துக்கு எதிரே உள்ளவர்கள் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகளுக்கு உதவி புரிந்ததற்காக வெகுமதி பெற்றவர்கள். O அடையாளத்துக்கு எதிரே உள்ளவர்கள் மேற்படி கைதிகளுக்கு உதவி புரிந்த 'குற்ற'த்துக்காகக் கொடிய ஜெர்மானியர்களால் சுடப்பட்டு மாண்டவர்கள் என்றார் சார்ஜெண்ட்.

இவ்விதம் கூறி முடிப்பதற்குள் டெனிஸ் முகத்தை இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டு விம்மத் தொடங்கினான். மேரியின் கண்களிலிருந்தும் நீர் வழிந்தது.

"டெனிஸ், அந்த உத்தமர்களின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்தனை செய்வோம், எழுந்து வா!"

இவ்விதம் சொல்லி நான் டெனிஸையும் அவனது மனைவியையும் அப்பால் அழைத்துச் சென்று ஆறுதல் கூறினேன்.

கோலினாஸ்

இயற்கையின் அற்புதப் பச்சை க்ளோரோபில் சேர்ந்தது

...உங்கள் பல் சுத்திகரிப்பில் இதுவரை ஏற்படாத மாபெரும் அபிவிருத்தி!

செடிகொடிகளை பசுமையுடன் வைத்திருக்கும் பொருளாகிய இயற்கையின் சிருஷ்டி க்ளோரோபில் உதவியால் நாள் முழுதும் வாய் துர்நாற்றத்தை அகற்றுங்கள்....பல் சிதைவும் சாதாரண ஈறுக்கோளாறுகளும் ஏற்படாமல் தடுங்கள்!

உங்கள் பல் பராமரிப்புக்கு இதுவரை யில்லாத முறையில் மிகப் பயன்படக்கூடிய மார்க்கம் இதுவே, சந்தேகமில்லை. க்ளோரோபில் சேர்த்த அற்புதமான கோலினாஸ் பல் சிதைவையும் கேடிக் கிருமிகளையும் கோடியாகத் தாக்குவது மட்டுமின்றி, வாய் துர்நாற்றத்தையும் நாள் முழுவதிலும் ஒழித்து விடுகிறது. இதற்குக் காரணம் இந்தப் பச்சை க்ளோரோபில் தான் — தாவரங்களை பசுமையுடன் வைத்திருக்க இயற்கையால் சிருஷ்டிக்கப்பட்ட அற்புத ரசாயனப் பொருள்!

க்ளோரோபில் சேர்த்த கோலினாஸ் விசேஷ பலனளிப்பது தவிர, சிக்கனமானதுங்கூட—ஈரமில்லாத பிரஷ் மீது அரைஅங்குலமே போதுமானது. பச்சை அட்டைப் பெட்டியில் எல்லா கடைக்காரர்களிடமும் கிடைக்கும். இன்றே வாங்கி, தந்த விஞ்ஞானத்தில் இதுவரை யில்லாத இம்முன்னேற்ற அபிவிருத்தியின் பயனை அடையுங்கள்!

புதிய பச்சை அட்டைப் பெட்டியை கவனியுங்கள்
ஸ்டாண்டர்ட் கோலினாஸ் (மஞ்சள் லேபில்) கூட கிடைக்கும்

2000 அமெரிக்க பல் நோயாளிகள் க்ளோரோபிலின் குணங்களை நிரூபிக்கின்றனர்

நான்கு வருட ஆராய்ச்சி மற்றும் சுமார் 2000 அமெரிக்க பல் நோயாளிகளைக்கொண்டு நடத்தப்பட்ட மிக விரிவான சோதனைகள்....இவைகளின் பலனாக நிரூபணமானது என்னவெனில், க்ளோரோபில்லுடன் கூடிய டென்டல் கிரீம்:—

- வழக்கமான சில வகை ஈறுக் கோளாறுகளையும் நிறுத்துகிறது.
- நாள் பூராவும் வாயில் துர்நாற்றம் ஏற்படாமல் தடுக்கிறது.
- பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்துக்கட்டுகிறது.

உங்கள் பல் டாக்டர் இச்சோதனைகளைப்பற்றி அறிவார்....அதனுடைய பலன்களையும் ஊர்ஜிதம் செய்வார்.





'கோலினாஸ்' புன்னகையில் ஆரோக்கியம் ததும்புகிறது!

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜியோஃப்ரே மானர்ஸ் அண்ட் கோ., லிமிடெட், பம்பாய் 1. கிளைகள்: கல்கத்தா — மதராஸ் — டில்லி



4. "கடவுள் ஒருவர் இல்லையா?"

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு மிர்ஜா தாவூத் மற்றும் சில பிரமுகர்களுடன் அரசர் சாமரி யிடம் சென்று முறையிட்டார். அதற்குச் சாமரி, "என் ராஜ்யத்தில் அவர்கள் வெளிப்படையாக எவ்விதத் தீங்கும் இழைக்க முயலாத வரையில், நான் அவர்களை ராஜ்யத்திலிருந்து வெளியேற்ற முடியாது. உங்களில் யாருக்காவது தனிப்பட்ட முறையில் ஏதாவது தீங்கு நேர்ந்திருந்தால், நீங்கள் பழி தீர்த்துக் கொள்ளலாம். அதில் தலை யிட்டு நான் தடுக்க மாட்டேன்" என்றார்.

எல்லோரும் சாமரிக்குப் போர்த்துகீசியர்கள் இங்கே வந்துள்ளதன் நோக்கம் என்னவா யிருக் கும் என்பதைப்பற்றித் தங்கள் தங்களுக்குத் தோன்றியதை யெல்லாம் எடுத்துச் சொல்ல முற் பட்டனர். "பரங்கியர்கள் பொல்லாதவர்கள், கெட்ட நோக்கம் கொண்டவர்கள்; போர் புரிவதிலும் வல்லவர்கள். சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது அவர்கள் தங்கள் அரசாங்கத்தையே கூட அபகரித்துக் கொள்ளத் தயங்க மாட் டார்கள்" என்றெல்லாம் கூடச் சொன்னார்கள்.

அதற்குச் சாமரி சிரித்து, "எனது சைன்ய பலம் குறைவானது என்பது உண்மைதான். ஆனால் கடந்த ஐந்நூறு வருஷ காலமாகச் சாமரி வம்சம் இந்த ராஜ்யத்தை ஆண்டு வந்திருக்கிறது. இதை யாராலும் அழித்து நாசம் செய்ய முடியவில்லை; முடியவும் முடியாது. ஏனெனில் எனது ஆட்சி மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று நடந்து வருகிறது. அப்படி யிருக்கும்பொழுது அவர்கள் எனக்கு என்ன தீங்கிழைத்து விட முடியும்! மக்களின் நல்லெண்ணம் எனது ஆட்சிக்குப் பக்க பலமாக இருந்து துணை புரியும் வரை யாரும் எனது அரசாங்கத்தை அசைக்க முடியாது. கவ லைப்படாதீர்கள்" என்றார்.

எல்லோரும் நம்பிக்கை இழந்து திரும்பினர்.

ஒரு வாரம் கழித்துச் சாமரியிடம் உடன்படிக் கைப் பத்திரம் கையெழுத்திட்டு வாங்கிக் கொண்டு வாஸ்கோ டி காமா தன் நாட்டுக்குப் புறப்பட்டான். போகும்பொழுது அவனை வழி அனுப்ப வந்த மிர்ஜா தாவூத், "வாஸ்கோ டி காமா! நீ செய்த பிரதிக்கினையை மறந்து விடாதே!" என்றார்.

குறும்புச் சிரிப்பு ஒன்றை உதடுகளிடையே வரவழைத்துக் கொண்டு, "நாம் மறுபடியும் சந்திப்பதற்கு இன்னொரு சந்தர்ப்பமும் நேரலாம் அல்லவா" என்று கேட்டான் வாஸ்கோ டி காமா.

"முடியாத காரியம். ஏனெனில் நான் உண்மை யான முகம்மதியன். நரகத்துக்குப் போக மாட் டேன். சொர்க்கத்துக்குத்தான் போவேன்!" என்றார் மிர்ஜா தாவூத்.

"இல்லை, இல்லை! நான் அடுத்த ஜன்மத்தைப் பற்றிச் சொல்லவில்லை. இதே ஜன்மத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். இந்த ஜன்மத்தி லேயே ஏன் இன்னொரு சந்திப்பு ஏற்படக் கூடாது!" என்று கேட்டான் வாஸ்கோ டி காமா.

பிறகு அவன் தன் மூன்று கப்பல்களையும் எடுத் துக் கொண்டு வந்த வழியே தன் நாட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

அதற்குப் பிறகு நான்கு வருஷங்கள் ஓடி விட்டன. இந்த நான்கு வருஷங்களுக்கிடையே நடந்த சம்பவங்களுக்கும் இந்தக் கதைக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் இல்லை. என் றாலும் அவற்றைப் பற்றியும் இங்கே குறிப்பிடு வது அவசியம். வாஸ்கோ டி காமா சென்ற இரண்டு வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் ஒரு போர்த்துகீசியக் கப்பல் கூட்டம் இந்தியாவுக்கு வந்தது. இந்தக் கப்பலுக்குத் தலைவனின் பெயர் கேலா. துறைமுகத்துக்குள் நுழைந்ததும் நுழை யாததுமாகக் கேவலாவின் ஒன்பது கப்பல்கள்

வெடி மருந்தை உபயோகிக்கத் தொடங்கினர். அதன் பயனாகப் பயங்கரப் போர் மூண்டது. போரில் தோல்வியுற்ற பரங்கியர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்பி ஓடினர். அதன் பிறகு இரண்டு வருஷங்கள் அமைதி நிலவியது.

இந்தச் சம்பவம் நடந்த இரண்டு வருஷங்களுக்குப் பின் மிர்ஜா தாவூத் தம் மனைவியையும் பெண்ணையும் அழைத்துக் கொண்டு மக்கா யாத்திரைக்குப் புறப்பட்டார். சில நாட்கள் மக்கா வாசம் செய்த பிறகு தம் கிழட்டுத் தந்தையையும் தம்முடன் கூடவே அழைத்துக் கொண்டு அவர் மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்பினர்.

அவர் மக்காவில் இருந்த பொழுது சில பிரமுகர்கள், "நீங்கள் கள்ளிக்கோட்டைக்குப் போவதாயிருந்தால் எங்களுடன் வாருங்கள்" என்று சொன்னார்கள். மிர்ஜா தாவூத் அவர்களுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டார். மக்காவிலிருந்து புறப்படும் கப்பல் கள்ளிக் கோட்டைக்கு வந்து சேருவதற்குக் குறைந்தது மூன்று மாதங்களாவது பிடிப்பது வழக்கம்

மக்காவிலிருந்து புறப்பட்ட கப்பல் செங்கடல், அரபிக் கடல், பாரசீகக் கரை முதலியவற்றைத் தாண்டிக் கொண்டு காலக்கிரமத்தில் இந்து மகா சமுத்திரத்தை அடைந்தது.

கடல் அலைகள் மீது கப்பல் பிரயாணம் செய்யும் மக்களுக்குத்தான் என்ன மகிழ்ச்சி; நெளி நெளியாகச் செல்லும் அலைகளைப் போல் மக்களின் மனத்திலும் பற்பல சிந்தனை அலைகள் நெளிந்து கொண்டிருந்தன. பாரதம் செல்லும் பெரு மகிழ்ச்சியில் மக்கள் சிரித்து விளையாடி வேடிக்கைப் பேச்சுப் பேசிப் பொழுதைப் போக்கிக்கொண் டிருந்தனர். வான வீதியில் மிதக்கும் மேகக் கூட்டங்கள் பற்பல கற்பனை யுருவங்கள் தரித்து அவர்களுடைய மகிழ்ச்சிக்கு, மேலும் மகிழ்ச்சி யூட்டிக் கொண்டிருந்தன. அவை ஒன்றை யொன்று பிடிக்க முன்னேறும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. விரிந்த வானமும் பரந்த கடலும் மக்களுக்குப் பிரயாண அலுப்பு ஏற்படாமல் இருக்கும் வண்ணம் தங்கள் தங்களுக்குத் தெரிந்த ஜால வித்திரங்களைப் புரிந்து கொண்டிருந்தன.

அன்று வெள்ளிக் கிழமை. மத்தியானப் பொழுது கழிந்து மாலைப் பொழுது நெருங்கிக் கொண்டிருந்தது. கப்பலின் மேல் தளத்துக்குச் சென்று மக்கள் 'நமாஜ்' படித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அகஸ்மாத்தாக மக்கள் மேகங்களைப் போலப் பயங்கரக் கர்ஜனை புரிந்து கொண்டு நாலு பரங்கிக் கப்பல்கள் தங்கள் கப்பலை நோக்கி முன்னேறி வருவதைக் கண்டனர். அதைக் கண்டதும் பயத்தினால் எல்லோருடைய இருதயமும் படபட வென்று அடித்துக் கொண்டது.

கூரிய புத்தியையும் கண்களையும் உடைய மிர்ஜா தாவூத்துக்கு அவை எந்த நாட்டுக் கப்பல்களாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. அவர் உள்ளத்தின் ஆழத்தில் ஏதோ ஒன்று, "இன்று நாம் தப்ப முடியாது. அவர்கள் நம்மைப் பழி வாங்கி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார்கள்" என்று சொல்லிற்று.

இதற்கு முன் இந்தக் கடற்பாதையில் இதுவரை நீர்ச்சண்டை நிகழ்ந்ததில்லை. அதனாலேயே அந்த நாட்களில், தரை மார்க்கத்தைவிட நீர் மார்க்கம் ஆபத்துக் குறைவானதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் இனி அந்தப் பேச்சுக்கு இடம் இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது. பரங்கியர்கள் தன் நலத்தைப் பூர்த்தி செய்து கொள்ள உத்தேசித்து வழியைத் தடுத்து மறித்து விட்டார்கள்.

அவர்களை எதிர்த்து வெற்றி கொள்ள முடியாது என்று மிர்ஜா தாவூத்துக்குத் தோன்றியது. யாத்திரீகர்கள் கப்பல் ஆனதால் அதில் போர்த் தளவாடங்கள் ஒன்றும் இல்லை. அதைத் தவிர அதில் இருந்த பிரயாணிகள் அத்தனை பேரும் மக்கா யாத்திரை செய்துவிட்டுத் திரும்புபவர்கள் வேறு. அந்நிலையில் எப்படியாவது சண்டையைத் தவிர்த்துக் கொண்டு ஓடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி புலப்படவில்லை. ஆகவே, மிர்ஜா தாவூத் கப்பலோட்டிகளைக் கூப்பிட்டு, "கப்பலில் இருக்கும் பாய்கள் அனைத்தையும் இச் சமயம் உபயோகப் படுத்துங்கள். எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் நாம் இங்கிருந்து முன்னேற முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது" என்றார்.

ஆனால் மிர்ஜா தாவூத்தின் கட்டளை நிறைவேறுவதற்கு முன்பாகவே எதிரிக் கப்பல்களிலிருந்து பீரங்கிகள் நெருப்பைக் கக்கத் தொடங்கிவிட்டன. எல்லோரும் அச்சத்தினால் குலை நடுக்கமுற்றனர். கீழே குழந்தைகளும் பெண்மணிகளும் பரிதாபமாக அழத் தொடங்கி விட்டனர். "முடிந்தவரை கப்பலை வேகமாக முன்னே செலுத்திக் கொண்டிருங்கள். உயிர் இருக்கும்போது நாம் பரங்கியர்களின் கையில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பது நினைவிருக்கட்டும்" என்றார் மிர்ஜா தாவூத் கப்பலோட்டிகளைப் பார்த்து.

இதே சமயம் தாவூத்தின் பெண் வந்து அவரைக் கட்டிக்கொண்டு, "அப்பா! அம்மா உன்னைக் கூப்பிடுகிறாள். எனக்குப் பயமா யிருக்கிறது, அப்பா!" என்றாள்.

மிர்ஜா தாவூத் பெண்ணை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு அணைத்துக் கொண்டார். பிறகு மெதுவான குரலில், "ஜாஹோ! என் அழகிறுப்! நீ சூர் ஜாதிப் பெண் அல்லவா! இப்படிப் பயந்து அழலாமா! இன்று நாம் எல்லோரும் சேர்ந்தே சொர்க்கம் போவோம். கவலைப்படாதே!" என்றார். பிறகு பெண்ணைத் தம் தந்தையின் மடியில் விட்டு விட்டு மனைவியைப் பார்த்து வருவதற்காகக் கீழே போனார்.

தம் மனைவியை நெருங்கியதும் அவர், "ஸாலேஹா! இப்பொழுது நாம் இருக்கும் நிலையை நோக்கினால் மரணம் நம்மை மிகவும் நெருங்கி விட்டதாகத் தோன்றுகிறது. பரங்கியர்களின் கப்பல் நம்மைப் பின் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பரங்கியர்கள் இந்தக் கப்பலைப் பிடித்துக் கொண்டு விட்டால், இந்தக் கத்தியை உன்மீது உபயோகித்துக் கொள்ளு.



இல்லாவிட்டால் தேவையில்லை. நான் வருகிறேன்" என்று கூறி ஒரு சிறிய கூரிய கத்தியை எடுத்து நீட்டினர். பிறகு அவளை அன்புறத் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டார். அப்புறம் அவளிடமிருந்து பிரியா விடைபெற்றுக் கொண்டு தம் இருப்பிடத்துக்குத் திரும்பினர்.

மேலே வந்ததும் அவர், அரைச் சந்திரன் வட்டத்தில் பரங்கியர்களின் கப்பல் தங்கள் கப்பலை வளைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அதுமட்டும் அல்ல; அந்தக் கப்பல்களில் உள்ள ஒவ்வொரு பீரங்கியின் வாயும் தம் கப்பலையே குறி வைத்துக் கொண்டிருப்பதையும் கண்ணுற்றார். அந்தக் கப்பல்கள் மிகவும் சமீபத்தில் நெருங்கிவிட்டன. அவற்றிலிருந்து வரும் பேச்சுக் குரல் கூட இலேசாகக் காதில் விழுந்தது. தாலூத்தின் தந்தை, தாலூத்தைத் தம் அருகில் கூப்பிட்டு, "தாலூத், இனி நாம் தப்புவது என்பது இயலாத காரியம். ஓடுவதும் வீண்!" என்றார்.

"ஓடாவிட்டாலும் நாம் சாக வேண்டியது தானே!" என்றார் தாலூத்.


"அது சரி! நம்முடன்கூடக் குழந்தைகளும் பெண்களும் இருக்கிறார்களே, அவர்களை எப்படியாவது காப்பாற்ற முயல வேண்டாமா? அதற்குத்தான் கேட்கிறேன்!" என்றார் தந்தை.

"அவர்கள் நம் பெண்டுகளையும் குழந்தைகளையும் விட்டு விடுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார் தாலூத்.

"பரங்கியர்கள் பணத்தாசை பிடித்தவர்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அவர்கள் பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு நம்மை ஒன்றும் செய்யாமல் விட்டாலும் விட்டு விடலாம் அல்லவா!" என்றார் தந்தை.

கப்பலில் உள்ள எல்லாப் பிரயாணிகளும் பரங்கியர்களிடம் தஞ்சம் புகுவது என்ற முடிவுக்கு வந்து விட்டனர். கடைசியில் மிர்ஜா தாலூத்தும் வேறு வழியின்றி அவர்கள் சொல்லுக்கு அடிபணிய வேண்டியதாயிற்று.

இதே சமயம் எதிரிகள் குண்டு மாரி பொழியத் தொடங்கினர். அதன் காரணமாகக் கப்பலில் இருந்த பாய்கள் அத்தனையும் கிழிந்து விட்டன. கப்பலில் தீ வேறு பற்றிக் கொண்டது. கீழே உட்கார்ந்திருந்த பெண்கள் இந்தக் காட்சியைப் பார்த்துக் கதிகலங்கிப் போய் விட்டனர். அச்சம் நாணம் அத்தனையும் மறந்து குழந்தைகளுடன் மேலே ஏறி வந்து விட்டனர். எல்லோரும் கடவுளை அழுது புலம்பி வேண்டினர். அதோடு எதிரிகளிடமும் தங்கள் தங்கள் குழந்தைகளைத் தூக்கிக் காட்டிக் கருணை புரியுமாறு வேண்டிக் கொண்டனர். தீ வளர்ந்து கொண்டேயிருந்தது. எதிரிகளின் கப்பல்களில் ஒன்று மிர்ஜா தாலூத்தின் கப்பலுக்கு வெகு அருகில் வந்தது. வந்ததும்



அது பீரங்கியைத் திருப்பிச் சுட ஆரம்பித்தது. அதைக் கண்ட மிர்ஜா தாலூத், "பீரங்கியைப் பிரயோகிக்காதீர்கள். நாங்கள் உங்களைத் தஞ்சம் அடைகிறோம்" என்று உரக்கக் கூவினர்.

அதைக் கேட்டதும் எதிரிக் கப்பலில் ஒரே உல்லாசக் குரல் எழுந்தது. அதன் பிரதானத் தலைவன் "உங்கள் கப்பலில் இருக்கும் ஆயுதங்கள் அனைத்தையும் முதலில் கடலில் விட்டெறியுங்கள். இல்லாவிட்டால் நாங்கள் மறுபடியும் பீரங்கியைப் பிரயோகிக்கத் தொடங்கி விடுவோம்!" என்றான்.

"எங்கள் கப்பலில் ஆயுதங்களே கிடையாது. ஏனெனில் இது தீர்த்த யாத்திரிகர்களின் கப்பல். எங்களிடம் இருக்கும் சாமான்களையும் பொருள்களையும் தங்களுக்குத் தரச் சித்தமாயிருக்கிறோம். அவற்றை ஏற்றுக்கொண்டு எங்களை விட்டு விடுங்கள்!" என்றார் மிர்ஜா தாலூத்.

இம்மாதிரிப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் பொழுதே எதிரிக் கப்பலிலிருந்து ஆஜானுபாகுவான ஒருவன் சேனை வீரன் வேஷத்தில் கப்பலின் மேல் தளத்தில் வந்து நின்றான். அவனைக் கண்டதும் மிர்ஜா தாலூத்துக்குப் பகீர் என்றது. அவன் வேறு யாரும் இல்லை; வாஸ்கோ டி காமாதான். அவனுடைய முகத் தோற்றத்திலே ஹிம்ஸை என்னும் கருநாகம் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்திருப்பது போலத் தோன்றியது. மிர்ஜா தாலூத்தைப் பார்த்ததும் அவன் அட்டகாசமாகச் சிரித்தான். பிறகு தலையிலிருந்து தொப்பியை எடுத்துக் கால்மாடு வரைக்கும் கொண்டு போய் ஏளனமாக வணங்கிவிட்டு, "குட்மார்னிங், மிர்ஜா தாலூத்! நாம் மறுபடியும் சந்திப்போம் என்று சொன்னேனே, உனக்கு நினைவிருக்கிறதா!" என்று கேட்டான்.

மிர்ஜா தாலூத்துக்குப் பேச முடியாமல் தொண்டையை அடைத்தது. வாஸ்கோ டி காமா தன் பிரதான கப்பல் தலைவனைப் பார்த்துக் கடுமையான குரலில், "காப்டன்! ஏன் பீரங்கிகள் சும்மா இருக்கின்றன? என் உத்தரவை மறந்து விட்டாயா!" என்று கேட்டான்.

காப்டன் பயந்த வண்ணமே, "எஜமான்! எதிரிகள் பணங் காசு தருவதாகச் சொல்லி உயிர்ப்பிச்சை கேட்கிறார்களே!" என்றான்.

அதற்குள்ளாக இன்னும் இரண்டு கப்பல்கள் அருகில் வந்து விட்டன. வாஸ்கோ டி காமா தாலூத்தைப் பார்த்துக் கம்பீரமான குரலில், "மூர்! பணங் கொடுத்து உயிர்ப்பிச்சை பெற விரும்புகிறாயா!" என்று கேட்டான்.

மிர்ஜா தாலூத் திட்டமான குரலில், "நான் எனக்காக உயிர்ப் பிச்சை கேட்க முன் வரவில்லை. இந்தக் கிழவர்களுக்காகவும் குழந்தைகளுக்காகவும் பெண் பிள்ளைகளுக்காகவும் தான் கேட்கிறேன்" என்றார் தம் கம்பீரத்தை விடாமல்.

வாஸ்கோ டி காமா அதைக் கேட்டதும், "உன் கப்பலில் இருக்கும் இளம் பெண்களை எங்களுக்கு வெகுமதியாக அளித்து, மற்றவர்களுக்கு வேண்டுமானால் நீ உயிர்ப் பிச்சை கேட்கலாம். எங்களுக்குப் பெண்கள் தேவை. அதுவும் எனக்கு அல்ல; என் மாலுமிகளுக்கு!" என்றான் வெகு இளப்பமாக.

கோபமும் அவமானமும் தாளாமல் மிர்ஜா தாலூத்தின் முகம் களையிழந்து விட்டது. ஆயினும் அவர் மிகவும் அடக்கமான குரலில், "டி காமா! உன் கோரிக்கைக்கு நான் என்ன பதில் சொல்வது? உனக்கு விருப்பமிருந்தால் எங்களிடம் உள்ள விலைமதிக்க முடியாத பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு

எங்களை விட்டு விடு. இல்லா விட்டால் உனக்கு ஒன்றும் கிடைக்காது'' என்றார்.

டி காமா புருவத்தைச் சுளித்துக் கொண்டு, ''ஒன்றும் கிடைக்காதா! அப்படியென்றால் என்ன அர்த்தம்!'' என்று கேட்டான்.

''அர்த்தம் என்னவா! மிகமிக அதிகமாக நீ எங்களை என்ன செய்துவிட முடியும்! எங்களுடைய உயிரை வேண்டுமானால் மாய்க்கலாம். அதைவிட அதிகமாக நீ ஒன்றும் செய்துவிட முடியாதே! நீ எங்கள்மீது போர் தொடுத்தால் நாங்கள் எங்கள் கப்பலைக் கடலில் மூழ்கடித்து விடுவோம். அப்புறம் உன்னால் என்ன செய்ய முடியும்!'' என்றார் மிர்ஜா தாவூத்.

மிர்ஜா தாவூத்தின் அந்தப் பதிலைக் கேட்டதும் டி காமா கொஞ்சம் கம்பீரமாகச் சிந்தனை செய்தான். பிறகு அவன் தன் தோழர்களைக் கலந்து ஆலோசனை செய்யலானான்.

கப்பலில் உள்ள பாய்கள் அத்தனையும் கிழிந்து விட்டபடியால் கப்பல் முன்னேற மாட்டாமல் நின்ற இடத்திலேயே நின்றபடி யிருந்தது. பரங்கியர்களின் ஐந்து கப்பல்களும் வேறு அதற்குத் தடையாக மூன்று புறமும் சூழ்ந்து நின்றன.

ஆகவே, தாவூத் சற்று அவசரப்பட்டு ''டி காமா! செய்வதைச் சீக்கிரம் செய். எங்களிடம் ஆயிரத்து ஐந்[illegible]

மிர்ஜா தாவூத் கொதித்தெழுந்து, ''என்ன சொன்னாய்! முடியாது, முடியாது. நாங்கள் பெண் பிள்ளைகளைக் கொண்டு தொழில் செய்பவர்கள் அல்ல!'' என்றார்.

டி. காமா அதே குரலில், ''மூர்! இன்னும் உன் கர்வம் அடங்கினபாடில்லையா! சரி, நான் பணமே பெற்றுக் கொள்கிறேன். உன் கப்பலில் இருக்கும் பொருள் அனைத்தையும் என்னிடம் சீக்கிரமாக அனுப்பி வை!'' என்றான்.

''எங்களிடம் இருப்பதை அனுப்பி விட்டால் எங்களை விட்டு விடுவாய் அல்லவா!''

''விட்டு விடுவேன்!''

''ஆனால் உன்னை எப்படி நம்புவது!''

''நான் பொய் சொல்வதில்லை!''

''அட, பொய் சொல்லாத பொய்யனே! நான் பாரத நாட்டுப் பக்கம் வருவதில்லை என்று சபதம் செய்து கொடுத்தாயே, அந்தச் சபதம் என்ன வாயிற்று!'' என்று கேட்டார் மிர்ஜா தாவூத்.

டி காமா ஏளனமாகச் சிரித்துவிட்டு, ''இன்னும் நான் இந்தியாவுக்கு வரவில்லையே!'' என்றான்.

மிர்ஜா தாவூத் தம் தோழர்களைக் கலந்து ஆலோசனை செய்யத் தொடங்கினார். எல்லோரும் ஏக காலத்தில், ''காமோ அவர்கள் வலையில் சிக்கி



B. I. S. N. கம்பெனி லிமிடெட்

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

S. S. "ரஜூலா"

சென்னை புறப்படும் தேதி — 1953 பிப்ரவரி 21௳
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1953 பிப்ரவரி 22௳

கப்பல் புறப்படும் தேதிக்கு காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது.

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள்:

சென்னையிலிருந்து 21-2-53: *பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 10 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.*

நாகப்பட்டினத்திலிருந்து 22-2-53: *பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் 8 மணிக்கும் கப்பலேறலாம்.*

சென்னையில் ஏறும் பிரயாணிகள் 21-2-53 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகி விடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.

பினாங்கு, சிங்கப்பூர் துறைமுக சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டியிருப்பதால் எல்லா பிரயாணிகளும் சர்வதேச சுகாதார விதிகளின்படி அமைந்த பாரத்தில் அம்மை குத்தியதற்கான சர்டிபிகேட்டும், காலரா எதிர்ப்பு இஞ்ஜெக்ஷன் செய்ததற்கான சர்டிபிகேட்டும் பெற்று, ஒரு சர்க்கார் அல்லது முனிசிபல் ஹெல்த் ஆபீஸரின் அத்தாட்சியுடன் செல்லுபடியாகக் கூடிய நிலையில் கொண்டுவர வேண்டும்.

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, மதராஸ்	முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்

"எங்கள்மீது கருணை வையுங்கள். எங்களை விட்டு விடுங்கள்!" என்று கதறினார்கள்.

இந்தப் பரிதாபகரமான வேண்டுகோளுக்கு எதிரியின் தரப்பிலிருந்து வந்த பதில் என்ன, தெரியுமா! கல்மாரி போன்ற குண்டு மாரிதான். சாகிறவர்களின் பயங்கரக் கூச்சல் வையத்தைக் கிடுகிடுக்கச் செய்து வானைப் பிளந்தது.

மிர்ஜா தாவூத்தின் தந்தை தம் பேத்தியை மார்புடன் அணைத்துத் தூக்கிக் கொண்டு மிர்ஜா தாவூத்துக்கு அருகில் வந்து நின்றார். பிறகு மிகவும் மெலிந்த நடுங்கும் குரலில், "குழந்தாய், தாவூத்!" என்று அன்புடன் அழைத்தார்.

மிர்ஜா தாவூத் தம் தகப்பனாரையும் பெண்ணையும் மார்புறத் தழுவிக் கொண்டார். அதே சமயம் வெட்கத்தை விட்டு ஸாலேஹாவும் அவருக்கு அருகில் வந்து நின்றாள். தாவூத் கண்களில் நீர் நிரம்ப மூவரையும் ஒரு முறை பார்த்தார். பிறகு தழுதழுத்த குரலில், "அப்பா! கடவுள் என்று ஒருவர் இல்லையா!" என்று கேட்டார்.

திடீரென்று வீறிட்டுக் கத்திக் கொண்டு பெண் ஹாஜேரா சுருண்டு விழுந்து விட்டாள். மிர்ஜா தாவூத் சட்டென்று ஓடி அவளை மடியில் எடுத்து வைத்துக் கொண்டார். அவளுடைய மார்பிலிருந்து 'குபு குபு' வென்று ரத்தம் கொப்பளித்தது. அடுத்த சில வினாடிகளில் அவள் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது.

கப்பலில் உள்ள அனைவரும் ஒவ்வொருவராகக் குண்டு பட்டு இறந்தனர். அவர்களுடன் கூடவே கணவன், மனைவி, தந்தை ஆகிய மூவரும் கூடக் குண்டு பட்டு விழுந்தனர். வாஸ்கோ டி காமா பித்தனாக மாறி இடையறாமல் குண்டு மாரி பொழிந்த வண்ணம் இருந்தான்.

வெகு தொலைவில் அடிவானம் மேற்கே சூரியனின் கிரணங்களினால் ரத்தச் சிவப்பாகச் சிவந்து காணப்பட்டது. வானத்துடன் போட்டி போட்டுக் கொண்டு கடலும் சிவந்தது. அதே சமயம் ஐந்து கப்பல்களும் ஏககாலத்தில் பீரங்கியினால் சுட்டன. குளிர் ஜுரம் கண்ட கிழவனைப் போலக் கப்பல் நடுங்கிற்று. பீரங்கிகள் மறுபடியும் கர்ஜித்தன. அடுத்த கணம் மிர்ஜா தாவூத் வந்த பிரயாணிகள் கப்பல் நீரில் மூழ்கியது.

சிறிது நேரத்துக்கு முன்னால் ஒரு கப்பல் நின்று கொண்டிருந்த இடத்தில் கடலின் அலைகள் எப்பொழுதும் போல் விளையாடிக் கொண்டிருந்தன. வெற்றி கொண்ட எதிரிகள் ஆனந்த வெறியில் மிதந்து வானம் முட்டக் கோஷமிட்டனர்.

இதுதான் ஐயா, என் கதை! அதுமுதற் கொண்டு எந்தப் போர்த்துகீசியனைப் பார்த்தாலும் என் இரத்தம் கொதித்தெழத் தொடங்கி விடுகிறது. நான் என்ன செய்யட்டும்!

குலாம் காதிர் கதையை முடித்து விட்டான். அவன் முகத்தில் எவ்விதமான கவலைக் குறியோ, துயரக் கோடோ தென்படவில்லை. தன் கடமையைச் செய்து முடித்து விட்ட திருப்தியும் சாந்தியும்தான் நிலவியிருந்தன.

கண்களுக் கெதிரே நடந்தது போல் அவன் அந்தக் கதையைப் படமாக்கிக் காட்டியதை நினைக்க நினைக்க எனக்குப் பூர்வஜன்ம வாசனையில் பலத்த நம்பிக்கை ஏற்பட்டது. அப்படியே பூர்வ ஜன்ம வாசனையைப் பற்றிய சிந்தனையில் கல்லாய்ச் சமைந்து விட்ட எனக்கு "என்ன, ஒரேயடியாகச் சிந்தனையில் மூழ்கிவிட்டீர்களே!" என்று குலாம் காதிர் கேட்டபின்தான், இந்த உலகத்து நினைவு வந்தது. பிறகு கண்களில் நீர் மல்க அவனிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தேன். அப்பொழுதும் பூர்வ ஜன்ம நினைவுகள் என் கண்களெதிரே நடனமாடிக்கொண்டிருந்தன.

[ஆதாரம்: ஸ்ரீ சரதேந்து வந்தியோபாத்தியாயரின் வங்காளிக் கதை.]

திருவடி சேர்ந்த தமிழ்த் தொண்டர்

மகாத்மா காந்தியுடன் தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்ட ஸ்ரீ ஏ. அண்ணாமலைப் பிள்ளை, சென்ற மாதம் 30-ந் தேதி காந்தி மகான் மறைந்த அதே தினத்தில் காலமானார். எண்பத்து நாலு வயதுத் தொண்டு கிழவரான அவர், தம் பதினாறாவது வயதில் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். டர்பன், ஜோஹன்ஸ்பர்க் நகரங்களிலே வியாபாரத் துறையில் ஈடுபட்டு வெற்றி பெற்றார். மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது அவர் காந்திஜியுடன் சேர்ந்து அங்குள்ள இந்திய சமூகத்துக்குத் தொண்டு புரிந்து வந்தார். 1911-ம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்தபின் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த அவரது சொந்த ஊரான கொல்லுமாங்குடியில் விவசாயத்தில் ஈடுபட்டார். சென்ற முப்பது வருஷகாலமாக அவர் யோகப் பயிற்சியை மேற்கொண்டு பால், பழம், இலைகளை மாத்திரம் சாப்பிட்டுக் கொண்டு வாழ்ந்து வந்தார்.



ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை
(தென்னாப்பிரிக்காவில் எடுத்த படம்)

வயோதிகம் காரணமாக, சிறிது காலத்துக்கு முன் சென்னையில் உள்ள அவரது மூத்த குமாரர் அட்வொகேட் ஸ்ரீ ஏ. அருணாசலத்தின் வீட்டுக்கு வந்தவர், பிறகு ஊருக்குச் செல்ல முடியவில்லை.

சர்வோதய தினத்தில் இந்த உலகை நீத்து இறைவன் திருவடி சேர்ந்த ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை காந்தி மகான் பிறந்த அதே வருஷத்தில்தான் பிறந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அவரது ஆத்மா சாந்தி அடையுமாக!



உறுதியான
எதிர்ப்பு சக்தி
நீங்களும் பெறுக
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுவதன் மூலம் தேக வலிமையைப் பெருக்கி, சோர்வு, ஜலதோஷம், இருமல் மற்றும் எந்த நோயும் வராமல் தடுக்கும் சக்தியை பெறுவீர்கள். நிரூபிக்கப்பட்ட குணம் பொருந்திய இந்த டானிக்கில் போஷாக்கு அளிக்கும் அம்சங்கள் ஏராளமாக இருப்பதால், உங்களுக்கு உபரியாக தேவையாயிருக்கும் உறுதியான எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும்.
குழந்தைகளுக்கு உடல் வலிவும் ஆரோக்கியமும் அதிகரிக்க உதவுவதிலும் பிரசித்திபெற்றுள்ள இந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்டு சாப்பிட ருசியானதால்கூட. இன்றே வாங்குங்கள்.
WATERBURY'S
COMPOUND
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
உங்களைத் தென்புடன் வைத்திருக்கும்
NAS. 742

கிழவரின் உள்ளம்

தில்லைவாசி

“சரசு, இக்கடிதத்தைப் பார்! அவர்களிட மிருந்தேதான் வந்திருக்கிறது. சரோஜாவைப் பார்க்க அடுத்த வாரம் வருகிறார்களாம்” என்று மகிழ்ச்சியுடன் கூறிக் கடிதத்தை மனைவியிடம் கொடுத்தார் ராமநாதன்.

“அப்படியானால் சித்தப்பாவுக்குத் தந்தி கொடுத்து உடனே வரவழையுங்கள். குற்றாலத்தில் தங்கி யிருப்பதாகத்தானே எழுதி யிருந்தார்? அவரும் கூட இருந்தால், எல்லாவற்றிற்கும் ஒத்தாசையாக இருக்குமல்லவா?” என்றாள் சரஸ்வதி.

“சித்தப்பா எதற்கு? அவருக்கோ வயசாகி விட்டது. நிம்மதியாக, ஊர் சுற்றி, ஸ்தல யாத்திரை செய்து விட்டு வரட்டும். அவர் இருந்தால் வாயை வைத்துக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க மாட்டார். அதில் தோஷம், இதில் தோஷம் என்பார். இங்கிதமறிந்து பேச மாட்டார். வருகிறவர்கள் கோபித்துக் கொண்டு போய்விட்டால் பிறகு நாம் என்ன செய்வது?” என்றார் ராமநாதன்.

“எனக்கென்னமோ, நீங்கள் செய்கிறது கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. இந்தச் சொத்து, சுதந்திரம் எல்லாம் யாருடையது? யார் உங்களை வளர்த்து, படிக்க வைத்து, முன்னுக்குக் கொண்டு வந்தது? யாரால் உங்களுக்குப் பெரிய உத்தியோகம் கிடைத்தது? அந்தச் சித்தப்பா இப்போது வேண்டாமா? நாளைக்கு அவர் திடீரென்று திரும்பி வந்தால், அவர் முகத்தில் எப்படி விழிப்பது? தம்மை மதிக்கவில்லை என்று கோபப்பட மாட்டாரா?” என்றாள் சரஸ்வதி.

“சரசு, உனக்கு இந்த ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளை வேண்டுமானால், நான் சொல்கிறது தான் சரி. அவர் இருந்தால் காரியமே கெட்டுவிடும். அவருடைய முன் கோபத்துக்கும், அவசர புத்திக்கும் இதெல்லாம் சரிப்பட்டு வராது. படபட வென்று ஏதாவது பேசி விடுவார். அவர்கள் வந்து பெண்ணைப் பார்க்கட்டும். நிச்சயம் செய்து கொண்டு, கல்யாணத்துக்குச் சித்தப்பாவை வரவழைத்துக் கொள்ளலாம். சித்தப்பாவை நான் கெட்டவர் என்று சொல்லவில்லை. அவர் நமக்கு நல்லவராக யிருக்கலாம். மற்றவர்களுக்கும், அவர் அப்படி யிருப்பார் என்று எப்படிச் சொல்ல முடியும்?” என்றார் ராமநாதன் பிடிவாதமாக.

“சித்தப்பா திரும்பி வந்தால், யாரையும் சும்மா விட மாட்டார். அவருக்குச் சமாதானம் சொல்ல வேண்டியது உங்கள் பொறுப்பு. சரி, மற்ற ஏற்பாடுகளையும் கொஞ்சம் கவனியுங்கள்” என்றாள் சரஸ்வதி.

மாப்பிள்ளை தன் பெற்றோர்களுடன் வந்தான். சரோஜா அவன் மனத்துக்குப் பிடித்துப்போயிருந்தாள். மற்றவர்களுக்கும் இந்த சம்பந்தத்தில் திருப்தி ஏற்பட்டது. கல்யாணத்துக்கு நிச்சயம் செய்து கொண்டார்கள். அடுத்த மாதத்தில் கல்யாணத்தை நடத்தி விடத் தேதியும் குறித்து விட்டுப் போனார்கள்.

* * *

‘சல சல’ வென்று விழும் குற்றாலத்து அருவியில் குளித்து விட்டு, உடம்பைத் துடைத்துக் கொண்டு நின்றிருந்தார் கணபதி. அப்போது யாரோ, “கணபதி, கணபதி!” என்று கூப்பிடவே திரும்பிப் பார்த்தார். ராமசாமி அவரை நோக்கி வந்துகொண்டிருந்தார். ராமசாமி அவர் பக்கத்து வீட்டுக்காரர்; அவருடைய நெருங்கிய நண்பர். இருவருக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதிருக்கும்.

“என்ன, கணபதி! எப்போது ஊருக்குத் திரும்பப் போகிறாய்? அங்கே உன் பேத்திக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கிறது. இங்கே ஒரு வேலையாக வந்தேன். வழியில் உன்னைப் பார்த்தேன்” என்றார் ராமசாமி.

“அந்த முட்டாள் எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை? இனிமேல் கிழவன் வேண்டாம் என்று நினைத்து விட்டானா? ராமேசுவரம் போகலாம் என்றிருந்தேன். யாத்திரை போதும்; ஊருக்குத் திரும்பிவிட வேண்டியதுதான். போய் ராமநாதனை என்ன செய்



கிறேன், பாரும்'' என்று கணபதி ஆத்திரத்துடன் படபடவென்று பொரிந்து தள்ளினார்.

"இதோ பார், கணபதி! உனக்கு நானும் படித்துப் படித்துச் சொல்லி விட்டேன், இந்தக் கோபம் வேண்டாம் என்று. ராமநாதனுக்கும் சரஸ்வதிக்கும் உன்னிடமுள்ள விசுவாசமும், மரியாதையும் என்றைக்குமே குறையாது. உன்னை அவர்கள் அழைக்காததுதான் நல்லது என்று நினைத்துக் கொள்'' என்று கணபதிக்குச் சமாதானம் சொன்னார் ராமசாமி.

"அட மண்டு, நீ கூட எல்லாம் தெரிந்தவன் போல் பேசுகிறாயே! நான் இன்னமும் உயிரை வைத்துக்கொண் டிருப்பதே அவனுக்காகத்தானே? நன்றியில்லை பார், அவனுக்கு! அதுதான் என்னை மதிக்கவில்லை. இதெல்லாம் எனக்கு வேண்டியதுதான். நன்றாக வேண்டியதுதான்'' என்று கணபதி தம்மைத் தாமே நொந்து கொண்டார்.

"கணபதி, உன் சிநேகிதன் என்ற உரிமையோடு சொல்கிறேன். ராமநாதனை இன்னும் சிறு பையனாகவே நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய். அவன் வீட்டில் யாரோடு பேசிக் கொண்டிருந்தாலும், நீயும் கூடவே போய் உட்கார்ந்து கொள்கிறாய். அவனுக்குப் பதில் நீயே பேச ஆரம்பித்து விடுகிறாய். ராமநாதனாக இருக்கக் கொண்டு இதையெல்லாம் சகித்துக் கொள்கிறான். வேறு யாராவதாக இருந்தால், நீ இருக்கிற இடமே வேறு.

"மாப்பிள்ளை வீட்டார் வந்திருந்தபோது, நீ இருந்தால் சும்மா யிருக்க மாட்டாய். ஏதாவது உளறித் தள்ளி யிருப்பாய். அவர்களும் வெறுமனே போயிருப்பார்கள்.

"நான் உனக்குச் சொல்வதெல்லாம் இதுதான். உன் காலம் முடிந்து போச்சு. இன்னும் கொஞ்ச நாள் பல்லைக் கடித்துக்கொண்டு இருந்து விடு. உன்னை எல்லாரும் நல்லவர் என்று சொல்ல வேணுமானால், மற்றவர்கள் நோக்கம் தெரிந்து நடந்து கொள்......நான் போய் வேலையை முடித்துக்கொண்டு அடுத்த வாரம் ஊர் வந்து சேருகிறேன்'' என்று சொல்லி விட்டு ராமசாமி போய்விட்டார்.

ராமசாமி எத்தனையோ தடவைகளில் அவரிடம் இம்மாதிரி சொல்லி யிருக்கிறார். இன்றுதான் கிழவருக்குத் தம் நண்பர் சொன்னது எல்லாம் உண்மையாகப் பட்டது.

கணபதி ஊரை விட்டு ஸ்தல யாத்திரைக்குக் கிளம்பி ஒரு மாதத்துக்கு மேலாகி யிருந்தது. ராமநாதன் என்ன தடுத்தும், அவர் தமக்கே உரித்தான பிடிவாதத்துடன், தனியாகக் கிளம்பி வந்திருந்தார். குடும்பக் கவலையை மறந்து வந்திருந்த கிழவருக்கு மறுபடியும் குடும்பத்தைப் பற்றி ஞாபகப்படுத்தி விட்டார் அவர் நண்பர் ராமசாமி.

* * *

கணபதிக்கும், அவர் தமையன் உமாபதிக்கும் நிறையப் பிதுரார்ஜித சொத்திருந்தது. இருவரும் கல்யாணமானதும் பாக பத்திரம் செய்து கொண்டு பிரிந்து போனார்கள்.

உமாபதி தமக்குக் கிடைத்த சொத்தை எந்தெந்த வழிகளில், அழித்து ஒழிக்க வேண்டுமோ, அந்த வழிகளில் அழித்து விட்டிருந்தார். அவருக்கு ராமநாதன் மகனாய்ப் பிறந்திருந்தான். அவன் ஐந்து வயது பாலகனாயிருந்தபோது, அவரும், அவர் மனைவியும், ஒருநாள் ரயில் விபத்தில் இறந்து போனார்கள். தாய் தகப்பனை யிழந்து, சொத்து மில்லாமல் அநாதையாக நின்ற ராமநாதன் தன் சித்தப்பா கணபதியிடம் வந்து சேர்ந்தான்.

கணபதிக்குக் குழந்தை கிடையாது. ராமநாதனை அவரும் அவர் மனைவியும் தங்கள் குழந்தையைப் போல வளர்த்து வந்தனர்.

ராமநாதனுக்குக் கல்யாணமாகி இரண்டு வருஷங்களுக்குப் பிறகு கணபதியின் மனைவியும் காலமானாள். கணபதி மட்டும் தம் ஏராளமான சொத்துக்கு ராமநாதனை வாரிசாக வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

ஆதிநாள் முதலே அவர் எந்தக் காரியத்தையும் ராமநாதனையே செய்ய விட மாட்டார். அவர் சொல்லுகிறபடியேதான் ராமநாதன் நடக்க வேண்டும். அது மட்டுமல்ல, தாம் தான் இந்த உலகில் அறிவாளி என்றும், தமக்குத்தான் எதுவும் தெரியும் என்றும் எண்ணி வந்தார். யாராவது தம் பேச்சை ஒப்புக் கொள்ளா விட்டால், சண்டைக்குப் போய்விடுவார். நன்றாகப் பழகினவர்களுக்குத்தான் அவர் உள்ளத்தின் உள்ளே மறைந்து கிடக்கும் தங்கமான குணத்தை அறிய முடியும். ராமநாதனும் அவர் மனைவி சரஸ்வதியும் எப்படியோ இதுவரைக்கும்



கணபதியின் கோபத்துக்கும் கண்டிப்புக்கும் அடங்கி ஒடுங்கி நடந்து விட்டனர்.

பெண்ணுக்கு வரன் தேடும்போது, ஏனோ அவர்களால் அப்படி யிருக்க முடியவில்லை. அவர்கள் அருமைப் பெண் சரோஜாவின் நல்ல எதிர்காலம்தான் அவர்களுக்குப் பெரிதாகத் தோன்றியது. அதற்கு ஒரு இடையூறு ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை. இந்த ஒரு விஷயத்தில் அவர்கள் கணபதியை அசட்டை செய்து விட்டனர். அவர் இல்லாத சமயம் பார்த்து மகளுக்கு மணமகனை நிச்சயம் செய்து கொண்டனர்.

நன்றாய் யோசித்துப் பார்த்தபோது, கணபதிக்குத் தம்மைக் கலக்காமல் அவர்கள் இந்தக் கல்யாண ஏற்பாடுகளைச் செய்து கொண்டது சரிபோலவே தோன்றியது.

* * *

கணபதி திடுதிப்பென்று திரும்பி வந்தது ராமநாதனுக்கும் சரஸ்வதிக்கும் ஆச்சரியமாக இருந்தது. அவர் மணப் பெண் சரோஜாவை அன்புடன் அணைத்துக் கொண்டார்.

"சித்தப்பா, நீங்கள் போனவுடனேயே சரோஜாவுக்கு வரன் நிச்சயமாகி விட்டது. முகூர்த்தத் தேதியும் வைத்தாகிவிட்டது. அவர்கள் அவசரப்பட்டார்கள். உங்களால் சமயத்துக்கு வரமுடியாது என்று தெரிவிக்கவில்லை. என்னை மன்னியுங்கள். நல்ல இடம். சரோஜா அதிர்ஷ்டசாலிதான்!" என்று பயந்து பணிவோடு சொன்னார் ராமநாதன்.

"அம்பி! என்னடா நீ, அசடுமாதிரி ஏதோ செய்யாததைச் செய்து விட்டதுபோல் மன்னிப்பு கேட்கிறாய்? நீ செய்ததுதான் சரி. நான் எப்போதும் கூடவே இருந்துவிட முடியுமா? தேதியூர் பிச்சுவின் பேரன்தானே மாப்பிள்ளை? நல்ல இடந்தான். மனுஷாளும் நல்லவர்கள். மேலே நடக்க வேண்டியதைக் கவனிப்போம். எனக்கும் வயசாகிவிட்டது. நீயே ஆகவேண்டிய ஏற்பாடுகளைக் கவனி. நான் கூடமாட இருக்கிறேன். ஏதாவது தெரியாமற் போனால் கேள். மற்றப்படி நீயும் சரசுவுமாக எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று கணபதி சாந்தமாக எவ்வித முக மாறுதலுமின்றிச் சொன்னார். அதைக் கேட்ட ராமநாதனுக்கும் சரசுவுக்கும் 'நம் சித்தப்பாவா இப்படிப் பேசுகிறார்?' என்று ஒரே வியப்பாகப் போய் விட்டது.

கணபதி முன்போல வீட்டில் சர்வாதிகாரம் செய்யவில்லை. ஒவ்வொன்றிலுமிருந்தும் அவர் ஒதுங்கி ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தார். தினமும் தெய்வ வழிபாடுகளை முடித்துக் கொள்வது, வேளா வேளைக்குச் சாப்பிடுவது. எப்போதாவது அவர் அபிப்பிராயத்தைக் கேட்டால் சொல்வது என்று இருந்தார். அவர் திடீரென்று இப்படி மாறிப் போனது ராமநாதனுக்குச் சங்கடமா யிருந்தது. ஒருவேளை சித்தப்பா கோபித்துக் கொண்டிருப்பாரோ என்று கூட அவர் பயந்தார்.

சரோஜாவின் கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. கணபதி கண்குளிரப் பார்த்து மகிழ்ந்தார். கிழவரை மாப்பிள்ளை நமஸ்கரித்து எழுந்தான். அவர் அவன் கையில் ஒரு வைர மோதிரத்தை அணிவித்து ஆசீர்வதித்தார். சரோஜா அவரை நமஸ்கரித்தாள். தாம் பத்திரப்படுத்தி வைத்திருந்த, ஏடுகள் அங்குமிங்கும் கிழிந்து போயிருந்த அழுக்கேறிய ஒரு பழைய புத்தகத்தை அவளிடம் கொடுத்து, "அம்மா! நான் இதுவரையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த செல்வம் இதுதான். இது விலை மதிக்க முடியாதது. இது என்னிடமிருப்பது இதுவரை யாருக்குமே தெரியாது. இதை நான் உனக்குக் கல்யாணப் பரிசாகக் கொடுக்கிறேன். இதை நீ பிரித்துப் பார்த்தால் உன் தகப்பனைப் பற்றி அறிந்து கொள்வாய். இந்த உலகில் நான் அன்புடன் நேசித்தது யாராவது இருந்தால் அது உன் தகப்பன்தான்" என்றார்.

"ராமநாதன் சிறு பையனாக இருந்தபோது பள்ளிக்கூடத்து நாடகங்களில் சேர்ந்து எடுத்த படங்கள், அவன் படிப்பில் முதல்வனாகத் தேறிய செய்திகள், அவன் ஒரு சமயம் காணாமல் ஓடிப்போனபோது அவனைப்பற்றிப் படத்துடன் விளம்பரப் படுத்தியது, அவன் சாரணச் சிறுவனாக சேவை செய்த படங்கள், அவன் கல்யாணப் படம், அவன் உத்தியோகத்துக்குச் சென்று நாளது வரையில் செய்த சேவைகள் எல்லாம் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியானதை எடுத்து இதில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். நான் தனித்திருக்கும்போது இதைப் பார்த்து மகிழ்வதுண்டு. உன் தகப்பனைப் பற்றியும் அவனை வளர்த்த இந்தக் கிழவனைப் பற்றியும் இந்தப் புத்தகம் எப்பொழுதும் உனக்கு ஞாபகப் படுத்திக் கொண்டிருக்கும்.

"சரோஜா, இதை நீயும் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். எந்தப் பொக்கிஷத்தை கண்ணிமைபோல் பத்திரப்படுத்தி வைத்திருந்தேனோ, அதை இன்று உனக்குக் கொடுக்கிறேன். நீ சுகமாகக் கணவன் விருப்பப்படி நல்வாழ்வு வாழ இறைவன் அருள் புரியட்டும்!" என்று கிழவர் நாத்தழுதழுக்கக் கூறி முடித்தார். அவர் கண்களிலிருந்து நீர் கசிந்து கொண்டிருந்தது. சரோஜா தாத்தாவை அணைத்துக் கொண்டு கண்ணீர் மல்கினாள். அவளால் பேச முடியவில்லை.

"சித்தப்பா, நீங்கள் தெய்வம். உங்களை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. என் தவறுகளை மன்னித்து விடுங்கள்" என்று ராமநாதன் கிழவர் காலடியில் விழுந்தார்.

"அம்பி, நீ தவறு ஒன்றும் செய்யவில்லை. நான்தான் தவறு செய்திருப்பேன். உனது ஒவ்வொரு வேலையிலும் குறுக்கிட்டிருப்பேன். உன்னை உன் இஷ்டப்படி வாழ விட்டிருக்க மாட்டேன். இன்னும் குறை காலத்துக்கும் உன்னைப் பிரிய என் மனம் ஒப்பாது. ஆனால் பழைய கணபதி போய் விட்டான். புதிய கணபதி இருக்கிறான் என்று நினைத்துக் கொள்!" என்று கிழவர் தெளிவுடன் பேசினார். அப்போதுதான் அவருக்கு மனத்தில் நிறைந்த நிம்மதி பிறந்தது.


எனக்கு முதல்பல் முளைத்து விட்டதே*



எனக்கும் என் தாய்க்கும் ஒருவித கஷ்டமும் இல்லாமல் . . . கிளாக்ஸோவிற்கு எங்களது நன்றி. மிகவும் சுத்தமான இந்த பால் — உணவில் சேர்க்கப்பட்டுள்ள விடமின் 'டி' திடமான எலும்புகளும், உறுதியுள்ள, ஆரோக்கியமான பற்களும் வளரச் செய்ய மிகவும் அவசியம்.

Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளுக்கான சிறந்த உணவு



*நான் முதலாவதாக கெட்டியான உணவு — பாலுடன் பாரெக்ஸ் — சாப்பிட வேண்டிய தருணம் இதுவே. இது மிகவும் ருசியாயிருக்கிறது. அன்றியும் எளிதில் ஜீரணமாகிறது. மேலும் முக்கியமாக, குழந்தையின் வருங்கால ஆரோக்கியத்திற்கு அத்யாவசியமான தாதுப் பொருள்களும், விடமின்களும் பாரெக்ஸில் இருக்கின்றன.


கிளாக்ஸோ லெபாரட்டரீஸ் (இந்தியா) லிமிடெட் பம்பாய், கல்கத்தா, மதராஸ்

சிருஷ்டி விசித்திரம்

ஜெயமணி

வட இந்தியாவிலே சூரத் நகர எல்லையை அடுத்துள்ள தனிமையான குடிசைப் பிரதேசம் சில தினங்களுக்கு முன் அல்லோல கல்லோலப் பட்டது. மனித சஞ்சாரம் அதிகமில்லாத அந்த இடத்துக்குச் சாரி சாரியாக ஆயிரக் கணக்கான ஜனங்கள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். பல பிரபல டாக்டர்களும் அந்த இடத்துக்கு விரைந்து சென்று ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அவ்வளவுக்கும் காரணம் அந்தக் குடிசையில் வசித்து வந்த இந்தியத் தம்பதிகளுக்குச் சயாமிய இரட்டைக் குழந்தைகள் (Siamese Twins) பிறந்ததுதான்.

மேற்படி குழந்தைகளைப் பரிசிலனை செய்த டாக்டர்கள் அவர்கள் சாங் - எங் என்ற உலகப் பிரசித்திபெற்ற சயாமிய இரட்டைப் பிறவிகளைப் போலவே இருப்பதாக அபிப்பிராயப் பட்டனர். அந்தக் குழந்தைகளின் போட்டோ படங்கள் ஏராளமாக சூரத் மார்க்கெட்டில் விலை போயின.



இங்கிலாந்தில் பிறந்த இரண்டு தலைக் குழந்தை

உலகம் தோன்றியது முதல் இரட்டைக் குழந்தைகளின் ஜனனம் சகஜமாக இருந்து வந்திருக்கிறது. லக்ஷ்மணரும் சத்ருக்னரும் இரட்டைப் பிறவிகள்தான். நகுலனும் சகாதேவனும் இரட்டைச் சகோதரர்கள்தான்.

இன்று இந்தியாவில் பேரறிஞர்களாக விளங்கும் சர் ஏ. ராமசாமி முதலியாரும் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியாரும் கூட இரட்டைச் சகோதரர்களே.

இரட்டைப் பிறவிகளை அடிப்படையாகக் கொண்டு உலகப் புகழ் பெற்ற மகாகவியும் நாடகாசிரியருமான ஷேக்ஸ்பியர்கூட நாடகங்கள் எழுதியுள்ளார்.


எனவே இரட்டைக் குழந்தைகளின் ஜனனம் அதிசயமில்லை. ஆனால், ஏக காலத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பிறந்தாலும், இரட்டைக் குழந்தைகள் பிரிக்க முடியாதவாறு ஒட்டிக் கொண்டு பிறந்தாலும், அவை சிருஷ்டி விசித்திரங்களாகும்.

விலாப் புறத்தில் சில அங்குல தூரம் ஒட்டிக்கொண்டு பிறக்கும் குழந்தைகளை மாத்திரமே சயாமிய இரட்டைக் குழந்தைகள் என்று கூறுகிறார்கள். ஏனெனில் பல ஆண்டுகளுக்கு முன் சயாமில் பிறந்து உலகப் பிரசித்திபெற்ற சாங் - எங் என்ற இரட்டைச் சகோதரர்களுக்கு விலாப்புறமே ஒட்டிக் கொண்டிருந்தது. அதன் காரணமாகவே, அவ்விதம் ஒட்டிக் கொண்டு எந்தத் தேசத்தில் பிறந்தாலும், எந்த வகுப்பினருக்குப் பிறந்தாலும் அத்தகைய பிறவிகளைச் சயாமிய இரட்டைக் குழந்தைகள் என்று குறிப்பிடுவது வழக்கமாக இருக்கிறது.

சாங் — எங் இரட்டைச் சகோதரர்கள் 1811-ம் வருஷம் சயாமில் ஓர் ஏழைக் குடும்பத்திலே பிறந்தார்கள். சரித்திரத்திலேயே ஒட்டிக் கொண்டு பிறந்த முதலாவது இரட்டைக் குழந்தைகள் அவர்கள் தான் என்று தெரிகிறது. அவர்களுடைய ஜனனம் பெரிய அபசகுனம் என்றும், அதனால் உலகப் பிரளயம் ஏற்படும் என்றும் வதந்திகள் புறப்பட்டன. அவர்களைக் கொன்று விடும் விஷயமாக சயாம் மன்னர் ஆலோசனை கூடச் செய்ததாகவும் கூறப்படுகிறது. சயாம் டாக்டர்கள் அக்குழந்தைகளை ஆபரேஷன் செய்து பிரித்துவிட விரும்பினார்கள்.

ஆனால் அந்தக் குழந்தைகளின் பெற்றோர் அத்தகைய விபரீதத்துக்கு இடம் கொடுக்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் தங்கள் இரட்டைக் குழந்தைகளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அன்புடன் வளர்க்க முற்பட்டு விட்டார்கள்.

அவ்விருவரும் குணத்தில் ஒருவருக்கொருவர் மாறுபட்டு இருந்ததால், அவர்களுக்குள் சச்சரவு ஏற்படுவது உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் பல நாட்கள் வரையில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் இருப்பார்களாம்! அப்பொழுதெல்லாம் அவர்களுடைய தாயார் தலையிட்டு அவர்களுக்குள் சமாதானம் செய்துவைப்பது வழக்கமாம்.



சாங் - எங் சகோதரர்கள்

ஏழைக் குடும்பத்திலே பிறந்த சாங் — எங் சகோதரர்கள் பதின்மூன்று வயதை அடைந்த போது அவர்களுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் அடித்தது. சயாமுக்கு வந்திருந்த ஒரு பிரிட்டிஷ் வியாபாரி, அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்றால் பெரிய பிரபுக்களாகி விடலாம் என்ற இரகசியத்தை எடுத்துக் கூறினார். அவர்களும் தாயாரின் அனுமதி பெற்று அமெரிக்காவுக்குச் சென்றார்கள்.

அந்தச் சகோதரர்கள் ஒருவர் தோள் மேல் மற்றொருவர் கை போட்டுக் கொண்டால் தான் எந்த வேலையையும் சுலபமாகச் செய்ய முடியும். அவர்கள் ஓடுவார்கள்; சாடுவார்கள்; குதிரை சவாரி செய்வார்கள்; பந்து விளையாடுவார்கள்.

அவர்கள் அமெரிக்கா முழுவதும் யாத்திரை செய்தனர். டிக்கெட்டு வைத்து மேற்படி வேடிக்கைகளைச் செய்து காட்டியதின் மூலம் அவர்களுக்கு ஏராளமான வருமானம் கிடைத்து அவர்கள் பிரபுக்கள் ஆயினர். அவர்கள் தங்களுடைய இருபத்தெட்டாவது வயதில் ஐரோப்பியப் பெண்களைக் கல்யாணம் செய்துகொண்டார்கள். சாங் அடலெய்ட் என்ற பெண்ணையும், எங் சாரா என்ற பெண்ணையும் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார்கள். இச்செய்தி உலகம் முழுவதும் பரவி, எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. காலக்கிரமத்தில் சாங்கிற்குப் பல குழந்தைகளும், எங்கிற்குப் பல குழந்தைகளும் பிறந்து வளர்ந்தன.

இன்று அமெரிக்காவில் சாங் — எங் இரட்டைச் சகோதரர்களின் சந்ததிகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றனர். அவர்களில் இரட்டைச் சகோதர, சகோதரிகளும் இருக்கிறார்கள்.

சில வருஷங்கள் கழிந்து சாங் நோய்வாய்ப் பட்டதால் மதுபான வகைகளைக் குடிக்கத் தொடங்கினான். இது எங்கிற்குப் பிடிக்கவில்லை. எனவே, அதன் காரணமாக இருவருக்கும் அடிக்கடி மனக் கசப்பும் சச்சரவும் உண்டாகத் தொடங்கின.

ஒரு நாள் இரவு எங் திடுக்கிட்டு எழுந்தான். அவன் சாங்கை எழுப்பிய போது சாங் எழுந்திருக்கவில்லை. பிறகு அவன்

உலகப் பிரசித்திபெற்று விளங்கும் டியான் சகோதரர்கள்





சிகாகோவில் ஜனித்த விசித்திரக் குழந்தைகள்

மனைவியையும் குழந்தைகளையும் கூப்பிட்டான். சாங் பேச்சு மூச்சின்றி இருப்பதை அவர்கள் கவனித்து, டாக்டரை அழைத்து வரச் சென்றனர். ஆனால் சாங் இறந்து விட்டதால், மிகவும் ஆரோக்கியத்துடன் இருந்த எங்கும் டாக்டர் வருவதற்குள் திடீரென்று இறந்து போய் விட்டான்.

சாங்-எங் சகோதரர்களைப் போல் இந்தியா உள்படச் சில நாடுகளில் இரட்டைச் சகோதரர்களும் இரட்டைச் சகோதரிகளும் பிறந்து உயிருடன் இருந்திருக்கிறார்கள்.

எனினும், கானடா தேசத்தில் டியான்—ஒலிவாவுக்குப் பிறந்த டியான் சகோதரிகளைப் போல் உலக சரித்திரத்தில் வேறு யாரும் அவ்வளவு புகழ் பெற்றதில்லை. ஒரு தாயின் வயிற்றில் ஒரே நாளில் பிறந்த மேரி, ஸிஸிலி, யுவான், எமிலி, ஆனெட் இந்த ஐந்து பேரும் இன்னும் வாழ்ந்து வருகிறார்கள். மேற்படி சகோதரிகள் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறார்கள். அவர்களைப் பார்க்கப் பல நாடுகளிலிருந்தும் இது வரையில் கோடிக் கணக்கான ஜனங்கள் சென்றதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

அந்தச் சகோதரிகளைப் பார்ப்பதற்காக வெளி நாடுகளிலிருந்து வருவோரின் மூலம் கானடா சர்க்காருக்கு வருஷா வருஷம் இரண்டரைக் கோடி டாலர் வருமானம் கிடைக்கிறதாம். அதிலிருந்து மேற்படி சகோதரிகளுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளலாம். டியான் சகோதரிகள் அழகாகவும் ஆரோக்கியத்துடனும் இருப்பது அவர்களுடைய புகழை அதிகப் படுத்தியிருக்கிறது.

1934-ம் வருஷம் பிறந்த டியான் சகோதரிகள் இப்பொழுது கல்யாணம் செய்து கொள்ளும் வயதை அடைந்துள்ளனர்.

சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் பிறந்த இரண்டு தலைக் குழந்தை மிகவும் விசித்திரப் பிறவியாகும். ஆனால் அந்தக் குழந்தை பிறந்து ஒன்றிரண்டு நாட்களே உயிருடன் இருந்தது.

சுமார் ஒன்றரை வருஷத்துக்கு முன்னால் சிகாகோ நகரில் பிறந்த அதிசய இரட்டைக் குழந்தைகளில் ஒன்று உயிருடன் இருந்து வருகிறது. அக்குழந்தைகள் படத்தில் காட்டியுள்ளபடி ஒரே மண்டையுடன் பிறந்ததால், அவைகளைப் பிரித்துத்தான் தீரவேண்டும் என்று பிரபல அமெரிக்க டாக்டர்கள் முடிவு செய்தனர். இல்லாவிடில் அந்தக் குழந்தைகள் ஆயுள் உள்ள வரையில் படுத்த வண்ணமே இருக்கும்படி நேரும் அல்லவா?


அதனாலேயே மண்டையில் குறுக்காக 'ஆபரேஷன்' செய்து, அவர்களுடைய உச்சி மண்டைகளில் செயற்கை மூடிகளைப் பொருத்தினர். அந்த ஆபரேஷனில், மகா சூரர்களான டாக்டர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். எனினும் அந்த இரண்டு குழந்தைகளில் ஒன்றுதான் ஆபரேஷனைத் தாங்க முடிந்தது. மற்றொரு குழந்தை ஆபரேஷன் நடந்த ஒரு மாதத்தில் இறந்து விட்டது.

இரட்டைப் பிறவிகளின் அதிசயத்தையும் காரணங்களையும் விளக்கி சர்வதேசப் புகழ்பெற்ற பல ஆராய்ச்சி நிபுணர்கள் அரிய நூல்கள் எழுதியுள்ளனர்.

பிரங்க தேசத்துப் பேராசிரியரான பால் பாலராய்ட் என்பவர் உலகத்தில் உள்ள இருபதினாயிரம் இரட்டைச் சகோதர, சகோதரிகளுக்கு எழுபது கேள்விகளை அனுப்பத் தீர்மானித்துள்ளார். இரட்டையாகப் பிறந்தவர்கள் மேற்படி கேள்விகளுக்கு ஒளிவு மறைவின்றிப் பதில் அளித்தால் பல அபூர்வ விஷயங்கள் வெளியாகுமென்று அவர் நம்புகிறார்.

ரூ. 17/8 தான் ஒரு சிறந்த 'கோடக்' காமிரா!

சொந்தமாக படம்பிடிக்கும் பெருமிதம் அடையுங்கள்—சுலபமாகவும் குறைந்த செலவிலும்! இச்சிறப்பான 'கோடக்' மாடல்களைக் கொண்டு, நீங்கள் பொத்தானை அழுத்தி, குமிழை திருப்பவேண்டியதுதான். உங்கள் கோடக் வியாபாரியே உங்களுக்கு பிலிமைக் கூட மாட்டிக்கொடுப்பார். எனினும் இவ்வெல்லா காமிராக்களும், நீங்கள் நண்பர்களிடம் பெருமையுடன் காட்டக்கூடிய சிறப்பு வாய்ந்த படங்கள் எடுப்பவைகளாகும்.






'பிரௌனி' 127 காமிரா
ஐந்தடி அருகிலுள்ள உருவத்தையும் சரி, வானளாவிய தூரத்திலிருக்கும் காட்சியையும் சரி, தெளிவாக, தத்ரூபமாகப் படம்பிடிக்கவல்லது—எதையும் மாற்றிச் சரிப்படுத்தவேண்டிய அவசியமில்லை. 'கோடக்' 127 பிலிம் ஒவ்வொரு சுருளிலும் 1⅝" × 2½" அளவில் 8 ஸ்னாப்புகள் எடுக்கலாம்.
விலை ரூ. 17/8-

பேபி 'பிரௌனி' ஸ்பெஷல் காமிரா
உள்ளங்கையிலேயே எடுத்துச் செல்லும்படி அவ்வளவு அடக்கமான காமிரா. 'கோடக்' 127 பிலிம் ஒவ்வொரு சுருளிலும் 1⅝" × 2½" அளவில் 8 படங்கள் எடுக்கலாம்.
விலை ரூ. 18/-

சிக்ஸ்-20 'பிரௌனி' காமிராக்கள்



மாடல் C: தொந்தரவுதரும் சிறுகருவிகளொன்றுமில்லை. குழப்பமுமில்லை. பத்தடி தூரம் அல்லது அதற்கு அப்பாலுள்ள எந்த உருவத்தையும் படமெடுக்கலாம். 'கோடக்' 620 பிலிம் ஒவ்வொரு சுருளிலும் சாதாரண 2¼" × 3¼" அளவில் 8 ஸ்னாப்புகள். விலை ரூ. 29/-

மாடல் D: மாடல் Cயைப்போன்றது—ஆனால் 3½ அடி அருகிலிருந்து போர்ட்ரேட்டுகள் எடுக்க க்ளோஸ்-அப் லென்ஸ் அமையப்பெற்றது.
விலை ரூ. 34/-

மாடல் E: க்ளோஸ்-அப் லென்ஸ் அமைந்திருப்பதோடு மேகங்களுடன் கூடிய வானக்காட்சிகளை அழகாக படம்பிடிக்க மஞ்சள் பில்டரும் உடையது.
விலை ரூ. 40/-

8-BC கான்வாஸ் கேஸ்—C.D. E மாடல்களுக்கு. விலை ரூ. 3/-

3-ML தோல் கேஸ்—C.D. E மாடல்களுக்கு. விலை ரூ. 8/-

இவ்விலைகளில் விற்பனைவரி சேராது

உங்கள் ஆல்பத்தை அலங்கரிக்க சிறந்த ஸ்னாப்புகள்
குடும்பத்தோர், உறவினர், கட்டிடங்கள், நிலப்பரப்புக் காட்சிகள் எல்லாம் தெள்ளத்தெளிவாக பெரிதாக்கத் தகுந்தவகையில் படம் எடுக்கலாம்.

உபயோகிக்க மிக எளிதானது
லென்ஸ் துவாரங்களோ ஷட்டர் வேகங்களோ சரிசெய்யத்தேவையில்லை. நேராக காமிராவைப் பிடித்து ஷட்டர் பொத்தானை அழுத்தவேண்டியதே.

வெளிச்சக்குறைவின் தொந்தரவில்லை
மாடல் Eயுடன் மலிவான ப்ளாஷ் பல்புகளின் உதவியினால் வீட்டினுள்ளும் இரவு வேளையிலும் ஸ்னாப்புகளும், இதர மாடல்களுடன் "ஓப்பன்-ப்ளாஷ்" உபயோகித்து குழந்தைகளின் விளையாட்டுகள், உத்ஸவங்களின் படங்களும் எடுக்கலாம்.


இன்றே உங்கள் கோடக் வியாபாரியைப் பாருங்கள்

கோடக் லிமிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

K. 7686



கொடிய
ஜலதோஷமா?
விரைவில் 2 'ஆஸ்ப்ரோ'
ASPRO



உங்கள் குழந்தை வழக்கம்
போல் சாப்பிடாவிட்டாலும்
சுறு சுறுப்பின்றி இருந்தாலும், வயிறு பெருத்திருந்தாலும் அது ஈரல், குலேக்கட்டி வியாதியாய் இருக்கலாம். இவ்வியாதி மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளிடை சகஜம்.
ஜம்மியின்
லிவர்க்யூர்
குழந்தைகளின் ஈரல், குலேக்கட்டி
வியாதிகளை குணப்படுத்தும்—
வராமலும் தடுக்கும்
NOW IN TABLETS
இப்பொழுது
மாத்திரைகளாக
தயாரிக்கப்படுகின்றது
ஜம்மி வெங்கடரமணய்யா அண்டு ஸன்ஸ்
"ஜம்மி பில்டிங்ஸ்," மைலாப்பூர், மதறாஸ்.
பிராஞ்சுகள் ;
பெரிய கடைத்தெரு, தெபபக்குளம், திருச்சிராப்பள்ளி ;
பெரிய தெரு, கும்பகோணம் மற்றும் இதர இடங்கள்.
டில்லி பிராஞ்சு : 5-A, கமலா நகர் (ஜி. டி. ரோடு, சப்ஜி மண்டி), டில்லி



3 வாசனைக் கலாரத்னங்கள்
கம் கம் ஜவாஜ் ★ கம்பால் ★ கமகர்
அகர்பத்திகள்
டி. எஸ். சுகந்தாலயா,
வாசனைதிரவிய வியாபாரிகள், பெங்களூர்-2

என் மனைவி

புஞ்யன்

என் மேஜை டிராயரெல்லாம் களேபரமாயிருந்தது. அதை ஒருவாறு ஒழுங்கு படுத்தலாம் என்று அதிலிருந்தவைகளையெல்லாம் எடுத்து மேஜைமேல் குவித்துவிட்டு ஒவ்வொன்றாக எடுத்து அடுக்கி வைக்க ஆரம்பித்தேன். அப்போது ஒரு கல்யாணப் பத்திரிகை தட்டுப் பட்டது. அதைப் பிரித்துப் பார்த்தேன். அது என் கல்யாணப் பத்திரிகையாகவே இருந்தது. தேதியைப் பார்த்தேன். சென்ற மாதத்துடன் சரியாக ஐந்து வருடங்களாகி விட்டிருந்தன.

அடே அப்பா! அதற்குள் ஐந்து வருடங்கள் ஓடி விட்டனவா! என்ன ஆச்சரியம்! என்று பிரமித்தேன். உண்மையில் என் விவாகம் நடைபெற்றது இன்னும் பசுமையாகவே இருக்கிறது. எல்லாம் நேற்று நடந்தது போலவே இருக்கிறது. காலம் எவ்வளவு வேகமாக ஓடுகிறது என்று அதிசயித்துக் கொண்டிருந்தேன்.

"என்ன, எதையோ கையில் வைத்துக்கொண்டு பிரமாதமாக யோசனை செய்கிறீர்களே" என்று கேட்டாள் என் மனைவி.

என் கையில் இருந்த கல்யாணக் கடிதத்தை அவளிடம் நீட்டினேன்.

"என்ன கல்யாணக் கடிதாசு! யாருக்குக் கல்யாணம்!" என்று கேட்டவாறே வாங்கிப் பார்த்து விட்டு, "நம் கல்யாணக் கடிதாசா! இது இப்போ எங்கே கிடைத்தது!" என்று கேட்டாள்.

"நம் கல்யாண ஞாபகார்த்தமாக இருக்கட்டும் என்று ஒரு பத்திரிகையை எடுத்துப் பத்திரப் படுத்தி யிருந்தேன். இந்த மேஜை டிராயரைத் துப்புரவு செய்யும்போது அது கிடைத்தது. பாரேன் ஜயந்தி! நமக்குக் கல்யாணமாகி ஐந்து வருடங்களாகி விட்டனவே, அதற்குள். அதிசயமாயில்லையா? நேற்றுதான் நடந்தாற் போல் இருக்கிறது......" என்றேன்.

"ஐந்து வருஷங்களாகி விட்டதா! அடே, அப்பா!" என்று கேட்டு உள்ளே சென்றாள்.

அவளைத் தொடர்ந்து சென்ற நான் "ஜயந்தி, சமையல் எல்லாம் செய்தாகி விட்டதா!" என்று கேட்டேன்.

"ஏன்!"

"சும்மா கடற்கரைப் பக்கம் போய் விட்டுவரலாம் என்றுதான்."

"கடற் கரைக்கா! பேஷாகப் போகலாம்" என்றாள் ஜயந்தி.

இருவரும் கடற்கரைக்குப் போய் ஜன சந்தடி அதிகமாக இல்லாத இடமாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டோம்.

"ஜயந்தி, நமக்குக் கல்யாணமாகி ஐந்து வருஷங்களாகி விட்டனவே. ஐந்து வருடங்களும் ஐந்தே நிமிஷம் மாதிரி அல்லவா, போய் விட்டது."

"உம்...........இருக்கும்" என்றாள் ஜயந்தி சிரித்துக் கொண்டே.

அவள் தன் பூர்ண சௌந்தரியத்துடன் அப்போது விளங்கினாள்.

நான் அவளுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் எத்தனை சாந்தம், பெருமிதம், கடமை உணர்ச்சி, அன்பு எல்லாம் கலந்து காணப்பட்டன!

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்! யாராவது பார்க்கப் போகிறார்கள்" என்றாள்.

"ஜயந்தி, உன்னையே பார்த்துக் கொண்டிருந்தால் போதும். வேறொன்றும் வேண்டாம்."

"இருக்கும். இருக்கும். இப்போது அப்படித்தான் இருக்கும். எழுந்திருங்கள் போகலாம். நாழிகையாகி விட்டது" என்றாள்.

இருவரும் வீடு திரும்பினோம்.

சாப்பிட்டு விட்டுப் படுத்துக்கொண்டு விட்டோம். ஜயந்தி நன்றாகத் தூங்கி விட்டாள். ஆனால் எனக்குத் தூக்கமே வரவில்லை. என் மனக் கண் முன்னால் என் கல்யாணப் பத்திரிகை காட்சி யளித்துக் கொண்டிருந்தது. அதன்மேல் ஜயந்தி புன்னகை புரிந்து கொண்டிருந்தாள். திரும்பிப் பார்த்தேன். ஜயந்தி நிம்மதியான தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

என் மனம் எங்கெங்கோ சஞ்சரித்துக்கொண்டிருந்தது. அவள் என்னுடையவளானது முதல் இன்று வரை – இந்த ஐந்து வருடங்களாய் — எப்படி என் இல்வாழ்வுக்கு உறு துணையாக இருந்து வந்திருக்கிறாள் என்று எண்ணிப் பார்த்துப் பொங்கிப் பூரித்தது என் மனம்.

ஐந்து வருடங்களுக்கு முன் நான் கட்டைப் பிரம்மசாரியாய் எப்படி வாழ்வைக் கடத்திக் கொண்டிருந்தேன். அவள் வந்ததும் என் வாழ்வை எப்படி மாற்றிவிட்டாள்! எனக்குத் தாய் தகப்பனார் கிடையாது. சர்க்கார் காரியாலயத்தில் ஷார்ட்



தஞ்சை ஜில்லாவில் சில காலம் மிராசுதாராயிருந்து ஓய்வு பெற்ற ஸ்ரீ டி. பி. ராமநாத ஐயரின் புதல்வி, குமாரி டி. ஆர். அம்புஜத்தின் சங்கீதக் கச்சேரி ஜனவரி மாதம் 19-ந் தேதி அன்று சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட் காட்சியின் பிரதான அரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து 23-ந் தேதி அன்றும் திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்களின் பஜனையின் போது, அவர் விருப்பப்படி மயிலாப்பூர் மாட வீதிகளில் பக்தி ரசமான பாடல்களைப் பாவத்துடன் குமாரி அம்புஜம் பாடினார். மேற்படி இரண்டு கச்சேரிகளிலும் அவர் எதிர்காலத்தில் சிறந்த பாடகி ஆவதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் நிறைந்து விளங்கின.

* * *

பிரபல திருமணம்



ஸென்ட்ரல் டீ போர்டின் உதவி டைரக்டர் ஸ்ரீ கே. வெங்கடாச்சாரி அவர்களின் குமாரர் ஸ்ரீ வி. எஸ். ராகவன் அவர்களுக்கும், ஓய்வு பெற்ற விவசாய டைரக்டர் ஸ்ரீ கே. ராகவாச்சாரியார் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி வஸந்தாவுக்கும் சென்ற மாதம் பாபநாசம் மணமகன் இல்லத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்தின் போதும், அதை யொட்டி ஜனவரி முப்பதாம் தேதி மணமகன் இல்லத்தில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசை விருந்துடன் நடந்த வரவேற்பு வைபவத்தின் போதும், சென்னை நகரில் உள்ள பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் திரளாக விஜயம் செய்து வைபவங்களைச் சிறப்பித்து மணமக்களுக்கு ஆசி கூறினர். வாழ்க வஸந்தா – ராகவன் !

ஹாண்ட் டைப்பிஸ்டாக இருந்தேன். சென்னையில் ஒரு அறையில் இரு நண்பர்களுடன் வாசம். ஹோட்டலில் சாப்பாடு. சாரமற்ற வாழ்க்கை.

அன்று என்னை என் தலைமை அதிகாரி கூப்பிட்டு எனக்கு விவாகமாகி விட்டதா என்று விசாரித்தார். அவருக்கு ஏதாவது பெண்ணிருக்கிறதோ என்று சந்தேகித்தேன். ஆனால் அவருடைய நண்பர் திருச்சிக் கருகில் ஒரு சிறு கிராமத்தில் இருப்பதாகவும் யாராவது நல்ல பையனாக இருந்தால் அவர் பெண்ணுக்குப் பார்க்கும்படி எழுதியிருப்பதாகவும் சொன்னார். அவருடைய பெண் படித்தவள் என்றும், மிகவும் கெட்டிக்காரி யென்றும் கூறினார். அவருக்கு எப்போதுமே என் மீது நல்ல அபிப்பிராயம். அதனால் அவர் என் நன்மைக்காகத்தான் கூறுவார் என்று என் மனம் கூறிற்று. "உங்களுக்கு எது நல்லதென்று தோன்றுகிறதோ அப்படிச் செய்யுங்கள்' என்று அவரிடம் கூறிவிட்டேன்.

பெண் பார்க்கும் படலம் எல்லாம் நடந்து விவாகமும் நடைபெற்றது. அடுத்த மாதமே ஜயந்தியுடன் குடித்தனம் தொடங்கி விட்டேன். படித்த பெண்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு உண்மையான திருஷ்டாந்தமாக விளங்கினாள் ஜயந்தி. அவளுடைய தகப்பனார் சாதாரண ஸ்திதியிலிருந்தவர். செய்ய வேண்டியவைகளை யெல்லாம் நன்றாகத்தான் செய்தனுப்பினார். ஆனால் நான் அவைகளைப் பற்றிக் கவலை கொள்ள வில்லை. ஜயந்தி ஒருவளே எனக்கு வேண்டியது. மற்றவை பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்!

அவள் மகா சாது. சதா புன்னகை தவழும் வதனம். அதிர்ந்து பேசத் தெரியாதவள்.

அவள் என்னுடன் வாழ வந்ததிலிருந்து என் வாழ்க்கை ஒரே ஆனந்த மயமாய் மாறிவிட்டது. அதில் ஒரு மாசும் கிடையாது. இருவரும் ஒருவரை யொருவர் மிகவும் நேசித்து ஆனந்தமாக வாழ்க்கை நடத்தி வந்தோம்.

ஜயந்தி தனக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று இதுவரை கேட்டதே யில்லை. தனக்கு இது இல்லை என்று சொன்னது கிடையாது. ஆனால் அவளோ என் தேவைகள் ஒவ்வொன்றையும் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாள்.

என் சௌக்கியமே, என் ஆனந்தமே, தன் சுகம், ஆனந்தம் என்று கருதி வாழ்க்கை நடத்தி வந்தாள். ஒவ்வொன்றிலும் நன்றாகக் கூர்ந்து கவனித்து வந்து எனக்கும் உற்ற துணையாக இருந்து குடும்பத்தை நடத்தி வந்தாள்.

அவளைப் பற்றி நான் பெருமை கொள்ளாத தினமே கிடையாது. எப்போதும் என் மனக் கோவிலில் அவளைப் பிரதிஷ்டை செய்து வைத்துக் கொண்டிருந்தேன்.

அவளை என் கண்ணுக்குள் கண்ணாக வைத்துப் போற்றினேன். மாலை நேரங்களில் கடற்கரைக்கு உலவப் போய் உலகையே மறந்து விட்டிருக்கிறோம். கச்சேரி, சினிமா என்று அழைத்துக் கொண்டு போய் அவளை என்னால் முடிந்த வரையில் மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்திருக்கிறேன்.

ஆனால் இன்று, கல்யாணமாகி நாங்கள் வாழ்க்கை ஆரம்பித்து ஐந்து வருடமாகி விட்டன என்று தெரிந்த போது, இன்று அவளுடைய முகத்தைப் பார்க்கும் போது, அவளுடைய அங்கங்களைப் பார்க்கும்போது, நான் செய்யத் தவறி விட்ட ஒரு கடமையை என் மனம் உணர்த்தியது.

ஜயந்தி என்னிடம் இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்டதில்லை. ஆனால் அவளுக்கு நான் என்ன செய்து விட்டேன்! அவளைத் திருப்தியுறச் செய்து வருகிறேன், சகல விதங்களிலும் என்று எண்ணி வந்தேனே இது காறும் அது சரிதானா! இல்லை......இல்லை...எப்படி முடியும்!

ஐந்து வருடங்களாயிற்று அவள் என்னுடன் ஐக்கியமாகி. இன்னும் அவள் தன்னுடைய பிறந்தகத்திலிருந்து கொண்டு வந்த அந்தப் பட்டுப் புடவைகளைத் தவிர வேறு எதை வைத்திருக்கிறாள். நான்கு தீபாவளிகள் போய்விட்டன. ஒரு தீபாவளிக்காவது பட்டுப் புடவை வாங்கித் தந்தேனா? அதே சங்கிலி, வளையல்கள். ஒரு சங்கிலி இருக்கட்டும்; ஒரு ஜதை வளையலாவது வாங்கித் தந்தேனா! நான் வாங்கித் தரவில்லை என்று அவள் உள்ளத்தில் ஏக்கம் ஏதாவது இருக்காதா! அப்படியே இல்லாமல் இருந்தாலும் 'என் கடமை' என்று ஒன்று இல்லையா!

"ஆமாம், அடுத்த வருடம் ஆறும் வருட விவாக தினம் வரும்போது அவளுக்கு அன்று ஒரு பட்டுப் புடவையாவது பரிசளித்துத் தீரவேண்டும். அவளுக்குத் தெரியாமல், சொல்லாமல் கொள்ளாமல் வாங்கி வந்து பிரமிப்பை யூட்டவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

'.ஆனால் எப்படி வாங்கிக் கொடுப்பது! மாதம் வரும் சம்பளம் ஏதோ ஒருவாறாகக் கஷ்டப்படாமல் சாப்பிடத்தான் சரியாக இருக்கிறது. இதிலே

எப்படி மிச்சம் பிடித்து வைப்பது!" என்றும் யோசனை தோன்றிற்று. எப்படியாவது கஷ்டப் பட்டு இதைச் செய்துதான் தீரவேண்டும் என்று நிச்சயம் செய்து கொண்டேன்.

"என்ன இன்னும் தூங்காமல் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்!" என்றாள் ஜயந்தி தூக்கத் தில் இருந்து விழித்து.

"ஒன்றுமில்லை. நம் கல்யாண நாள் எல்லாம் ஞாபகம் வந்து அதிலேயே மூழ்கி விட்டேன்!" என்றேன் அவளைப் பார்த்துச் சிரித்தபடியே.

"அப்படியா......!" என்றாள் புன்னகையுடன். "சரி, தூங்குங்கள்! காலையில் ஆபீஸுக்குப் போக வேண்டாமா!" என்று கேட்டாள் அரிக்கன் விளக்கைக் கொஞ்சம் சிறிதாக்கியபடியே.

2

பத்து நாட்களுக்குப் பிறகு என் நண்பன் ராம மூர்த்தி சொன்னான், சைனா பஜாரில் ஒரு கடையில் ஓய்வு நேரத்தில் வேலை செய்யும் டைப்பிஸ்ட் வேண்டுமென்று. மேலும் அவனுக்குத் தெரிந்த வனாம். தினம் மாலை ஆறு மணி முதல் எட்டுமணி வரை வேலை என்றும் மாதம் இருபத்தைந்து ரூபாய் தருவதாகவும் கூறினான். மாதம் இருபத்தைந்து ரூபாய் என்றால் ஒரு வருஷத்தில் முன்னூறு ரூபாய். அதை அப்படியே சேர்த்து வைத்து ஜயந்திக்கு ஒரு பட்டுப் புடவையுடன் சங்கிலியும் வாங்கி விடலாமே! ஆகா! நான் நினைத்ததும் இவ் வேலை கிடைக்க இருப்பதும் என்னுடைய அதிர்ஷ்டம் என்று நினைத்தேன். உடனே அந்த வேலையை ஏற்றுக் கொண்டு விட்டேன்.

வேலையை ஏற்றுக் கொண்ட தினம் இரவு ஒன்பது மணிக்கு வீடு வந்ததும் ஜயந்தி பரபரப் புடன், "ஏன் இத்தனை நாழி! நான் என்னென் னமோ நினைத்து விட்டேனே! எனக்கு ஒரு வேலை யும் ஓடவேயில்லை!" என்று பேச ஆரம்பித்தாள்.

அவளிடம் நான் உண்மையைக் கூறவில்லை. உண்மையைக் கூறிவிட்டால் அதில் சுவாரஸ்யம் எப்படியிருக்கும்! திடீரென்று அவளைப் பிரமிக்க வைக்க வேண்டுமென்பதுதானே என் எண்ணம்! ஆகவே அவளிடம், "இன்றையிலிருந்து என்னை வேறு இலாகாவுக்கு மாற்றியிருக்கிறார்கள். அந்த இடத்தில் வேலை அதிகம். தினமும் இப்படித்தான் நேரமாகி விடும்" என்றேன்.

"ஐயோ! அப்படியானால் நான் அத்தனை நேரம் வரையில் எப்படித் தனியாக இருப்பேன். தினமும் சாயங்காலம் ஐந்து மணி யானாலே உள்ளுக்கும் வாசலுக்கும் நூறு தடவை நடக் கிறேனே நீங்கள் வருகிறீர்களா, வருகிறீர்களா என்று பார்க்க!" என்று கவலை கொண்டாள்.

"என்ன செய்யலாம் ஜயந்தி. எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கிறதா!" என்று அவளுக் குத் தேறுதல் வார்த்தை சொன்னேன்.

ஒவ்வொரு நாள் இரவு வேலையை முடித்துக் கொண்டு வர பத்து மணிக்கு மேலும் ஆகிவிடும். ஆறு மணி முதல் எட்டு மணி என்று கணக்காக வேலை பார்க்க முடியுமா!

"தினம் இப்படி ராத்திரி எட்டு, ஒன்பது மணி வரை வேலை செய்து வந்தால் உடம்பு என்னத்துக் காகும். சீக்கிரம் பழைய இலாகாவுக்கு மாற்றிக் கொள்ளுங்களேன்!" என்று கூறினாள்.

"அதெல்லாம் நம் இஷ்டப்படியா நடக்கும், ஜயந்தி! இப்பத்தானே மாற்றியிருக்கிறார்கள்! இந்த இடத்தில் வேலை கஷ்டம்தான். அதனால் எல்லோரையும் ஒரு வருஷத்துக்கு இங்கு மாற்று வார்கள். அதுபோல் ஒரு வருஷம் ஆனதும் என்னை யும் மாற்றி விடுவார்கள். அதுவரை பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும்" என்று புளுகினேன்.


"ஐயோ! உடம்பு பாதியாகி விட்டதே!" என்று அங்கலாய்த்தாள் ஒரு நாள்.

"சீ, அசடே. என்னென்னத்தையோ நினைத்து மனசை அலட்டிக் கொள்ளாதே. எனக்கு ஒன்று மில்லை. நான் நன்றாகத்தான் இருக்கிறேன்" என்று கூறி அவளை மேலும் சமாதானம் செய்ய முயன்றேன். தினமும் அவள் என் உடம்பைப் பற்றிக் கூறாமல் இருக்கவே மாட்டாள்.

உண்மையிலேயே தினம் தினம் இரவு ஒன்பது, பத்து மணி வரை அவனிடம் மூதுகொடிய வேலை செய்வது கஷ்டமாகத்தான் இருந்தது. அவன் கொடுக்கும் இருபத்தைந்து ரூபாய்க்கு மூன்று பங்கு வேலையை வாங்கினான். ஆனாலும் பல்லைக் கடித்துக் கொண்டு வேலை செய்து கொண்டிருந் தேன். இந்த நாலு மாதங்களில் நூறு ரூபாய் சேர்ந்து விட்டது. இன்னும் எட்டு மாதம். அப் புறம் அவளுக்குப் பட்டுப் புடவை, தங்கச் சங்கிலி வாங்கிக் கொடுத்துவிடலாம். பிறகு எப்போதும் போல மாலை ஆறு மணிக்கு வீட்டுக்குப் போக லாம். இந்த எண்ணம் தோன்றவும் இன்னும் உற்சாகத்துடனேயே வேலை செய்து வந்தேன்.

3

அன்றிரவு வெகு நேரம் ஆகிவிட்டது. பத்து மணி வரையில் வேலை இருந்தது. வருஷாந்திரக் கணக்கு எடுக்க வேண்டியிருந்தது. எல்லாவற்றை



வந்தவர் :— உங்ககிட்டே 'அசோகா' பாக்கும் வெற்றிலையும் இருக்கோ ? ;
மற்றவர் :—அடே, சரிதான் போய்யா எப்ப கண்டாலும் யாசகம்தான் .... இல்லே ஐயா ! போம்.
வந்தவர் :— அடாடா, உங்ககிட்டே இல்லேன்னு உமக்குக் கொடுக்கலாம் என்றுதான் வந்தேன்...அதுக்குள்ளே...
மற்றவர் :—அப்படியா, நீர் புத்திசாலி ஐயா! சமயத்தில் வந்தீர்.

பலஹீனமாக இருக்கிறீர்களா?



ஆல்போ-ஸாங்

உட்கொண்டு திடமடையுங்கள்



மூன்று விதமான குணமளிக்கும் ஓர் அற்புத சஞ்சீவி

- ரத்த விருத்தி செய்கிறது
- உடலுக்கு வலுவூட்டுகிறது
- சர்வ ஜீரண சக்தி பயக்கிறது

ஆல்போ-ஸாங் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் தினசரி ஆகாரத்திற்கு ஓர் சிறந்த சேர்க்கை



PRICE
Rs. 1/8/-
" 3/-
" 7/-

J. & J. DeChane
RESIDENCY ROAD,
HYDERABAD-DECCAN

யும் முடித்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்படும் போது மழை தூற ஆரம்பித்து விட்டது. நல்ல வேளையாகக் கடைசி பஸ் கிடைத்தது. மழை பெரிதாகப் பெய்ய ஆரம்பித்து விட்டது. பஸ்ஸி லிருந்து இறங்கி ஒரு இடத்தில் ஒதுங்கிக் கொண் டேன். ஆனால் மழை நிற்பதாயில்லை. அந்தப் பெரும் மழையில் நனைந்து கொண்டே வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அந்த வேளையிலும் ஜயந்தி வாசற்படியில் நின்று கொண்டே என் வரவை எதிர் பார்த்துக் கொண் டிருந்தாள். என்னைக் கண்டதும், "ஐயோ, மழை யில் இப்படித் தெப்பமாய் நனைந்து விட்டீர்களே. காலையிலேயே நீங்கள் சரியாகச் சாப்பிடவில்லை. உடம்பு சரியில்லாமல்..." என்று அவசரமாக என் நனைந்த சட்டையைக் கழற்ற ஆரம்பித்தாள்.

* * *

காலையிலே கண் விழித்தபோது கண் எரிந் தது. தலை கனத்தது. பல் தேய்க்கப் போனபோது அவள் என்னைப் பார்த்து விட்டு "ஐயோ, உங்கள் கண் என்ன அப்படிச் சிவந்திருக்கிறதே" என்று கூறிப் பதை பதைப்புடன் நெற்றியில் கை வைத் துப் பார்த்து விட்டு, "அப்பா, நெருப்பாய்ச் சுடு கிறதே. நீங்கள் இன்று ஆபீஸுக்குப் போக வேண்டாம்" என்று கூறினாள்.

"இல்லை ஜயந்தி, காப்பி 'ஸ்ட்ராங்'காய்ப் போட்டுக் கொடு. சரியாய்ப் போய்விடும். நீ கவலைப்படாதே" என்றேன். அவள் எவ்வளவு கூறியும் மீறி ஆபீஸுக்குப் போனேன்.

"போகும்போது டாக்டரிடம் மருந்து வாங்கிக் கொள்ளுங்கள். சாயந்திரம் சீக்கிரம் வீட்டுக்கு வந்து விடுங்கள்" என்றாள்.

"ஐயோ அசடு... எனக்கு ஒன்றுமில்லை. கொஞ் சம் தலையை வலித்தால் இப்படிப் பிரமாதப் படுத்துகிறாயே! இதற்குப் போய் டாக்டரிடம் இரண்டும், மூன்றும் ஏன் தண்டச் செலவு செய்ய வேண்டும். நீ ஒன்றும் கவலைப்படாதே. சாயந் திரம் எல்லாம் சரியாய் விடும் பார்" என்று கூறிவிட்டு ஆபீஸுக்குப் போனேன்.

ஆனால் நான் கூறியபடி சரியாகவில்லை. தலைவலி மிகவும் அதிகமாகி விட்டது. உட்கார்ந்து வேலை செய்யவும் முடியவில்லை. மத்தியானமே லீவ் போட்டு விட்டு வந்து விட்டேன்.

ஜயந்தி என்னைக் கண்டதும் பதறிப்போனாள். "நான் சொன்னேனே கேட்டீர்களா! இப்படி யாகிவிட்டதே!" என்று தவித்தாள்.

"ஜயந்தி! நீ என்ன, இப்படி ஒன்றுமில்லாததற் கெல்லாம் பிரமாதப் படுத்துகிறாயே" என்றேன்.

"நானா பிரமாதப் படுத்துகிறேன். நான் என்ன சொல்லியும் கேட்காமல் போனீர்களே! நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்" என்றாள்.

"இதோ பார் ஜயந்தி, டாக்டரும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்" என்றேன்.

அவள் விடவில்லை. டாக்டரை அழைத்து வந் தாள். டாக்டர் வந்தார். மருந்தைக் கொடுத் தார். சாதாரணமாக இருந்த ஜுரம் டைபாய் டாக மாறிற்று. இதை அறிந்த ஜயந்தியின் தவிப் பைக் கூற முடியாது. சதா என்னருகிலேயே இருந்து கவனித்து வந்தாள். டாக்டர் பீஸ், மருந்து, பழம், பால், ரொட்டி என்று நான் ஜயந்திக்காகச் சேர்த்து வைத்த பணம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து விட்டது.

உடம்பெல்லாம் சரியாய்ப் போனதும் டாக்டரிடமிருந்து பாக்கிக்காக பில் வந்தது. ஐம்பது ரூபாய் பாக்கியிருந்தது. அவர் கண்டிப்புப் பேர் வழி. அதனால் உடனே கொடுத்துவிட வேண்டும். என்ன செய்வது! கையில் சேர்த்து வைத்த பணமும் முன்னாலேயே செலவழிந்து விட்டது.

"இந்தாருங்கள், இந்த வளையலை வைத்து முதலில் டாக்டர் பாக்கியைத் தீர்த்து விடுங்கள். அப்புறம் மாசம் ஐந்தோ, பத்தோ கொடுத்து மீட்டுக் கொள்ளலாம்" என்று கூறி ஒரு ஜோடி வளையல்களை நீட்டினாள் ஜயந்தி.

எனக்கு மிகவும் கஷ்டமாய் விட்டது. "முடியாது, அதுமட்டும் முடியாது ஜயந்தி. நீ வந்தது முதல் நான் உனக்கு என்ன செய்திருக்கிறேன்! என் கையால் ஒரு நகை போட்டிருக்கிறேனா! ஒரு பட்டுப் புடவைகூட வாங்கித் தரவில்லையே. உண்மையாய்ச் சொல்லுகிறேன் ஜயந்தி. அந்த நகைகளைத் தொட எனக்கு என்ன உரிமை இருக்கிறது! உனக்குப் பட்டுப் புடவை வேண்டுமென்றுதான் இரவு பத்து மணிக்கும், பதினொரு மணிக்கும் வீட்டுக்கு வந்து சம்பாதித்துச் சேர்த்தேன், ஆறுமாதமாய். ஆனால் கண்ட பலன்! எனக்கு உடம்புக்கு வந்து அதெல்லாம் செலவழிந்து போனது போதாமல் உன் நகையிலும் நான் கை வைப்பதா! மாட்டேன். நான் வேறு எங்காவது எப்பாடுபட்டாவது யாரிடமாவது கடன் வாங்கிக் கொடுத்து விடுகிறேன்..." என்றேன்.

"எனக்காகவா நீங்கள் இத்தனை நாட்களும் இராத்திரி பத்து மணிவரை உழைத்து உடம்பைப் பாழாக்கிக் கொண்டீர்கள்! என்னிடம் நீங்கள் சொல்லவே யில்லையே......"

"திடீரென்று உனக்குப் பட்டுப் புடவையும், தங்கச் சங்கிலியும் வாங்கி வந்து பிரமிப்பை யூட்ட வேண்டுமென்று நினைத்துத்தான் ஆபீஸில் அதிகம் வேலை யென்று மழுப்பி வந்தேன். சைனாபஜாரில் ஒரு கடையில் உத்தியோகம் செய்து வந்தேன், சாயந்திரம் ஆறு மணி முதல்."

"நான் உங்களை என்றைக்காவது பட்டுப் புடவையும், நகையும் வேண்டுமென்று கேட்டேனா! நீங்களாக ஏன் இம்மாதிரி செய்கிறீர்கள்?"

"நீ கேட்காவிட்டால் எனக்கு மட்டும் ஆசையாயிருக்காதா, ஜயந்தி!" என்றேன்.



"எனக்கு ஒரு சின்ன நாய்க்குட்டி வேணும், ஸார்!"

"ஏன், உங்கள் வீட்டில்தான் பெரிய நாய் ஒன்று இருக்கிறதே!"

"ஆமாம். முந்தாநாள் இரவு வீட்டில் ஒரு திருடன் நுழைந்து விட்டான். அந்த நாய் வாயைத் திறக்கவேண்டுமே! கிடையாது. அது ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தது. பெரிய நாயை எழுப்பத்தான் ஒரு சின்ன நாய்க்குட்டி வேணும் என்கிறேன்!"

"ஆசை, அளவுக்கு மீறி ஏன்! இப்போது பாருங்கள்; உங்கள் உடம்பு எப்படி ஆகிவிட்டது. நான் தினமும் இரவும் பகலும் பகவானை வேண்டிக் கொண்டு இருந்தது உங்களுக்கு என்ன தெரியும்! உங்களைவிட எனக்குப் பட்டும் தங்கமும் என்ன உசத்தி! இருப்பதே போதுமே! எனக்கு நகையும், பட்டும் வேண்டாம். நீங்கள் இம்மாதிரி யெல்லாம் இனிமேல் செய்வதில்லை யென்று சொல்லுங்கள்" என்று என்னைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டாள்.

"ஜயந்தி, நான் உன்னை அடைந்தது எவ்வளவு பாக்கியம்! உன் குணம் எவ்வளவு தங்கமானது!" என்று கூறி அவளுடைய கையைப் பற்றினேன்.

"ஸார், டாக்டர் பணம் வாங்கிக் கொண்டு வரச் சொன்னார்" என்று கேட்டுக் கொண்டு அவருடைய குமாஸ்தா வந்து நின்றான்.

"இந்தாருங்கள். பிடிவாதம் செய்யாமல் வாங்கிப் போங்கள். பிறகு மீட்டுக் கொள்ளலாம்" என்று வளையை நீட்டினாள் ஜயந்தி.

நான் வாயைத் திறக்காமல் வளையலை வாங்கிப் போய் டாக்டருக்குச் செலுத்த வேண்டிய பாக்கியைச் செலுத்தி விட்டுத் திரும்பி வந்தேன்.



ரமண பக்தரின் மகா சமாதி

ஸ்ரீ ரமண மகரிஷியின் பரம பக்தரான ஸ்ரீ நிரஞ்ஜனானந்த சுவாமிகள் சென்ற ஜனவரி 29-ல் திருவண்ணாமலையில் மகா சமாதி அடைந்தார். 1917-ம் ஆண்டில் சந்நியாசம் பூண்டு திருவண்ணாமலை ஆசிரமத்தில் சேர்ந்த நிரஞ்ஜனானந்த சுவாமிகள் சென்ற முப்பத்தைந்து வருஷங்களாக ரமண பகவானுக்கும் ரமணாசிரமத்துக்கும் அரும் தொண்டு புரிந்து வந்தார். ரமணாசிரம நிர்வாகக் கமிட்டியின் தலைவர் என்ற முறையில் அவர் செய்த சேவை போற்றத் தக்கதாகும்.

சுவாமிகள் தமது தாயாரிடம் கொண்ட பக்தி இணையற்றது. அவர் தமது தாயாரின் சமாதிக்கு மேலே மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தை நிர்மாணிக்க ஏற்பாடு செய்தார். 1949-ல்தான் அந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடந்தது.



ஸ்வாத்


சுத்தி செய்த
நிலக்கடலை எண்ணை

துஷார்

வனஸ்பதி

இரட்டிப்பாக தெளிவாக்கி
சுத்தி செய்தது மேன்மையான
குணமுடையது.





நிராளா

பார் சோப்

துணிகளை கெடுக்காது.
வெண்மையாக வெளுக்கும்.

ASP-STH-3

துங்கபத்ரா இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்னூல்


ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

51. உட்டியாணு செய்யும் விதம்

அரை அல்லது ஒரு அடி இடைவெளி விட்டுப் பாதங்களை அகலமாக வைத்து நிற்கவும். இரண்டு கைகளையும் சித்திரத்தில் உள்ளபடி துடைமேல் வைத்துக் கொள்ளவும். முன் பக்கமாகச் சிறிது குனியவும். வயிற்றைத் தொய்ய விட்டு இறுக்கம் இல்லாமல் தளர்த்தவும். மூச்சைப் பூராவும் வெளியில் விடவும். வயிற்றை உள்ளுக்கு இழுத்து எடுக்கவும். முடிந்த மட்டும் அதாவது ஐந்து அல்லது பத்து எண்ணும் வரை அப்படியே நிற்கவும். பிறகு நிமிர்ந்து சாதாரணமாய் மூச்சை இரண்டு மூன்று தரம் இழுத்து விட்டு மறுபடியும் மேற் சொன்னபடி செய்யவும். இம்மாதிரி மூன்று முதல் ஆறு தடவைகள் வரை செய்யலாம்.

மற்ற ஆசனங்களைப் போலச் சொன்னவுடன் புரிந்து கொண்டு அதன்படி செய்யக்கூடிய பயிற்சி அல்ல இது. காலைத் தூக்க வேண்டும், கையை ஆட்ட வேண்டும், உடலை மடக்க வேண்டும் என்று சொன்னால் சற்றேறக்குறைய செய்து விடலாம். இப் பயிற்சியை முதன் முதலில் நாம் நினைத்தபடி செய்ய வராது. இது வயிற்றுத் தசைப் பயிற்சியானதினால் சிறிது நிதானமாகத் தான் வரும். வயிற்றிலுள்ள உறுப்புகளுக்கும் இது புது முறையானதினாலும் சற்று சிரமமானது. ஆரம்பத்திலேயே படத்தில் உள்ளபடி செய்ய வருவது கஷ்டம். ஆனால், சிறிது முயற்சியுடன் தினமும் காலையில் பல தடவை செய்து வந்தால், இருந்தாற் போலிருந்து ஒரு நாள் சரியாய்ச் செய்ய வந்து விடும். செய்த வரையில் பலன் உண்டு.



முதலில் இந்தப் பயிற்சியைச் செய்ய வேண்டுமானால், அடி வயிறு கரைந்து, தொந்தி யில்லாமல் இருக்க வேண்டும். அவர்களுக்குத் தான் சீக்கிரமாக வரும். மற்றவர்கள் புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம், சர்வாங்காசனம் முதலியவைகளைச் செய்து, வயிற்றைக் கரைத்துக் கொண்டால் அவர்களுக்கும் சீக்கிரமாக வந்து விடும். "வயிறு கரையவேதது" என்று இப் பயிற்சியை ஒதுக்கக் கூடாது. இப் பயிற்சியை முடிந்த மட்டும் செய்து வந்தாலும் வயிறு கரையும். அதனால் பலனும் உண்டு.

மெலிந்து தொப்பை இல்லாமல் இருக்கிறவர்களுக்கும் முதலில் வயிற்றை எகிறினதும் சித்திரத்திலுள்ளபடி வந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது. முதலில் வயிற்றை உள்ளுக்கிழுத்து முதுகுச் சதைகளுடன் ஒட்ட முயற்சி செய்ய வேண்டும். இப்படியே செய்து வந்தால் சில நாட்களில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு கம்பி போல, சித்திரத்தில் உள்ளபடி செய்ய வரும். மூச்சைப் பூரணமாக வெளியில் விட்டால்தான் வயிற்றுச் சதை முதுகெலும்புடன் ஒட்டும். சரி வர வயிறு உள்ளுக்குப் போகும். இல்லையானால் சிறிதுதான் உள்ளுக்குச் செல்லும். ஆரம்ப சாதகர்களுக்கு முதலில் அவ்வாறுதான் செய்ய வரும். கவனம் வைத்துப் பூராக் காற்றையும் வெளியில் விடப் பிரயத்தனம் செய்ய வேண்டும். சிலர் வயிற்றைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு எக்குவார்கள். அப்படி எக்கினாலும் ஆரம்ப சாதகர்களுக்குச் சரிவர வராது. பழகின பின் எப்படிச் செய்தாலும் உட்டியாணு தானாய் உண்டாகி விடும். ஆரம்பத்தில் வயிற்றைத் தளர்த்தித் தொய்யவிட வேண்டும். அதற்குத் தான் சற்று குனிந்து கொண்டால் நல்லது என்று சொல்லுவது. அப்படிக் குனிவதால் வயிற்று மேல் சதைகளும் வயிற்றினுள் செல்லும். ஆரம்பத்தில் சித்திரத்தில் உள்ளது போல் வயிற்றில் இரண்டு பக்கங்களிலும் சதை கம்பிபோல் தோன்றாது. மொத்தத்தில் உள்ளுக்குச் செல்லும். அவ்வாறே சில நாட்கள் செய்து கொண்டு வந்தால் விரைவில் சித்திரத்திலுள்ளபடி செய்ய வரும்.

இப் பயிற்சியைக் காலையில்தான் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் வயிறு காலியாய் இருக்கும். மற்ற ஆசனங்களை யெல்லாம் செய்து விட்டுக் கடைசியில் இதைச் செய்யலாம். மாலையில் செய்ய வேண்டுமானால், சாப்பிட்டுக் குறைந்தது ஆறு ஏழு மணி நேரம் ஆகி யிருக்க வேண்டும். அதாவது பகல் பன்னிரண்டு மணிக்குச் சாப்பிட்டால் இடையில் தாகத்துக்குத் தண்ணீர் அருந்துவதைத் தவிர வேறு ஒன்றும் சாப்பிடாமல் மாலையில் ஏழு மணிக்குச் செய்யலாம். அப்படி அவசியமானால் மூன்று அல்லது மூன்றரை மணிக்கு எலுமிச்சை பானமோ, பழச்சாறோ, அருந்தலாம். கடின உணவு சாப்பிடக் கூடாது.

இந்தப் பயிற்சியைப் பதினைந்து வயதிற்கு மேற்பட்ட யாரும் செய்யலாம். அப்பொழுதுதான் அவர்களுக்குத் தாது உற்பத்தியாகி ஸ்திரப்படுவதால் அவ் வயதிற்குமேல் செய்தால் நல்லது. பதினைறு வயது ஆகாத சிறுவர்கள் இதைச் செய்யவே கூடாது.

இரத்த அமுக்கமுள்ளவர்கள், பலவீனமான இருதயம் உள்ளவர்கள் வயிற்றில் ஆப்பரேஷன் செய்து கொண்டவர்கள் இதைச் செய்யக் கூடாது. கர்ப்ப ஸ்திரீகள் பழகவே கூடாது. வயிற்றில் ரணம் உள்ள

வர்களும், குடல் பிதுக்கம் உள்ளவர்களும் இந்த ஆசனத்தைப் பயிலக் கூடாது.

பலன் :—மலச் சிக்கல் தலை காட்டாது என்று சொல்லத் தேவையில்லை. உட்டியாணா என்றால் மேல் செல்வது என்று அர்த்தம். இந்த ஆசனம் செய்யும்போது டயாபரம் எனும் தோல் தடை மேலே எழும்பி நுரை ஈரலுடன் ஒட்டுகிறது. காற்று பூராவையும் வெளியில் விட்டு வயிற்றை உள்ளுக்கு எக்கும்போது டயாபாரம் சுலபமாய் நுரை ஈரலுடன் எழும்பிப்போய் ஒட்டுகிறது. இப்படிச் செய்வதால் நுரையீரல் குறுகலடைந்து பயிற்சி பெற்று சுறு சுறுப்படைகிறது. அதனால் இப் பயிற்சியை ஆரம்பத்தில் அதிக தடவை செய்யக் கூடாது. மூன்று தடவையே போதும். அதிக தடவை செய்தால் ஒரு சிலருக்கு மார்பு வலிக்க ஆரம்பித்து விடும். மற்றப் பயிற்சிகள் எதிலும் இல்லாதவாறு இருதயத்தையும் நுரை ஈரலையும் நன்கு தடவிக் கொடுத்தது போல் அதாவது 'மாசேஜ்' செய்ததுபோல் இந்தப் பயிற்சி அமைந்திருக்கின்றது.

இந்தப் பயிற்சி வயிற்று உறுப்புகளுக்கு மட்டும் அமையவில்லை. அவைகளுக்கு எப்படி இது உத்தமமான பயிற்சியோ, அதைப்போல டயாபரத்தின் மேல் பாகங்களிலுள்ள அவயவங்களுக்கும் இது மிக உன்னத பயிற்சியாகும். முக்கியமாய் ஆஸ்துமாக்காரர்களுக்கு இது மிக ஏற்ற பயிற்சி. அவர்களுடைய நுரை ஈரல் அதன் சம்பந்தப்பட்ட காற்றுக் குழாய்கள் அதில் பரவியுள்ள முதுகந்தண்டு, நரம்புகள் முதலியவைகள் அவர்களுடைய சுவாதீனத்திலில்லாமல் இருப்பதால்தான் அவர்களுக்கு ஆஸ்துமா வருகிறது. ஆனால் உட்டியாணா செய்யும்போது இந்த அவயவங்களெல்லாம் நமது ஆட்சிக்குள் வருகின்றன. எதிர் பாராவிதமாய் டயாபரம் நுரை ஈரலை வந்து தாக்கி அழுத்தவும் காற்று சிறிது கூட உள் செல்லாதபடி தொண்டையில் உள்ள காற்று வழி அடைத்துக் கொள்ளவும், நுரை ஈரல் சிறிது நேரம் அழுங்கி இருக்க வேண்டியிருக்கிறது. அப்பொழுது உட்டியாணா செய்தானதும் அது விடுதலையடைந்து முன்னிலும் சுறு சுறுப்பாய்க் காணப்படுகின்றது. அதன் வழிகள் அடைப்புகள் எல்லாம் விலக்கப்பட்டு நரம்புகளி லெல்லாம் புதிய ரத்தம் தீவிரமாய்ப் பாய்ந்து அதற்கு உற்சாகத்தை உண்டாக்குகின்றது. அதே சமயம், தோள்களுக்கும் மார்புத் தசைகளுக்கும் பயிற்சி ஏற்படுகின்றது. எனவே மார்பு பாகத்திற்குப் பூராவும் நன்கு ரத்தம் பரவி ஒரு புதிய உற்சாகம் சுறு சுறுப்பு ஏற்படுகின்றது.

இப் பயிற்சி மற்றொரு விதத்திலும் ஆஸ்துமாக்காரர்களுக்கு உதவுகின்றது. உட்டியாணாவில் சிறுநீர்க் காய்களின் மேலுள்ள அட்ரினேல் கோளமும் நேரடியாக அமுக்கப்படுவதால் அட்ரினேல் கோளமும் சுறு சுறுப்படைந்து அதன் ரசம் ரத்தத்தில் கலக்கின்றது. எனவே, ரத்தம் போதிய வேகம் அடைந்து, அது பாயும் நுரை ஈரல், காற்றுக் குழாய்கள் நரம்புகளுக்கெல்லாம் ஒரு வேகத்தைக் கொடுக்கின்றது. இவ் வேகத்திற்காகத்தானே அட்ரினேலின் மருந்தை ஊசி மூலம் செலுத்துவது! அவ் ஊசியின் அவசியமின்றியே இவ்வுட்டியாணாவில் காரியம் நடந்து விடுகிறது.

ஆஸ்துமா நோயுள்ளவர்கள் உடனடியாக விடுதலையடையவேண்டுமானால் உட்டியாணாவைத் தினசரி காலி வயிற்றில் காலை மூன்று அல்லது ஐந்து தடவை செய்து வந்தால் போதும். அவர்களுக்கு அட்ரினேல் ஊசி போட்டுக் கொண்டதால் ஏற்படும் பலன் கிடைத்து விடும்.

மற்றும் இப் பயிற்சியினால் அஜீரணம் விலகும். ஆகாரப் பை நன்கு அமுக்கப்படுவதால் நல்ல பசி எடுக்கும். நல்ல ஜீரண சக்தி ஏற்படும். குடல்களில் ஆகாரம் நன்கு ஜீரணம் ஆகும். சக்தியில்லாமல் இருக்கும்போதுதான் வாய் அரோசகமாய் இருக்கும். இது இயற்கையாய்க் கொடுத்த ஒரு சக்தி. குடல்களில் இருக்கும் ஆகாரம் ஏற்கெனவே ஜீரணமாகவில்லை, ஏதோ கோளாறு இருக்கின்றது என்று தெரிவிக்கவே வாயில் எது போட்டாலும் ருசிக்காமலும் சாப்பிட வேண்டுமென்ற ஆசை ஏற்படாமலும் இருக்கிறது. அதை அறிந்து சாப்பிடாமல் இருப்பதே உத்தமம். சிலர் அந்த சமயத்தில் சாப்பிட முடியவில்லையே என்று மாங்காய் ஊறுகாய்களென்ன, கிச்சிலி ஊறுகாய்களென்ன, எலுமிச்சை என்ன இம்மாதிரி துணைகளுடன் கஷ்டப்பட்டாவது சாப்பிடுவார்கள். அதைப் போலத் தவறுதலான காரியம் வேறெதுவுமே இல்லை. அப்படித்தான் சாப்பிட முடியாவிட்டால் என்ன முழுகிப் போய் விட்டது! இயற்கைதான் வேண்டாமென்று தடுக்கிறதே!

இதைத் தவிர அன்பர்கள் மற்றொன்றும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஏதோ சிறு அசௌகரியமாய் இருந்தாலும் பட்டினி போட்டு விடுவது மிகச் சிலாக்கியமானது. அப்படிப் பட்டினியிருந்தால் குடல்களிலுள்ள சிறிய சிறிய ஆகாரங்களும் ஜீரணித்துச் சுத்தமாகும். அதற்கும் சிறிது ஓய்வு கிடைக்கும். ஆலைகளில் வேலை செய்யும் பெரியபெரிய இயந்திரங்களுக்கெல்லாம் வாரத்திற்கொரு நாள் ஓய்வு கிடைக்கிறது. இந்த அப்பாவி வயிற்றுக்கு விடுதலையே கிடையாது. ஓய்வே கிடையாது. அதற்கு வாரம் ஒரு தடவையோ மாதம் இரண்டு தடவையோ ஓய்வு கொடுத்தால் நம்மை வாழ்த்தும். நாம் உயிருள்ளளவும் நம்முடன் ஒத்துழைக்கும். அப்படியும் சில நாட்கள் நாம் ஒன்றும் சாப்பிடாமல் இருந்தால் மோசம் வந்து விடாது.

நாம் ஏற்கெனவே நம் உடலில் சேகரித்து வைத்திருக்கும் கல்லீரல் எனும் ஸ்டோரிலிருந்தும் உடல் சதைகளிலிருந்தும் ரத்தம் தனக்கு வேண்டியதைப் பல நாட்கள்வரை எடுத்துக் கொள்ளும். இருபத்தொரு நாள், நாற்பது நாள் அறுபது நாட்களென்று பட்டினியிருக்கிறார்களே! அவர்களுக்கெல்லாம் இம்மாதிரி தான் கல்லீரலிருந்தும் சதைகளிலிருந்தும் உடலுக்கு வேண்டிய உணவுச் சத்துக்கள் கிடைக்கின்றன. அதனால்தான் எடை குறைகிறார்கள். ஆனால் எப்பொழுதோ ஒரு வேளை அல்லது ஒரு நாள் பட்டினி இருப்பதால் அப்படி ஒன்றும் எடை குறைந்து விடாது.

இதனை அனுசரித்துத்தான் நமது பெரியோர்கள் பல விரதங்களை ஏற்படுத்தினார்கள். நாமோ அன்று மற்ற நாட்களைவிட விசேஷமாய் அதிகம் சாப்பிடுகின்றோம். வெறும் அன்னத்துடன் சாப்பிடுவதை விட்டு விரத நாட்களில் பொங்கல், வடை, பாயசமாக வெளுத்து வாங்குகின்றோம். இதனால் பலனும் அனர்த்தமாகப் போய் விடுகின்றது. எனவே, ஏதாவது சிறிது அசௌகரியம் என்றால் பட்டினி போடுங்கள். "லங்கணம் பரம ஔஷதம்" என்று பெரியோர்கள் சொல்வார்கள். அதனுடன் உட்டியாணாவும் செய்து வந்தால் அப்பரம ஔஷதத்தைவிட சஞ்சீவி ஔஷதமாகவே ஆகி என்றும் நோய் நொடி வராமல் ஆரோக்கியமாக வாழ்ந்து வரலாம். (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras



நாளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்

ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் நன்றாகத் தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள்.



ரெக்ஸோனு

கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

R.P. 100-50 TM

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

Regd. No. M. 4392

Registered as a newspaper in Ceylon

டால்டா வனஸ்பதி நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு முழுப் பிரயோஜனத்தைத் தருகிறது



சமையலுக்கு
எல்லாவற்றையும்
விடச் சிறந்தது
சக்திக்கு
எல்லாவற்றையும்
விடச் சிறந்தது
எப்பொழுதும் புதிதாக
சீல்செய்த
டின்களில்
கிடைக்கிறது

செலவுசெய்யும் பணத்திற்கு முழுப்பிரயோஜனத்தைத் தருவதும், ஒரேபோல சிறந்த குணமுடையதுமான சமையல்—கொழுப்பு டால்டா. எல்லாவித உணவின் சுவையையும் டால்டா பரிமளிக்கச் செய்கிறது. இன்றே டால்டா வாங்குங்கள்—காற்றுப்புகாத சீல் செய்த டின்னில் சுத்தமாகவும், புதிதாகவும், ஊட்டமளிப்பதாகவும் கிடைக்கிறது. மேலும் சிக்கனமானதும்கூட!



ருசிமிக்க அம்ரிதி தயாரிப்பது எப்படி?

இன்றே எழுதுங்கள் :

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

டால்டா

10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது

HVM. 186-59 TM